


தற்கால கட்டட நிர்மாணம்

கிணறுகள்.


காற்றுக்கு அடுத்தபடியாக, வாழ்க்கைக்கு இன்றியமையாதது ஜலம். அதன் பரிசுத்தம், அபரிமிதமான வினியோகம் இவைகளின் அவசியத்தைப் பற்றி வற்புறுத்துவது மிகையாகாது. விவசாயிகளும், கிராமத்து மக்களும் இதற்கு பெரும்பாலும் கிணறுகளையே நம்பியிருக்கிறார்கள். ஆதலால் இவைகள் சரியான முறையில் அமைக்கப்படாவிட்டால் சமூகத்திற்கே தீம்பாக முடியும். 'டைபாய்ட்' பரவுவதற்குப் பல சமயங்களில் அசுத்தமான கிணற்று நீரே காரணமாயிருக்கிறதென்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கிணற்று நீர் கெடுவதற்கு காரணங்கள் பல. கிராமங்களில் சாக்கடைகள், மற்றும் எருக்குழி முதலிய அசுத்தஸ்தலங்கள், கிணறுகளுக்கு அருகில் இருப்பது சகஜ சாதாரணம். அவைகளின் அசுத்தஜலம் கிணற்றுக்குள் கசிவதும், ஊற்றுக்கண்களில் கலந்துகொள்வதுமே அவற்றில் முக்கியமானவை.

சிமெண்ட் கான்கிரீட், பரிசுத்தம், நீடித்த உழைப்பு, ஊடுருவக்கூடாததனை, அற்ற தன்மை, முதலிய குணங்களை ஸ்வாபாவிகமாகக் கொண்டது. ஆகையால் அது ஒன்றே கிணறுகளின் நிர்மாணத்தில்—சுற்றுப்புறம், அடிமட்டம், கைப்பிடிச்சுவர், மேடை, சாக்கடை, முதலியவைகள் கட்டுவதற்கு—உரிய சாதனமாக பிரசித்தியம் அடைந்து வருகிறது.

இரண்டணா தபால் ஸ்டாம்புகளுடன் "கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா, 9, மவுண்ட் ரோட், தபால் பெட்டி 312, மதராஸ்," என்கிற விலாசத்துக்கு எழுதி, "கான்கிரீட் கிணறுகள்" என்னும் பிரசுரத்தின் பிரதி ஒன்றைப் பெறுங்கள்.

தி ஸிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்


அவள் காலேஜ் தோழிகள்:—
"இவளுக்கு என்ன அற்புதமான பற்கள்"
என்று வியந்தனர்
ஆனால் பல்வைத்தியர்:—
"நீ இப்பற்களை எல்லாம் இழக்கவேண்டியதுதான்"
என்றார்
உங்கள் பற்கள் இப்பொழுது எவ்வளவு ஒழுங்காகவும் அழகுடையதாகவும் இருந்தாலும் ஈறு வியாதி ஏற்பட்டுவிட்டால் அவைகளை இழக்கநேரிடும். பற்களை கவனிப்பது போலவே ஈறுகளையும் அவசியம் கவனிக்கவேண்டும். எஸ். ஆர். டூத்பேஸ்ட் உபயோகியுங்கள். ஈறுகளை உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கச்செய்ய பல்வைத்தியர்கள் பயன்படுத்தும் ஸோடியம் ரிஸினோலியேட் இதில் அடங்கியுள்ளது. மேலும் எஸ். ஆர். டூத்பேஸ்ட் பற்களை சுத்தமாகவும், வெண்மையாகவும், பளபளப்பாகவும் இருக்கச்செய்கிறது.
உங்கள் பற்களைக்காப்பாற்ற ஈறுகளை பாதுகாத்துக்கொள்ளுங்கள்
கிப்ஸ்
எஸ். ஆர். டூத்பேஸ்ட்
S.R.
FOR TEETH AND GUMS


டயபெப்ஸின்
ஆகாரம் சரியாக ஜீரணமாக டயஸ்டாஸ், பெப்ஸின் என்னும் இருவகைப் பொருள்கள் அத்யாவசியமானவை. இவைகள் இரண்டும் உயர்ந்த ரசாயன முறையில் சேர்ந்தது தான் டயபெப்ஸின். ஆகாரத்துக்குப் பின் ஒரு டீஸ்பூன் டயபெப்ஸின் உட்கொண்டால் ஜீரணச் செயல் தக்ஷணமே ஆரம்பித்து, பாக்கி ஜீரண வேலை வயிற்றுக்கு மிக எளிதாகிறது. உங்கள் ஆகாரத்தின் முழுப் போஷணையும் அடைய இதுவே சிறந்த மார்க்கம்.
யூனியன் டிரக், கல்கத்தா
ஏஜண்டுகள்: அப்பா அண்ட் கோ., மதராஸ்
மற்றும் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்
DIA-PEPSIN
UNION DRUG CO
UNION DRUG. CALCUTTA


வாழ்க்கையில் புதிய ஒளி
பண்டிட் டி. கோபாலாசார்லுவின்
ஜீவாம்ருதம்
சந்தோஷமும் ஆரோக்கியமும்
சிறப்பிக் குடும்பத்தின் அழகே அலாதியானதுதான்.
ஜீவாம்ருதம் தேக புஷ்டியையும் வீர்ய விருத்தியையும்
அளிப்பது. ஆண், பெண் இருபாலரும் சாப்பிடக்கூடியது. இது
ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட் மதராஸ் 17

டன்லப்

கார் டயர்கள்


அதிக

அனுபவத்திலிருந்தே

அதிக

உழைப்பு

ஸித்திக்கின்றது



இந்தியாவின் புகழ்



லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி


கேஸரி குடீரம் லிட்., மதராஸ்

ஒரிஸ்ஸா, நிஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாடு, முதலிய இடங்களுக்கு ஏஜெண்டுகள் :

சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்

பேர்ஹாம்பூர் - செகந்திராபாத்

பெஜவாடா - மதுரை



கர்ப்பச் சேதத்துக்குப்

பிறகும், பிரஸவத்துக்குப் பிறகும், நீடித்த ஜுரங்களுக்குப் பிறகும் தலை மயிர் அதிகமாகக் கொட்டுவதுண்டு. சாதாரண ஜுரங்களுக்குப் பிறகும் மயிர் உதிர்வதுண்டு. அதிர்ச்சி ஸஹித மான ஜுரமானாலும் மயிர் அபரி மிதமாகக் கொட்டும். சில சமயம் விடாமல் உதிர்ந்து கொண்டே யிருக்கும். எந்தக் காரணத்தால் மயிர் உதிர்ந்தபோதிலும், கேச வர்த்தினியைக் கொண்டு மயிர் உதிர்வதை நிறுத்துங்கள்.

உதிர்ந்த கூந்தலுக்குப் பதில் இளம் புதுக் கூந்தலைப் பெறுங்கள். கேசவர்த்தினியின் உதவியால் அற்ப கேசத்தை அபரிமித கேசமாக்குங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைப் பாதுகாப்பது, விருத்தி செய்வது, அழகு படுத்துவது

விலை அணா 14

(மேற் செலவு வேறு)

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்

தென் இந்திய ரஸாயனசாலை

ஆர். எஸ். புரம், கோயமுத்தூர்



மலர் 8
இதழ் 6

செப்டம்பர் 5

சர்வதாரி
ஆவணி 21

"அடக்கம் என்றால் என்ன?" என்று கேட்டால், "ஸ்ரீமதி இந்திரா நேரு" என்ற விடைதான் பளிச்சென்று கிடைக்கும்.

ஜவாஹர்லால்ஜியின் அருமைப் புதல்வியான ஸ்ரீமதி இந்திரா ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டதில்லை. சட்ட மறுப்புப் போராட்டத்திலும் கலந்து கொண்டதில்லை. தடியடி பட்டதில்லை. சிறைவாசம் செய்ததில்லை. பத்து வரி கொண்ட ஒரு சின்ன அறிக்கையைக் கூடப் பத்திரிகைகளுக்கு அனுப்பியதில்லை. இதை யெல்லாம்விட ஒரு மகத்தான தேசத் தொண்டை அவர் இப்போது முப்பது கோடி மக்களுக்கும் மௌனமாகச் செய்து கொண்டு வருகிறார்.



தேசத்தின் பொக்கிஷமாகவும் முப்பது கோடி மக்களின் கண்ணுக்குக் கண்ணாகவும் விளங்கி வரும் பண்டித ஜவாஹர்லால்ஜி இன்று எத்தனையோ தொல்லைகளுக்கு மத்தியிலும் ஓரளவு நிம்மதியாக இருக்க முடிகிறதென்றால் அதற்கு ஸ்ரீமதி இந்திராதான் காரணம். ஸ்ரீமதி இந்திரா தம்முடைய அருமைத் தந்தையின் சுகத்திலே கண்ணும் கருத்துமாக இருந்து அவரைப் பாதுகாத்து வருவதைக் காட்டிலும், தேசத்துக்கு அவர் செய்யக்கூடிய மகத்தான தொண்டு வேறு என்ன இருக்கிறது?

ஸ்ரீமதி இந்திரா வெளி நாடுகளிலே பல வருஷ காலம் கல்வி பயின்று பல பட்டங்கள் பெற்றவர். சில வருஷங்களுக்கு முன்பு அவர் பிரோஸ் காந்தி என்ற உத்தமரை மணந்து கொண்டார். அவருக்கு இப்போது இரண்டு குழந்தைகள் இருக்கின்றன.

ஸ்ரீமதி இந்திரா, சமீபத்தில் தம்முடைய தந்தையாருடன் சென்னைக்கு வந்திருந்த போது சென்னை மாதர் சங்கம் அவரை வரவேற்றுக் கௌரவித்தது. அப்போது எடுக்கப்பட்ட படமே நம்முடைய இந்த இதழ் அட்டைப் படத்தை அலங்கரிக்கிறது.

நீண்டு வளர்ந்த அந்தக் கூர்மையான மூக்கையும், பரந்த விசாலமான அந்தக் கண்களையும், கம்பீரம் ததும்பும் அந்த முகத்தையும் பார்க்கும்போது, நாம் இந்திரா நேருவை மாத்திரமா பார்க்கிறோம்? தியாகபுருஷரான மோதிலால்ஜியையும் வீராங்கனையான கமலா நேருவையும் மனிதகுல மாணிக்கமாகிய ஜவாஹர்லால்ஜியையும் பார்க்கிறோம். ஒரு பெரும் தியாக குடும்பத்தின் சரித்திரத்தையே அந்த முகத்தில் காண்கிறோம். வாழ்க இந்திரா! வாழ்க அவர் தொண்டு!

—போட்டோ: ஆர். என். நாகராஜ ராவ்.

கல்கி

மலர் 8 | தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 6

என்ன சேதி?

தொழிலாளர் சங்க நிலைமை

பொல்லரசாயினும் தன்னரசுக்கு ஈடு ஆகாது. ஜனங்களுக்காக ஜனங்களால் ஜனங்களுடைய சர்க்கார் ஏற்படுவதுதான் கலப்பற்ற ஜனநாயகம் ஆகும். அதுபோலவே தொழிலாளர் சங்கங்கள், தொழிலாளர்களுக்காகத் தொழிலாளர்களால் நடத்தப்பட வேண்டும். பிரிட்டனிலுள்ள தொழிலாளர் சங்கங்களில் தலைவர் முதல் சகலரும் தொழிலாளர்கள்தான். ஆனால் இந்தியாவிலோ தொழிலாளர் அல்லாதவர்களே தொழிலாளர் சங்கங்களில் முக்கிய ஸ்தானம் வகிக்கிறார்கள். அவர்கள் "வேலை நிறுத்தம் ஒன்றுதான் தொழிலாளர்களின் அருமருந்து" என்று இடைவிடாது உபதேசம் செய்து தொழிலாளர்களின் நிரந்தர நலனுக்கும் தேசத்தின் நலனுக்கும் மிகுந்த குந்தகம் விளைவித்து வருகிறார்கள்.

இந்த உண்மையையெல்லாம் இந்திய சர்க்கார் தொழில் மந்திரி பார்லிமெண்டில் மிகவும் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார். ஏழைத் தொழிலாளர்களின் நன்மைக்காக சர்க்கார் என்ன செய்தார்கள் என்று கண் மூடித்தனமாகக் கேட்கும் நபர்கள், சென்ற வாரம் இந்தியா பார்லிமெண்டில் நிறைவேறியுள்ள தொழிற்சாலைகள் மசோதாவின் ஷரத்துக்களைக் கவனிக்க வேண்டியது அவசியமாகும். தொழிலாளர்களின் சம்பள உயர்வு விஷயமாகவும், லாபத்தில் தொழிலாளர்களும் பங்கு பெறும் விஷயமாகவும் ஏற்கெனவே சர்க்கார் பரிசீலனை செய்து வருகிறார்கள். சென்ற வாரம் நிறைவேறியுள்ள மேற்படி மசோதா தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களின் ஆரோக்கிய வசதிகளுக்கு வழிவகை செய்வதாக இருக்கிறது. தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வைக் காட்டிலும் ஆரோக்கிய வசதிகள் முக்கியமானவை என்பதில் சந்தேகம் இருக்க இடமில்லை.

தேசிய சர்க்காரை எதிர்ப்பதா?

அந்த மசோதாவை யொட்டிப் பேசிய தொழில் மந்திரி ஸ்ரீ ஜகஜ்ஜீவன் ராம் கூடிய சீக்கிரம் இந்திய சர்க்கார் தொழிலாளர்களின் உரிமைகள் அடங்கிய ஒரு சாஸனத்தையே தயாரிக்கும் என்று உறுதி கூறியிருக்கிறார். எனவே, மேற்படி உறுதி மொழியில் நம்பிக்கை வைத்து தொழிலாளர்கள் சர்க்காருடன் ஒத்துழைப்பார்களாக.

தொழிலாளர்களின் க்ஷேமத்தில் தொழிலாளரல்லாத தலைவர்களைக் காட்டிலும் தியாக புருஷர்களான தலைவர்கள் அடங்கிய சர்க்கார் அதிகச் சிரத்தை எடுத்துக் கொள்ளுவார்கள் என்பதை அவர்கள் அறிய வேண்டும். இச் சந்தர்ப்பத்தில், கல்கத்தாவுக்கு அருகில் கூடிய அகில இந்திய ரயில்வேத் தொழிலாளர் ஐக்கிய சங்கத்தின் வருஷாந்திரக் கூட்டத்தில் ஸ்ரீ ஜயப்பிரகாச நாராயண் கூறியுள்ள புத்திமதியையும் தொழிலாளர்கள் கவனிக்க வேண்டியது அவசியமாகும்.

"நம் தேசத்தின் எதிர்காலம் ரயில்வே தொழிலாளர்கள் கையில் இருக்கிறது. எனவே, அவர்கள் தேசத்தைக் கைவிட மாட்டார்கள் என்றே நம்புகிறேன். 'பொது வேலை நிறுத்தம் செய்யுங்கள்' என்ற கூற்றுக்குச் செவி சாய்த்து விடாதீர்கள். இந்தச் சமயத்தில் பொது வேலை நிறுத்தம் செய்வது தேசத்துக்கு ஆபத்தாக முடியும் என்பதுடன், அது உங்களுடைய சக்தியையும் ஒற்றுமையையும் சின்னாபின்னமாக்கி விடும். தேசிய சர்க்காரை எதிர்த்து வேலைநிறுத்தம் செய்வதால் தொழிலாளர்களுக்கு

எவ்வித லாபமும் ஏற்பட முடியாது" என்று ஸ்ரீ ஜயப்பிரகாச நாராயண் கூறியிருக்கிறார்.

இரண்டாவது படி தாண்டினர்!

சில தினங்களுக்கு முன் இலங்கைப் பார்லிமெண்டில் நிறைவேறிய பிரஜா உரிமை மசோதாவைப் பற்றி சென்ற வாரம் எழுதியிருக்கிறோம். இலங்கைப் பார்லிமெண்டில் அந்த மசோதாவை எதிர்த்துப் பேசிய ஓர் அங்கத்தினர், இந்தியர்களுக்கு விரோதமாக இலங்கை சர்க்கார் கைக்கொள்ள விருக்கும் பிற்போக்கான முறைகளில் முதல்படி தாண்டியாகி விட்டது என்று கூறியதைக் குறிப்பிட்டு, இலங்கை சர்க்கார் இதைப் போல் இன்னும் எத்தனை படிகளைத் தாண்டப் போகிறார்களோ என்றும் கேட்டிருக்கிறோம். அந்தக் கேள்விக்கு இலங்கை சர்க்கார் சிறிதும் தாமதமின்றிப் பதில் அளித்து விட்டார்கள்!

சென்ற வாரம் அங்கு குடியேற்றக் கட்டுப்பாடு மசோதா என்ற மற்றொரு மசோதா நிறைவேறியிருக்கிறது. அந்த மசோதாவை எதிர்த்துப் பேசிய அங்கத்தினர்கள், யூதர்கள்மீது ஹிட்லர் பாணம் தொடுத்தது போல் இந்தியர்கள் மீது இலங்கை சர்க்கார் பாணம் தொடுக்க முற்பட்டிருக்கிறார்கள் என்றும், இந்தியர்களை விரட்ட முயற்சிக்கும் தென்னாப்பிரிக்கா சர்க்காருக்கும் இலங்கை சர்க்காருக்கும் அதிக வேற்றுமை இல்லையென்றும் குறிப்பிட்டனர்.


ஒரு தேசத்தின் செல்வத்தைச் சுரண்டுவதற்காகவோ அல்லது அரசியல் நோக்கம் கொண்டோ அன்னியர்கள் வந்து குடியேறுவதற்கும் ஏழைத் தொழிலாளர்களான இந்தியர்கள் இலங்கையில் குடியேறுவதற்கும் எவ்வளவோ வேற்றுமை உண்டு. தனக்கு இன்னல் இழைத்தவன் மீது வஞ்சம் தீர்க்க முயல்வது சாதாரண மனிதனின் சுபாவம். தனக்குப் பேருதவி செய்தவன் மீது வஞ்சம் தீர்ப்பவன் உலகில் உண்டா? ஆனால் இலங்கை சர்க்கார் நிறைவேற்றியுள்ள குடியேற்றக் கட்டுப்பாடு மசோதா அத்தகையதாகவே இருக்கிறது! எவ்வித பாவமும் அறியாதவர்களை, இலங்கையின் சுபிட்சத்துக்காக உழைத்தவர்களை ஒன்று இலங்கையிலிருந்து விரட்டிவிட வேண்டும், அல்லது அவர்கள் இலங்கையின் அடிமைத் தொழிலாளர்களாகக் காலந்தள்ளி வரவேண்டும் என்ற நோக்கத்துடனேயே மேற்படி மசோதா தயாரிக்கப் பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக இந்தியா — இலங்கை சமரசப் பேச்சு வார்த்தைகள் இன்னும் ஒரு முடிவுக்கு வராதிருக்கையில் இலங்கை சர்க்கார் அங்குள்ள இந்தியர்களுக்கு அடிமேல் அடி கொடுக்கத் துணிந்தது ஆச்சரியமாக இருக்கிறது. இலங்கையில் நிறைவேறியுள்ள சட்டங்களின் விளைவாக அங்குள்ள இந்தியர்களுக்குத் தற்காலிகமாகக் கஷ்டம் நேரிடுமெனினும், அவர்களுக்குப் பரிகாரம் அளிக்க இந்திய சர்க்கார் அதி சீக்கிரத்தில் முன் வருவார்கள் என்பது நிச்சயம்.

சனியன் விட்டது!

சென்ற பல மாதங்களாக பரோடா மகாராஜாவைப் பிடித்திருந்த சனியன் இப்போது விட்டிருப்பதைக் குறித்து மகிழ்ச்சி அடைகிறோம். இந்திய அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்காரம் செய்ய வேண்டுமென்று மன்னர்கள் மண்டலம் போட்டிருந்த முட்டுக் கட்டையை உடைத்தெறிந்தும், எவ்விதத் தகராறுமின்றி முதல் கோஷ்டியில் இந்தியாவுடன் ஐக்கியம் அடைந்தும் தமக்குப் புகழைத் தேடிக்கொண்ட பரோடா மகாராஜாவைத் திடீரென்று சனியன் பிடித்துக் கொண்டது. அதிலிருந்து அவர் புத்தி தடுமாறி பல காரியங்களைச் செய்து வந்தார். மனைவி மக்களை மாத்திரமின்றி, சமஸ்தானப் பிரஜைகளையும் கைவிட்டு விட்டு அன்னிய நாடுகளுக்குச் சென்றார். களியாட்டங்களிலும் குதிரைப் பந்தயங்களிலும் ஈடுபட்டார். அவருடைய கையில் கஜானா பணம் தண்ணீர் பட்ட பாடாக இருந்தது! திவானை நியமிக்கும் விஷயத்தில் இந்திய சர்க்காரின் யோசனையைத் திரஸ்கரித்தார். ஆனால், அது பலிக்கவில்லை.

இறுதியில் நாம் சிறிதும் விரும்பாத, ஆனால் ஜனங்களின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரரான டாக்டர் ஜீவராஜ் மேத்தாவையே திவானாக நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவருக்கு ஏற்பட்டது. டாக்டர் மேத்தா திவானாக வந்தபின் மேற்படி மகாராஜாவின் திருவிளையாடல்கள் எல்லாம் அம்பலமாயின.

இருந்தாலும் முடி துறக்கும்படி நேருவதற்கு முன், மகாராஜாவின் மதிமயக்கம் தெளிந்துவிட்டது. அவர் சர்தார் படேலின் ஆலோசனைக் கிணங்க விடுத்துள்ள பிரகடனத்தில் எவ்வித நிபந்தனையுமின்றி பரோடா ஜனங்களுக்குப் பூரண பொறுப்பாட்சி வழங்குவதாக வாக்களித்து, அதை நிறைவேற்றுவதற்குற்ற முறைகளையும் அறிவித்துள்ளார். வெள்ளம் தலைக்கு மேல் போகுமுன் தன்னைக் காப்பாற்றிக் கொண்ட பரோடா மகாராஜாவைச் சகலரும் பாராட்டுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை!



அகவிலை அளவில்லாமல் ஏறிக்கொண்டே போகும் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்க அர்த்த சாஸ்திர பண்டிதர்களும் தொழில் நிபுணர்களும் ஆலோசனை செய்து வருகிறார்கள்.

கண்ணீர் நிற்க வேண்டும் கஷ்டம் தீர வேண்டும்

"பல பல வருஷங்களுக்கு முன் நாம் விதியுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டோம். இந்தியா சுதந்திரம் பெற்றதுடன் அந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதி நிறைவேறி விட்டது. மற்றொரு பகுதி நிறைவேற வேண்டும். அது நிறைவேறினால்தான் நாம் செய்து கொண்டுள்ள பிரதிக்ஞை பூர்த்தியாகும்.

"இந்தியாவுக்குத் தொண்டு செய்வது என்பது இந்தியாவிலுள்ள கோடிக் கணக்கான ஜனங்களுக்குத் தொண்டு செய்வதுதான். இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான ஜனங்களின் வறுமை, அறியாமை, பிணி, ஏற்றத் தாழ்வு முதலியவற்றை ஒழித்து வாழ்க்கையில் முன்னேற அவர்களுக்குச் சம சந்தர்ப்பம் கிடைக்கும்படி செய்ய வேண்டும்.

"சுதந்திரம் பெற்றதுடன் நமது கடமையும் தொண்டும் முடிந்து விடவில்லை. பாரத நாட்டு மக்களின் கண்ணீர் நிற்கும் வரையிலும் கஷ்டங்கள் தீரும் வரையிலும் நமது தொண்டு முடிவு பெறாது."

இந்தியா சுதந்திரம் பெற்றபின் பாரதத் தலைப் புதல்வரான பண்டித ஜவாஹர்லால் நேரு மேற்கூறிய விதம் நைந்து உருகினார்.

பாரத தேசம் சுதந்திரம் பெற்ற முதல் வருஷத்தில் நமது தலைவர்கள் எத்தனையோ ஆக்க வேலைகளை நிறைவேற்றினர்; அழிவு வேலைகளைத் தடுத்தனர்; பல கஷ்டங்கள் நேராமல் தவிர்த்தனர்; நேர்ந்த மகத்தான கஷ்டங்களை நிலைகுலையாமல் நின்று சமாளித்தனர்.

பாகிஸ்தானில் மூண்ட கொடிய வகுப்பு வெறி பாரத நாடெங்கும் பரவிவிடாமல் பாதுகாத்தனர்.

ஒரு சில நாட்களில் பிரம்மாண்டமான ஒரு நகரத்தை நிர்மாணிப்பதற் கொப்ப அரைக் கோடிக்கு மேற்பட்ட அகதிகள் இடம்விட்டுப் பெயர்ந்து புது இடத்துக்கு வந்து புது வாழ்வு நடத்த வகை செய்தனர்.

ஆசிய நாடுகள் உறவு மகாநாட்டைக் கூட்டி ஆசியாவின் நன்மதிப்பைப் பெற்றதுடன், கேட்பாரற்ற நிர்க்கதியாக இருந்த இந்தோனேஷியாவின் வழக்கை உலக மகாசபையில் முறையிட்டு அதற்கு நீதி கிடைக்க அரும்பாடு பட்டனர்.

சிதறிக் கிடந்த நூற்றுக் கணக்கான சமஸ்தானங்களை ஒரே குடையின் கீழ் ஐக்கியப் படுத்தினர்.

இந்தியாவில் இன்று வாழும் முப்பது கோடி மக்களின் வாழ்வையும், இனி வாழப்போகும் கோடானுகோடி மக்களின் வாழ்வையும் நிர்ணயிக்கும், இந்திய சுதந்திரமாகிய மகோன்னத மாளிகைக்கு நிரந்தரமான அஸ்திவாரத்தை அமைக்கும் அரசியல் திட்டத்தைத் தயாரித்தனர்.

விமான, டெலிபோன் உற்பத்தித் தொழிற்சாலைகளை ஸ்தாபித்தனர். மின்சார - ரசாயன ஆராய்ச்சிக் கூடத்தை ஆரம்பித்தனர்.

* * *

சுதந்திர இந்தியா ஜனித்து இரண்டாவது வருஷம் ஆரம்பமாகியிருக்கிறது. இந்த வருஷத்திலும் இந்தியா எத்தனையோ மகத்தான பிரச்னைகளைச் சமாளித்தாக வேண்டும். சென்ற வருஷத்தில் தீராமல் பாக்கியிருக்கும் பிரச்னைகளுடன், இனி வரப்போகும் பிரச்னைகளையும் தீர்க்க வேண்டும்.

இவற்றைத் தவிர திடீரென்று ஏற்படும் கஷ்டங்கள் வேறு இருக்கின்றன.

உதாரணமாக பர்மா, மலாயா முதலிய நாடுகளில் ஏற்பட்டுள்ள கம்யூனிஸ்டு கலகங்களைக் கவனியுங்கள். மேற்படி கலகங்களில் அந்த நாடுகளிலுள்ள இந்தியர்களுக்குக் கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டிருப்பது ஒரு புறமிருக்க, பர்மாவில் மூண்டுள்ள கலகத்தினால் இந்தியாவிலுள்ளவர்களும் இன்னல்களுக்கு இலக்காகும்படி நேர்ந்திருக்கிறது. மேற்படி கலகத்தினால், அங்கிருந்து இந்தியாவுக்கு ஏற்றுமதியாகும் அரிசி தடுக்கப் பட்டுவிட்டது.

ஏற்கெனவே செய்து கொண்டுள்ள ஏற்பாட்டின்படி பர்மா இவ்வருஷம் இந்தியாவுக்குப் பதினைந்து லட்சம் டன் அரிசி ஏற்றுமதி செய்ய வேண்டும். அங்கு ஏற்பட்டுள்ள கலகம் சமீபத்தில் தீரக் கூடியது என்று தோன்றவில்லை. மேற்படி கலகம் நீடித்து நடக்குமாயின் பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு அரிசி மாத்திரமல்ல, மற்றத் தானியங்களின் ஏற்றுமதியும் தடைப்பட்டு விடும்.

அவ்வாறு தடைப்படுமாயின், தற்போது கொடுக்கப்பட்டு வரும் அரிசி ரேஷன் அளவு இன்னும் குறைந்தாலும் குறையலாம்.

விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்ட இந்தியா உணவு உற்பத்திப் பெருக்கத்தில் அதிக சிரத்தை எடுத்துக் கொள்ளாததும், உணவுப் பொருள்களுக்குக் கூட அன்னிய நாடுகளை எதிர்பார்ப்பதும் எவ்வளவு ஆபத்தானது என்பதற்கு பர்மா கலகமானது ஒரு படிப்பினையாக அமைந்திருக்கிறது.

* * *

மேற்றும் பர்மா கலகத்திலிருந்து இந்தியா தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன.

பர்மா கலகம் ஏதோ தற்காலிகமான உள்நாட்டுக் கலகம் என்று சொல்லி விட முடியாது. அங்கு இப்போது மூண்டுள்ள கலகத்தினால் பர்மா சர்க்கார் கதிகலங்கிப் போயிருக்கிறார்கள். சர்க்கார் துருப்புகளில் கூட சிலர் கலகக்காரர்களிடம் அனுதாபம் காட்டுவதாகத் தெரிகிறது!

பர்மாவின் தலைநகரான ரங்கூனுக்கு ஆபத்து ஏற்படாமல் இருப்பதற்காக பர்மா சர்க்கார் பலமான இராணுவ முஸ்தீபுகளைச் செய்திருக்கிறார்களெனில், அங்கு நிலைமை எவ்வளவு தூரம் கட்டுக்கு அடங்காமல் போயிருக்கிறது என்பதை ஊகித்துக் கொள்ளலாம்.

பர்மாவின் இணையற்ற தலைவர் திலகமான அவுங்ஸான் கொலையுண்டார். அவரது கொலைக்குக் காரணமாக இருந்தவரும் பர்மா மாஜி பிரதம மந்திரியுமான யூ ஸா மரண தண்டனைக்குள்ளாகி மாண்டார்.

சுதந்திர பர்மாவின் சங்கடங்கள் அத்துடன் தீர்ந்து அங்கு அமைதி ஏற்படலாம் என்று உலகம் நினைத்தது. ஆனால் இப்போது அங்கு ஏற்பட்டுள்ள கலகமோ வெனில், பர்மாவில் தீராத கட்சிப் பகைக்கும் முடிவற்ற உள்நாட்டுக் கலகத்துக்கும் விதை விதைப்பதாக இருக்கிறது.

பிரிட்டிஷார் ஆட்சி புரியும் தேசங்களிலெல்லாம் அமைதி தாண்டவமாடி வருவதாயும், இந்தியா, பர்மா முதலிய தேசங்களிலிருந்து பிரிட்டிஷார் வெளியேறி விட்டால், ஜனங்களிடையே சண்டையும் பூசலும் கலகமும் ஏற்பட்டு உதிர வெள்ளம் ஓடும் என்றும் சர்ச்சில் கோஷ்டியினர் பிரசாரம் செய்து வந்தார்கள். ஆனால் அந்தகைய துஷ்பிரசாரகர்கள் தங்களுடைய "தீர்க்க தரிசன"த்தைக் கண்டு குதூகலம் அடைவதற்குற்றவாறு பர்மாவில் காரியங்கள் நடைபெற்று வருவது மிகவும் வருந்தத் தக்கது.

இந்தியாவில் நிலைமை அவ்வளவு மோசமாக இல்லாவிடினும், எடுத்ததற்கெல்லாம் சர்க்காரை எதிர்ப்பவர்களும் உணவு உற்பத்திக்கும் மற்ற சாதனங்களின் உற்பத்திக்கும் இடையூறு விளைவிப்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். அத்தகையோர் மீது சர்க்கார் நடவடிக்கைகள் எடுத்தால், ஜனங்களின் உரிமை பறி போய் விட்டதென்று அவர்கள் கூச்சல் போடுகிறார்கள்.

சுதந்திர சர்க்காரின் கீழ் ஜனங்களுக்கு நியாயமான எல்லா உரிமைகளும் உண்டு. ஆனால் ஜனங்களுக்குக் கஷ்ட நஷ்டத்தை விளைவிக்கக் கூடிய காரியங்களைச் செய்ய எவருக்கும் உரிமை இல்லை. ஜனங்களுக்காகப் பாடுபடும் சுதந்திர சர்க்காருக்குத் துரோகம் செய்ய யாருக்கும் உரிமை இல்லை. சுதந்திர சர்க்காருக்கு இடையூறு செய்வது கோடிக் கணக்கான ஜனங்களுக்கு இடையூறு செய்வதாகுமாதலால், அத்தகையோர் மீது சர்க்கார் கடுமையான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு மேற்படி விஷமங்களை முளையிலேயே கிள்ளி எறியக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

* * *

இந்த வருஷத்தில் அடுத்தபடியாக சர்க்கார் தீர்க்கவேண்டிய மகத்தான பிரச்னை பணவீக்கம் ஆகும்.

பணவீக்கம் என்பது எல்லையின்றி கரன்ஸி நோட்டுகள் செலாவணியில் இருப்பதையே குறிக்கிறது. அதாவது ஜனங்களிடம் பணப் புழக்கம் அதிகமாகவும் கடைகளில் சாமான்கள்

குறைவாகவும் இருப்பதால் பணத்தின் மதிப்பு குறைந்து, விலைவாசிகள் எல்லை மீறி உயர்ந்து விடுகின்றன.

அகவிலைகள் குறைவாக இருக்கும் போதே கஷ்டப்படும் ஏழைகள் விலைவாசிகள் அதிகமாகி விட்டால் என்ன செய்வார்கள்!

அவர்களுடைய கஷ்டத்தைத் தீர்க்கும் விஷயமாக சர்க்காருடன் ஒத்துழைப்பதை விடுத்து பலரும் சுயநல நோக்கம் கொண்டு மேற்படி கஷ்டத்தைச் சுட்டிக்காட்டி, ஏழை ஜனங்களுக்காகவும் தாய் நாட்டுக்காகவும் பல பல வருஷங்கள் தொண்டு புரிந்து தியாகம் செய்த தலைவர்களைக் காட்டிலும் தங்களுக்கு ஜனங்கள்மீது இரக்கமும் அனுதாபமும் பொங்கி வழிவது போல் பாசாங்கு செய்கிறார்கள்!

தற்போது இந்தியாவில் பொருளாதாரக் கஷ்டங்களுக் கெல்லாம் மூல காரணமாக இருக்கும் பணவீக்கம் சுதந்திர சர்க்கார் ஏற்பட்டபின் உண்டானதல்ல. இந்தியாவில் பிரிட்டிஷாரின் ஆட்சிக்காலத்தில் உருவாகிய பல பிரச்னைகளில் பணவீக்கமும் ஒன்று.

அதாவது 1939-ம் வருஷம் நடமாட்டத்தில் இருந்து வந்த சுமார் 179 கோடி ரூபாய் கரன்ஸி நோட்டுகள் 1946-ம் வருஷத்தில் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் போய்விட்டன! அவ்வாறு காகித மயமான நாணயச் செலாவணியினால், விலைவாசிகள் குறையவும் வழியிராமற் போயிற்று.

எனவே, பிரிட்டிஷார் இந்தியாவிலிருந்து வெளியேறியபோது விட்டுச் சென்றுள்ள மேற்படி கரன்ஸி மலையைத் தகர்ப்பதில் இப்போது இந்திய சர்க்கார் முனைந்திருக்கிறார்கள்! அதற்காகப் பல்வேறு நிபுணர்கள் அடங்கிய மகாநாடுகளைக் கூட்டி, அவர்களுடைய ஆலோசனைகளையும் கேட்டு வருகிறார்கள். அவற்றின் பலனாக இந்திய சர்க்கார் கூடிய சீக்கிரம் ஒரு முடிவுக்கு வந்து பணவீக்கத்தை ஒழிப்பதற்கேற்ற முறைகளைக் கைக்கொள்ளுவார்கள் என்பது நிச்சயம்.

பணவீக்கம் குறைந்தால் விலைவாசிகள் குறையும். விலைவாசிகள் குறைந்தால் ஏழைகளுக்கு அதிக வசதிகள் ஏற்படும்.

இவ்வாறாக, ஏழை ஜனங்களின் கண்ணீர் நிற்கவும் கஷ்டங்கள் தீரவும் பெருமுயற்சி செய்துவரும் பொதுஜன சர்க்காரைப் பூரணமாக ஆதரித்து வர வேண்டிய கடமை ஒவ்வொரு இந்தியரையும் சார்ந்ததல்லவா?

* * *

இந்திய சர்க்கார் ஹைதராபாத், காஷ்மீரப் பிரச்னைகளையும் இந்த வருஷம் சமாளித்தாக வேண்டும்.

காஷ்மீரப் போரில் பாகிஸ்தான் தன்னுடைய முழு பலத்தையும் காட்ட முனைந்திருப்பதுடன், இந்திய சர்க்காரைத் திணற வைப்பதற்காக இரண்டாவது போர் முனையையும் ஆரம்பிக்கப் போவதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

பாகிஸ்தானிலிருந்து காஷ்மீரப் போர் முனைக்குச் சரமாரியாகப் போர்த் தளவாடங்கள் வந்து கொண்டிருக்கின்றன என்று இந்திய சர்க்கார் அறிக்கைகளும் குறிப்பிடுகின்றன.

எனவே காஷ்மீர யுத்தம் கூடிய சீக்கிரம் மிகவும் உக்ரமான கட்டத்தை அடையலாம்.

பிரிட்டனின் எதிர்கால வாழ்வுக்கு ஆபத்து நேர்ந்தபோது, அதாவது சென்ற மகாயுத்தத்தின்போது பிரிட்டனிலுள்ள சகல கட்சியினரும் தங்களுடைய அபிப்பிராய பேதங்களையும் சுயநலன்களையும் உதறித் தள்ளிவிட்டு ஒன்றுபட்டார்கள்.

இந்தியாவின் எதிர்கால வாழ்வும் தற்போதைய பிரச்னைகள் வெற்றிகரமாகத் தீருவதையே பொறுத்திருக்கிறது. எனவே பிரிட்டனின் யுத்தகால உதாரணத்தைப் பின்பற்றி இந்தியாவிலுள்ள பல்வேறு கட்சியினரும் தங்களுடைய அபிப்பிராய பேதங்களையும் சுய நலன்களையும் உதறித் தள்ளிவிட்டு, பாரத நாட்டின் எதிர்காலம் மிகுந்த பிரகாசமாகவும் பொலிவுடனும் விளங்கச் சுதந்திர சர்க்காருக்கு உதவி புரிய வேண்டும்.



பாரதியாரின் கவிதைகளைப் பெரிதும் அநுபவித்த ரஸிகர் ஒருவர் ஒருநாள் வெண்ணிலவில் உலாவிக்கொண்டிருந்தார். சந்திர கிரணங்கள் அவருடைய உள்ளத்தைப் பரவசப்படுத்தின. "அடடா! இந்த நிலாக் கிரணங்களின் மோகன சக்திதான் என்ன? இந்தக் கிரணங்களுக்கு உருவம் உண்டா? உயிர் உண்டா? அவற்றைத் தொட முடியுமா? பிடித்து வைத்துக்கொள்ள முடியுமா? ஆயினும் இத்தகைய உருவமற்ற நிலாக் கிரணங்களில் இப்படி நம்மை ஆனந்த பரவசப்படுத்தும் சக்தி இருக்கிறதே! பார்க்கப்போனால், பாரதியாருடைய அமுதத் தமிழ்க் கவிகளைப் படிக்கும்போது உண்டாகும் இன்பம் அல்லவா இந்த வெண்ணிலாவை அநுபவிக்கும்போதும் உண்டாகிறது? ஒருவேளை இந்தச் சந்திரன் தமிழ் நாட்டில் தமிழனாய்ப் பிறந்திருந்தானோ? பிறந்து பாரதியாரின் கவி அமுதைப் பருகினானோ? அதனாலேயே சந்திர கிரணங்களுக்கு இவ்வளவு இனிமை ஏற்பட்டிருக்குமோ?" என்றெல்லாம் அந்த ரஸிகருடைய உள்ளம் சிந்தனை செய்தது. சந்திரனைப் பார்த்துக் கேட்கிறார்:—

"கவியரசர் பாரதியின் கவிதை இன்பம்— உந்தன்
கதிரொளியில் காண்பதென்ன வெண்ணிலாவே—இந்தப்
புவியில் நீயும் தமிழன் எனப் பிறந்ததுண்டோ—அவர்
புதுமைக் கவி மது வருந்தி மகிழ்ந்ததுண்டோ?"

இந்த விதமாக நம் காலத்துத் தமிழரின் வாழ்க்கைக்கே ஒரு புதிய இன்பத்தை அளித்தவர் பாரதியார். பாடிய வாய் தேனூறும் பாடல்கள் எத்தனையோ அவர் பாடினார். கேட்கும் செவிகளில் அமுதமெனப் பாயும் கவிகள் எத்தனையோ அவர் புனைந்தளித்தார். அந்த மகா கவியின் புனிதத் திருநாள் செப்டம்பர் 11உ தமிழ் நாடெங்கும் கொண்டாடப் பெறுகிறது.

பாரதியாரின் கவிகளை அநுபவித்த தமிழ் மக்களின் உள்ளப் பூரிப்பின் சின்னமாக எட்டயபுரத்தில் பாரதியார் ஞாபகார்த்த மண்டபம் கம்பீரமாக எழுந்து நிற்கிறது. அந்த மண்டபத்திலும் வரும் செப்டம்பர் 11உ பாரதி விழா கொண்டாடப்பெறும். விழாவுக்குத் தலைமை வகிக்கப்போகிறவர் பாரதியாரின் முதற் சீடரான **பேராசிரியர் வ. ரா.** அவர்கள். சென்ற முப்பது வருஷமாக அல்லும் பகலும் அநவரதமும் பாரதியாரின் பெருமையைப் பறை யறைந்து முரசு கொட்டிப் பரப்பி வருகிறவர். இத்தகைய பாரதியாருடைய பரம பக்தரின் தலைமையில் இவ்வருஷம் விழாச் சிறப்பாக

நடைபெறும் என்பதில் ஐயமில்லை. எட்டயபுரத்திலும் சுற்றுப் பக்கங்களிலும் உள்ள பாரதி அன்பர்கள் பெருந் திரளாக வந்திருந்து இவ்வருஷத்து விழாவை நடத்திக் கொடுக்க வேண்டுமெனக் கோருகிறேன்.

எட்டயபுரத்தில் பாரதி விழாவை ஆரம்பித்து வைக்குமாறு தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ காமராஜ் நாடார் அவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அவர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



முதற் சுடர்

தந்தவர். நவ யுகத் தமிழ் எழுத்தாளர் பலரைச் சிருஷ்டி செய்தவர். ஸ்ரீ வ. ரா அவர்களின் முப்பது வருஷத் தமிழ்ப் பணியைத் தமிழர்கள் பாராட்டுவதற்கு அறிகுறியாக மேற்படி வைபவத்தின்போது அவர்களுக்கு நிதி முடிப்பு அளிக்கப்படும். இந்தச் சிறந்த இலக்கிய கைங்கரியத்துக்கு உங்களுடைய பங்கை அனுப்பி வைக்க இன்னும் பத்து தினங்கள்தான் பாக்கியிருக்கின்றன என்பதை ஞாபகப் படுத்துகிறேன்.

"பாரதியார் உயிரோடிருந்தபோது அவருக்கு ஒன்றும் செய்யாமல் போய்விட்டோமே!" என்று அடிக்கடி பலர் புலம்புவதைக் கேட்டு வருகிறோம். இத்தகையவர்களை உத்தேசித்து "சென்றதினி மீளாது மூடரே!" என்று பாரதியாரும் பாடி வைத்திருக்கிறார். காலஞ் சென்ற கவிஞருக்கு அவர் உயிர் வாழ்ந்தபோது ஒன்றும் செய்யவில்லையே என்று புலம்புவதினால் பயன் ஒன்றுமில்லை. 'பாரதியாருக்கு ஒன்றும் செய்யவில்லையே', என்ற நம் மனக் குறையைத் தீர்த்துக் கொள்ள, அவருடைய முதற் சீடருக்கு இப்போது நல்ல முறையில் மணிவிழா நடத்தி மரியாதை செய்வதே சிறந்த உபாயம் அல்லவா?

சங்கமணி டி. கே. சிதம்பரநாத முதலியார், திருப்புகழ் மணி ஸ்ரீ டி. எம். கிருஷ்ணசாமி ஐயர், மந்திரி ஸ்ரீ கே. மாதவ மேனன், ஸ்ரீமதி கே. குட்டியம்மாளு அம்மாள், ஸ்ரீ கே. பாலசுப்பிரமணிய ஐயர், "தினசரி" ஆசிரியர் ஸ்ரீ. டி. எஸ். சொக்கலிங்கம், "இண்டியன் பார்லிமெண்ட்" ஆசிரியர் ஸ்ரீ கே. சீனிவாசன் ஆகியவர்கள் விழாவுக்கு விஜயம் செய்வார்கள்.

வெளியூர் அன்பர்களுக்கு அழைப்பு அனுப்புவது இந்த வருஷத்திய கால நிலை காரணமாகச் சாத்தியமில்லை யென்பதை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். வருகிறவர்களுக்கு உணவு வசதி செய்து கொடுக்கத் திருநெல்வேலி ஜில்லாவின் உணவுப் பொருள் நிலைமை இடங் கொடுக்கவில்லை. சொந்தப் பொறுப்பில் ஜாகை — உணவு வசதி செய்து கொள்ளக் கூடிய நண்பர்கள் அவசியம் விஜயம் செய்து விழாவைச் சிறப்பிக்க வேண்டுகிறேன்.

* * *

எட்டயபுரம் பாரதி விழாவுக்குத் தலைமை வகிக்கும் பேராசிரியர் வ. ரா. அவர்களின் அறுபதாவது பிறந்த தினத்தைச் செப்டம்பர் 17உ சென்னை ராஜாஜி மண்டபத்தில் கொண்டாடுவ தென்று ஏற்பாடு செய்திருக்கிறது. இந்த வைபவத்துக்குத் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ காமராஜ நாடார் அவர்கள் தலைமை வகிப்பார்கள். பேராசிரியர் வ. ரா. தமிழ் வசன இலக்கியத்துக்குப் புதியவழி செப்பனிட்டுத்

பேராசிரியர் மணிவிழா நிதி

ஸ்ரீ என். எஸ். கிருஷ்ணன், ஸ்ரீமதி டி. ஏ. மதுரம்	1001	0	0
ஸ்ரீ எஸ். சதாநந்த், ஆசிரியர், ப்ரீ பிரஸ் ஜர்னல், பம்பாய்	500	0	0
ஸ்ரீ ஆர். எஸ். மணி, சினிமா டைரக்டர், சென்னை	150	0	0
ஸ்ரீ டி. ஆர். மகாலிங்கம், சினிமா நடிகர், சென்னை	101	0	0
ஸ்ரீ டி. ஆர். ராமச்சந்திரன், சினிமா நடிகர், சென்னை	101	0	0
ஸ்ரீ வி. குப்புசாமி அய்யர், அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை	100	0	0
ஸ்ரீமதி டி. ஆர். ராஜகுமாரி, சினிமா நடிகை, சென்னை	51	0	0
ஸ்ரீ என். எஸ். திரவியம், என். எஸ். கே. பிலிம்ஸ்	51	0	0
டாக்டர் வி. டி. தேசிகாச்சாரி, நுங்கம்பாக்கம், சென்னை	51	0	0

ஸ்ரீ ஏ. சுப்பய்யா, திரு ஏஷியாடிக் இன்ஸ்யூரன்ஸ் கம்பெனி	51	0	0
ஸ்ரீ என். ரகுநாதய்யர், ஹிந்து உதவி ஆசிரியர்	50	0	0
நாமக்கல் கவிஞர் ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளை	50	0	0
ஸ்ரீ ஏ. என். சிவராமன், ஆசிரியர், 'தினமணி'	30	0	0
ஸ்ரீ எம். கே. ராதா, சினிமா நடிகர், சென்னை	25	0	0
ஸ்ரீ எஸ். வி. கிருஷ்ணசாமி பாகவதர், தஞ்சாவூர்	25	0	0
புளிமூட்டை ராமசாமி ஐயர், சினிமா நடிகர், சென்னை	25	0	0
ஸ்ரீ வி. ஆர். சுப்ரமணியம், சங்கீத டைரக்டர், சென்னை	25	0	0
ஸ்ரீ எஸ். கே. சாமி, என். எஸ். கே. பிலிம்ஸ், சென்னை	25	0	0
ஸ்ரீ வி. பி. சாரதி, சென்னை	25	0	0
சாஸ்திரி & சாஸ்திரி, நகை வியாபாரிகள், தியாகராயநகர்	25	0	0

ரூ. 10—0—0 நன்கொடையளித்தவர்கள் :—(ஸ்ரீ ஏ. ஜி. வெங்கடாச்சாரி, உதவி ஆசிரியர் தினமணி; ஸ்ரீ டி. வி. கணேசன், தினமணி; ஸ்ரீமதி லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி; ஸ்ரீ எஸ். டீ. கிருஷ்ணமூர்த்தி, சுதேசமித்திரன்; ஸ்ரீ கே. கே. கோதண்டராமக் கவுண்டர் கன்னிப்பட்டி; ஸ்ரீ வி. எஸ். டி. பாண்டியன், என். எஸ். கே. சபா; ஸ்ரீ வி. கே. ராமசாமி, என். எஸ். கே. சபா; ஸ்ரீ கே. ஆர். செல்லமுத்து, என். எஸ். கே. சபா; ஸ்ரீ ச. எம். கோபாலசாமி முதலியார், நாஷனல் ஸ்டுடியோஸ்; ஸ்ரீ நடேசன், நியூடன் ஸ்டுடியோஸ்; ஸ்ரீ பி. எஸ். செல்வராஜ், நியூடன் ஸ்டுடியோஸ்; ஸ்ரீ ஜயமணி சுப்ரமணியம், கல்கி காரியாலயம்; ஸ்ரீ எம். எஸ். சபரிராஜன், கல்கி காரியாலயம்; ஸ்ரீ கே. ஆர். சாஸ்திரி, கல்கி காரியாலயம்; ஸ்ரீ கே. ரங்கசாமி, புதுடில்லி; ஸ்ரீ எஸ். சாரங்கரத்தினம், சுதேசமித்திரன்; ஸ்ரீ வி. எஸ். சுப்பய்யா, அகில இந்திய ரேடியோ சென்னை.)

ஆக ரூபா 170 0 0

ரூ. 5—0—0 நன்கொடையளித்தவர்கள் :—(ஸ்ரீ வி. எஸ். செல்லப்பா, தினமணி; ஸ்ரீ கே. எஸ். வி. ரமணி, தினமணி; ஸ்ரீ கே. எம். ரங்கசாமி, தினமணி; ஸ்ரீ சந்தானம், தினமணி; ஸ்ரீ எஸ். பாஷ்யம், சுதேசமித்திரன்; ஸ்ரீ எஸ். நீலம் சுதேசமித்திரன்; ஸ்ரீ பி. கோதண்டராமன், சுதேசமித்திரன்; ஸ்ரீ என். ஏ. கணபதி, சுதேசமித்திரன்; ஸ்ரீ என். வெங்கட்ராமன், கல்கி காரியாலயம்; ஸ்ரீ எம். பி. கல்யாணசுந்தரம், கல்கி காரியாலயம்; ஸ்ரீ வி. வைத்தியநாதன், கல்கி காரியாலயம்; ஸ்ரீ பகீரதன், கல்கி காரியாலயம்; ஸ்ரீ எஸ். வி. எஸ். கல்கி காரியாலயம்; ஸ்ரீ லோமாஸ், கல்கி காரியாலயம்; ஸ்ரீ ஆர். வீழிநாதன், கல்கி காரியாலயம்; ஸ்ரீ விந்தன், கல்கி காரியாலயம்; ஸ்ரீ ஏ. வி. ராகவன், கல்கி காரியாலயம்; ஸ்ரீ மணியம், கல்கி காரியாலயம்; ஸ்ரீ சாமா, கல்கி காரியாலயம்; ஸ்ரீ வி. ரா. கோபாலன், கல்கி காரியாலயம்; ஸ்ரீ வி. சீனிவாசன், கல்கி காரியாலயம்; ஸ்ரீ பி. சுப்ரமணிய ஐயர், கல்கி புக் டிப்போ, திருநெல்வேலி; ஸ்ரீ டி. வெங்கட்ராமன், நியூடன் ஸ்டுடியோஸ்; ஸ்ரீ டி. பக்கிரிசாமி, என். எஸ். கே. சபா; ஸ்ரீ பி. சோமசுந்தரம், என். எஸ். கே. சபா; ஸ்ரீ எம். எஸ். லோகநாதன், என். எஸ். கே. சபா; ஸ்ரீ பி. கே. வேலு, என். எஸ். கே. சபா; ஸ்ரீ எஸ். வி. ராஜகோபால், என். எஸ். கே. சபா; ஸ்ரீ ஜி. முத்துகிருஷ்ணன், என். எஸ். கே. சபா; ஸ்ரீ டி. வி. ராதாகிருஷ்ணன், என். எஸ். கே. சபா; ஸ்ரீ கே. சந்திரசேகரன், என். எஸ். கே. சபா; செல்வா ஸ்டோர்ஸ், தியாகராயநகர், சென்னை; ஸ்ரீ கோபால், மேக்-அப் மேன்; ஸ்ரீ என். ஏ. ரவீந். என். எஸ். கே. சபா; ஸ்ரீ ச. பி. ராஜு, என். எஸ். கே. சபா; ஸ்ரீ எம். லோகநாதன், என். எஸ். கே. சபா; ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரம், நியூடன் ஸ்டுடியோஸ்; ஸ்ரீ கண்ணபிரான், பிரபாத் டாக்கீஸ்.)

ஆக ரூ.	190	0	0
இதர வசூல்கள்	53	12	0
ஆக ரூ.	2875	12	0
ஏற்கெனவே வசூல்	7369	4	0
ஆக மொத்தம்	10245	0	0



அத்தியாயம் 10

பகற் கனவு

ஒரு நிமிஷ நேரம் இந்தப் பூமண்டலம் மட்டுமன்றி ஈரேழு பதினாலு உலகங்களும் ஸ்தம்பித்து நின்றன. சப்தமயமான பிரபஞ்சத்தில் மிக மெல்லிய இலை அசையும் சத்தம் கூடக் கேளாத நிச்சப்தம் குடிகொண்டிருந்தது. வாயுபகவானும் தன்னுடைய இயற்கையான சலனத்தை மறந்து நின்று விட்டதாகத் தோன்றியது.

பிறகு எங்கேயோ அதல பாதாளத்திலிருந்து பேசுவதுபோலச் சௌந்தரராகவனுடைய குரல் கேட்டது.

"நான் காண்பது உண்மையா? அல்லது கனவு காண்கிறேனா?" என்றான்.

"தாஜ்மகாலைச் சொல்கிறீர்களா? ஆம்; அதைக் 'காதல் கனவு' என்றும் 'பளிங்குக் கல் சொப்பனம்' என்றும் கவிகள் வர்ணித்திருக்கிறார்கள். ஆனாலும் இங்கு நின்று பார்க்கும்போது தாஜ்மகால் என்பது வெறுங் கனவல்லவென்றும் நிஜக் கட்டிடந்தான் என்றும் தோன்றுகிறது!" — இந்த பதிலைத் தாரிணி கூறினாள்.

இடையில் தாரிணியின் தோழி நிருபமா தலையிட்டு, "இவர் மிஸ்டர் ராகவன் அல்லவா? என்ன அதிசயமான சந்திப்பு?" என்றாள்.

"உண்மை; அந்தத் துரதிர்ஷ்டசாலி நான் தான்!" என்றான் ராகவன் நிருபமாவைப் பார்த்து.

"ஆகா! இவ்வளவு அடக்கம் உங்களுக்கு எப்போது வந்தது? உங்கள் பின்னால் நிற்கும் பெண் யார்?" என்று நிருபமா கேட்கவும், ராகவனுடைய முகம் கொஞ்சம் சுருங்கியது.

"அவரைக் கேட்பானேன்? உன்னால் ஊகிக்க முடியவில்லையா, நிருபமா? அவருடைய அருமை மனைவியாகத்தான் இருக்க வேண்டும்!" என்று தாரிணி கூறினாள்.

"இது உண்மைதானா?" என்று நிருபமா பிடிவாதமாகக் கேட்டாள்.

"ஆம்!" என்று ராகவன் மென்று விழுங்கினான்.

"ஹா ஹா! எவ்வளவு அழகான பெண்! இப்படிப் பட்டவளைக் கலியாணம் செய்துகொண்டும் உம்மைத் துரதிர்ஷ்டசாலி என்று சொல்லிக் கொள்கிறீரே! நல்ல வேடிக்கை இது!" என்று கூறி நகைத்து விட்டு, "அதோ பின்னால் வருகிற இளைஞர் யார்?" என்று கேட்டாள் நிருபமா.

"என்னுடைய மனைவியின் பந்து" என்று ராகவன் முணு முணுத்தான்.

"எனக்குக்கூட தெரிந்த முகமாய்த் தோன்றுகிறது. சமீபத்தில் எங்கேயோ பார்த்திருக்கிறேன்" என்றாள் தாரிணி.

"என்ன? என்ன? இந்தப் பையனை நீ எப்படிப் பார்த்திருக்க முடியும்? வேறு யாரையோ பார்த்துவிட்டுத் தவறாகச் சொல்கிறாய்!" என்றான் சௌந்தர ராகவன்.

இதற்குள் சூரியா கொஞ்சம் முன்னால் வந்து, "இவர் சொல்வது பிசகில்லை. ஹரிபுரா காங்கிரஸில் இவரை நான் பார்த்தேன்" என்று சொல்லிவிட்டு, தாரிணியைப் பார்த்து, "நீங்கள்

சோஷலிஸ்ட் கட்சிக் கூட்டத்துக்கு வந்திருந்தீர்கள் இல்லையா?'' என்றான்.

ஹரிபுரா காங்கிரஸ் என்றதும் எட்டு வருஷத்துக்கு முன்னால் நடந்த கராச்சி காங்கிரஸ் ராகவனுடைய ஞாபகத்துக்கு வந்தது. கராச்சி, விமானக்கூடமும் அங்கே முதன் முதலில் தான் தாரிணியைச் சந்தித்த சந்தர்ப்பமும் நினைவுக்கு வந்தன. இதற்கிடையில் தாரிணியின் மதுரமான குரல், "ஆம்; சோஷலிஸ்ட் கூட்டத்துக்கு நான் வந்திருந்தேன். அங்கே நீங்கள் பிரமாதமான பிரசங்கம் ஒன்று செய்தீர்கள். அதை இன்னும் என்னால் மறக்க முடியவில்லை!'' என்று கூறியது கனவிலே கேட்பது போல் ராகவன் காதில் விழுந்தது.


சற்று அவன் நிதானித்துத் தாரிணி சூரியாவைப் பற்றித்தான் அவ்விதம் சொல்கிறாள் என்பதை அறிந்து கொண்டான். தன்னுடைய எழுத்துத் திறமையைக் குறித்துத் தாரிணி ஒரு சமயம் பாராட்டிப் பேசியது அவனுக்கு நினைவு வந்தது.

இப்போது சூரியாவின் பேச்சுத் திறமையைத் தாரிணி பாராட்டியது அவ்வளவாக ராகவனுக்குத் திருப்தி உண்டாக்கியது என்று சொல்வதற்கில்லை. "ஓஹோ! சூரியா அவ்வளவு பெரிய அதிகப் பிரசங்கி என்று எனக்குத் தெரியாதே?'' என்றான்.

"அதிகப் பிரசங்கம் ஒன்றும் இவர் செய்யவில்லை. சுருக்கமாகத்தான் பேசினார். பேசியவரையில் அற்புதமாய்ப் பேசினார்'' என்றாள் தாரிணி.

"ஆமாம், பணக்காரன் எல்லாரும் ஒழிந்து விடவேண்டும்; சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தைக் குறைக்க வேண்டும்; சுதேச ராஜாக்களை ஒழித்துவிட வேண்டும் என்றெல்லாம் வெளுத்துக் கட்டியிருக்கும்! இப்படியெல்லாம் தீவிரமாய்ப் பேசுவதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. யார் வேணுமானாலும் அப்படித் தடபுடலாய்ப் பேசலாம்!'' என்றான் ராகவன்.

நிருபமா மறுபடியும் குறுக்கிட்டு, "தயவு செய்து கொஞ்சம் உங்கள் விவாதத்தை நிறுத்தி ஒரு நிமிஷம் இடை வெளி கொடுங்கள். என்னுடைய கணவரை உங்களுக்கு அறிமுகம் செய்துவைக்கிறேன். இவர்தான் மிஸ்டர் வேணிபிரஸாத் பி. ஏ. எல். எல். பி.; இந்த ஊரில் பிரபல வக்கீல்; ஆனால் பிராக்டிஸ் மட்டும் கிடையாது! இப்போதைக்கு இவருடைய மனைவியின் சிநேகிதர்களை வீட்டுக்கு அழைத்து உபசரிப்பதுதான் இவருக்கு முக்கிய வேலை. தாரிணி எங்கள் வீட்டில்தான் தங்கியிருக்கிறாள். நீங்களும் வந்து தங்கினால் இவருக்கு மிக்க சந்தோஷமாயிருக்கும். எங்களால் முடிந்த சௌகரியம் செய்து கொடுப்போம். ஆக்ராவில் எத்தனை நாள் தங்கியிருப்பதாக உங்களுடைய உத்



நேரம்?" என்று சௌந்தரராகவனைப் பார்த்து நிருபமா கேட்டாள்.

"இன்றைக்கும் நாளைக்குந்தான். தங்களுடைய அன்பார்ந்த அழைப்புக்காக வந்தனம். ஆனால் இன்னொரு சமயம் வருகிறோம். பொய் சொல்லுகிறவர்களுடன் சேர்ந்து ஒரே வீட்டில் இருக்க எனக்கு இஷ்டமில்லை."

"அது என்ன? யார் பொய் சொன்னது?" என்று நிருபமா கேட்டாள்.

"உங்களுடைய தோழிதான். நீங்களே கேளுங்கள்; இவள் இறந்து போய் விட்டதாகக் கடிதம் எழுதியது உண்டா இல்லையா என்று?"

தாரிணி புன்னகை புரிந்து, "நான் இறந்து போய் விட்டதாக நானே எப்படி எழுதியிருக்க முடியும்? இதிலிருந்தே பொய்யர் யார் என்று தெரியவில்லையா?" என்றாள்.

"நீ எழுதா விட்டால் வேறு யாரையோ கொண்டு எழுதச் சொல்லியிருக்கிறாய்!"

"நான் இறந்து போனது என்னமோ உண்மையான செய்திதான்!"

"அப்படியானால் இப்போது இங்கே எப்படி இருக்கிறாய்?"

"இறந்து போனவள் மீண்டும் பிழைத்தெழுந்தேன்."

"எதற்காக?" என்று ராகவன் கடுமையாகக் கேட்டான்.

"இறந்து போனபிறகு தங்களுக்கு நான் கொடுக்க வேண்டிய இரண்டாயிரம் ரூபாயைப் பற்றி நினைவு வந்தது. அதை நினைத்து நினைத்து நீங்கள் இராத் தூக்கம் இல்லாமல் தவிப்பீர்களே என்று எண்ணி மறுபடியும் பிழைத்து எழுந்து வந்தேன்."

"பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும். நீ ஒரே அண்டப் புளுகாய்ப் புளுகுகிறாய். அன்றைக்கு டில்லி ஸ்டேஷனில் பார்த்த போது, 'நான் தாரிணி இல்லை' என்று சொன்னாயே? அந்தப் பொய் எதற்காகச் சொன்னாய்?"

"அப்படி நான் சொல்லவில்லையே? 'பழைய தாரிணி நான் இல்லை' யென்று தான் சொன்னேன். மேலே சொல்வதற்குள் ரயில் நகர்ந்து விட்டது."

"ஆகா! முன்னைப்போலவே எதற்கும் காரணம் சொல்லிச் சமாளித்துக் கொள்கிறாய்" என்றான் ராகவன்.

"நான் எல்லா விஷயங்களிலும் முன்னைப் போலவே தான் மாறாமல் இருக்கிறேன். மற்றவர்களும் அப்படியிருந்திருந்தால் இந்த மாதிரிப் பேச்சுக்கே இடமிராது. போனால் போகட்டும். உங்களை மறுபடியும் எங்கே சந்திப்பது? இரண்டாயிரம் ரூபாயைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்."

"அதற்கு அவசரம் ஒன்றுமில்லை. மெதுவாய் வாங்கிக் கொள்கிறேன். ஆனால் உங்களை மறுபடியும் நான் சந்திக்கவேண்டும். தாஜ்மகால் பார்த்தாகி விட்டதா?"

"இல்லை; மத்தியானம் தான் பார்க்கப் போகிறோம்."

"எத்தனை மணிக்கு வருவீர்கள்?"

"நாலரை அல்லது ஐந்துக்கு வருவோம். சாயங்காலம் மந்தன் வெயிலில் பார்த்து விட்டு இரவு பூரண சந்திரனுடைய நிலவிலும் பார்க்கலாம் என்று உத்தேசம்."

"நாங்களும் அந்த நேரத்திற்குத்தான் வருவதாக இருக்கிறோம். பாக்கி விஷயம் அங்கே பேசிக்கொள்ளலாம்."

இதற்குள் இரண்டு கோஷ்டியும் பிரிந்து வெவ்வேறு வழி போகவேண்டிய இடம் வந்தது. விடை பெற்றுக் கொண்டு பிரிந்தார்கள்.

தாரிணி முதலியவர்கள் போனதும் இத்தனை நேரமும் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் மௌனமாயிருந்த சீதா, "என்ன! இந்த ஸ்திரீ யார்?" என்று கேட்டாள்.

"உன் அம்மாஞ்சியைக் கேட்டுத் தெரிந்து கொள்!" என்றான் ராகவன்.

"அம்மாஞ்சியைக் கேட்பானேன்? நீங்கள் தான் சொல்லுங்களேன்! உங்களுக்குத் தெரியாதா?"

"பேஷாகத் தெரியும்! உன்னைப் போல அவளும் ஒரு ஸ்திரீதான்!"

"ஸ்திரீதான் என்று எனக்கும் தெரிந்தது. ஆனால் உருவத்திலேதான் ஸ்திரீயே தவிர, நடவடிக்கை யெல்லாம் ஆண்பிள்ளை மாதிரி! புருஷனாய்ப் பிறந்திருக்க வேண்டியவள் தவறிப் பெண்ணாய்ப் பிறந்துவிட்டாள் போலிருக்கிறது."

"நீ சொல்வது ரொம்ப சரி. ஆகவே, அந்தப் பெண்ணைப் பிறந்த புருஷ

னோடு நான் பேசுவதினால் உனக்கு மனக் கஷ்டம் ஏற்படாதல்லவா?''

"மனக்கஷ்டமா? எனக்கு எதற்காக மனக் கஷ்டம்? அசல் பெண்ணைப் பிறந்தவனோடு நீங்கள் பேசினால் தான் எனக்கு என்ன வந்தது? அந்த மாதிரி யெல்லாம் நினைத்துக் கொள் வதற்கு என்னைச் சுத்தப் பட்டிக்காடு என்று நினைத்துக் கொண்டீர்களா? நானும் பம்பாய் நகரத்தில் பிறந்து வளர்ந்தவள் தான்.''

"அந்த மகத்தான விஷயத்தை மறந்துபோய் விட்டேன். தயவு செய்து மன்னிக்க வேணும்.''

"ஆனால் என்னிடம் எதையும் மறைத்துப் பேசினால் மட்டும் எனக்குப் பிடிக்காது. டில்லி ரயில்வே ஸ்டேஷனில் நீங்கள் ஓடிப் போய்ப் பேசினவன் இவன்தானே? அதை எதற்காக மறைக்க வேண்டும்?''

"பார்த்தாயா, சூரியா, உன் அத்தங் காளின் சமர்த்தை? இவளிடம் பயந்து கொண்டு நான் எதையோ மறைத்தேனாம்! நம்ம பக்கத்துப் பெண்களிடம் இதுதான் ஒரு பெரும் சங்கடம். வெறும் சந்தேகப் பிராணிகள்!''

"நான் ஒன்றும் சந்தேகப்பிராணி இல்லை. 'ரயில்வே ஸ்டேஷனில் பார்த்துப் பேசியவன் யார்?' என்று நான் கேட்டதற்குத் 'தெரியாது' என்று ஏன் மெழுகி மறைத்ீர்கள்?''

"மெழுகவும் இல்லை; மறைக்கவும் இல்லை. தெரிந்தவளாக்கும் என்று போய்ப் பேசினேன். அவன் இல்லை என்று சாதித்தான். அப்படியிருக்க, 'யார்? யார்?' என்று நீ துளைத் தால் நான் என்ன பதில் சொல்வது? இப்போது அவனும் நானும் பேசிக் கொண்டிருக்கிறோமே? — அதிலிருந்தே உனக்கு விஷயம் தெரியவில்லையா?''

"ஏதோ இங்கிலீஷில் பேசிக்கொண் டிருந்தீர்கள்! என்ன பேசினீர்கள் என்று நான் கண்டேனா? அவ்வளவு இங்கிலீஷ் எனக்குத் தெரியாது.''

"தெரியாவிட்டால் வாயை மூடிக் கொண்டு சும்மா இரு.''

"இப்படி எரிந்து விழத்தான் உங்க ளுக்குத் தெரியும்; அன்பாக ஒரு வார்த்தை சொல்லத் தெரியாது.''

இதையெல்லாம் கேட்டுக் கொண்டு பின்னால் சூரியா வந்துகொண் டிருந் தான். பாரதியாரின் பாடலில்,

"தெள்ளிய தேனில் ஓர் சிறிது நஞ்சையும்
சேர்த்தபின் தேனாமோ?''


என்ற வரிகள் அவனுடைய நினைவுக்கு வந்தன. அடாடா! இவர்களுடைய இன்பமயமான இல் வாழ்க்கையில் இந்த ஒரு துளி விஷம் கலந்து விட்ட தாக வல்லவா காணப்படுகிறது? — என்று மனதிற்குள் பச்சாத்தாபப் பட்டான். தன்னுடைய அருமை அத்தங்காளின் தப்பபிப்பிராயத் தைப் போக்கி அவனைச் சீர்திருத்த விரும்பி, "அத்தங்கா! நீ அந்தப் பெண்ணைப் பற்றிச் சொன்னது கொஞ் சமும் சரியல்ல; உத்தமமான தேச சேவகி அவள். ஹரிபுரா காங்கிரஸில் அவள் ஓடி ஓடித் தொண்டு செய்த தைப் பார்த்திருந்தா யானால், அவளு டைய குண மேன்மை உனக்குத் தெரிந் திருக்கும். அவள் 'பாணி சாஹியே?' (தண்ணீர் வேண்டுமா?) என்று கேட்கும் வார்த்தையின் இனிமையினா லேயே தாகம் தணிந்துவிடும். அவளைப் பற்றி நீ ஒன்றும் தவறாக எண்ணிக் கொள்ளாதே!'' என்று ஒரு குட்டிப் பிரசங்கம் செய்தான் சூரியா.

"நீ பெரிய அதிகப் பிரசங்கி என்று தாரிணி சொன்னது சரிதான்! ஒரே வர்ணிப்பாய் வர்ணிக்கிறாயே? தாரிணி ஹரிபுரா காங்கிரஸுக்கும் தேச சேவிகையாக வந்திருந்தாளாக்கும்!''

"ஆமாம்; தேச சேவிகையாக வந் திருந்து ரொம்ப நல்ல பெயரும் வாங்கி னாள். நம்முடைய தமிழ் நாட்டில் இப்படிப்பட்ட தேச சேவிகைகள் எப்போது முன்வரப் போகிறார்கள் என்று எண்ணிக் கொண்டேன்.''

"ஓகோ! அப்படி வேறே உனக்கு ஆசையா? நம்முடைய நாட்டிலும் இப்படிப்பட்ட தேச சேவிகைகள் முன் வந்தால் தேச பக்தர்கள் எல் லாரும் பல்லைக் காட்டிக் கொண்டு நிற்கலாம் என்று எண்ணுகிறாயாக் கும்? தேசத் தொண்டர்கள் என்று சொல்லிக் கொண்டு வருகிற தடிப் பசங்கள் அதற்காகத்தானே முக்கிய மாகக் காங்கிரஸில் சேருகிறார்கள்!''

"மாப்பிள்ளை, ஸார்! இந்தியப் பெண் குலத்தையும் புனிதமான காங்



கிரஸ்ஸ்தாபனத்தையும்பற்றி இப்படியெல்லாம் பேசாதீர்கள். வேறு விஷயத்தைப் பற்றிப் பேசலாம். — அதோ தெரிகிறதே! அது யாருடைய அரண்மனை? அக்பர் கட்டியதா! ஜஹாங்கீர் கட்டியதா? அல்லது ஷாஜஹான் மாளிகையா?" என்றான்.

அதற்குப் பிறகு ஆக்ரா கோட்டையில் பாக்கியிருந்த கட்டிடங்களை அவர்கள் சுற்றிப் பார்த்தார்கள். ஆனால் முன்னைப்போல் அவ்வளவு உற்சாகம் யாருக்கும் இல்லை.

"போதுமே! நடந்து நடந்து எனக்குக் காலை வலிக்கிறது. ஓட்டலுக்குப் போகலாமா?" என்றாள் சீதா.

"ஆமாம்; பளிங்குக் கல்லாலேயே எல்லாக் கட்டிடங்களும் கட்டியிருப்பதால் ஒன்றைப்போலவே இன்னொன்று இருக்கிறது. ஒரு வித்தியாசமும் இல்லை. திரும்பிப் போக வேண்டியதுதான். சாயங்காலம் தாஜ்மகால் வேறே பார்க்க வேண்டும்" என்றான் ராகவன்.

"தாஜ்மகாலைப் பற்றியும் இப்படித்தான் சொல்வீர்களோ, என்னமோ? அதுவும் பளிங்குக் கல்லால் கட்டியதுதானே?" என்றான் சூரியா.

"ஆஹா! அது வேறு விஷயம். தாஜ்மகால் கட்டிடமே யில்லை. அது உயிருள்ள தெய்விக சிற்ப வடிவம்; இந்தியாவில் மொகலாயர் காலத்தில்

ஏற்பட்ட மறுமலர்ச்சியின் ஜீவபிம்பம்; ரதியும் மன்மதனும் பவனி வரும் வெண்மலர் விமானம்; சந்திர கிரணங்களையும் மந்தமாருதத்தையும் வானவில்லின் வர்ணங்களையும் காதல் இன்பத்தையும் குழைத்து எழுதிய உயிர்ச் சித்திரம்; ஒரு தடவை பார்த்தவர்களின் உள்ளத்திலிருந்து என்றென்றும் அகலாத சௌந்தரிய மோகினி. தாஜ்மகாலைப் பார்க்காத ஜன்மம் மனித ஜன்மமே யல்ல!" என்று ராகவன் சொல்மாரி பொழிந்தான்.

மூவரும் ஆக்ராவில் தாங்கள் தங்கியிருந்த ஓட்டலுக்குச் சென்றார்கள். சாப்பிட்டு விட்டுச் சிரமபரிகாரம் செய்து கொண்டார்கள்.

* * * * *



சீதா பட்டுப் பூச்சியின் பலவர்ண இறகுகள்போல் பிரகாசித்த உடைகள் அணிந்திருந்தாள். சிலந்திப் பூச்சியின் கூண்டைப்போல் தோன்றிய மெல்லிய சல்லாத் துணியைத் தலை பாதி மறையும்படியாகப் போர்த்திக் கொண்டிருந்தாள். விலை மதிக்க முடியாத முத்து மாலைகளையும் ரத்தின ஹாரங்களையும் அணிந்திருந்தாள். பாதங்களையும் விரல் நகங்களையும் செம்பஞ்சுக் குழம்பினால் அழகு படுத்திக் கொண்டிருந்தாள்.

வெண்ணிலவின் நிறத்தை யொத்த பளிங்குக் கல்லினால் கட்டி, பலவர்ண இரத்தினக் கற்களினால் சித்திர வேலைப்பாடுகள் செய்யப் பட்டிருந்த அரண்மனையின் கீழ் மண்டபங்களிலும் மேல் மாடங்களிலும் அங்கு மிங்கும் நடமாடினாள். ஆங்காங்கு பளிங்குக் கல் வாய்க்கால்களில் சல சல வென்று ஓடிய நீரோடையைப் பார்த்து மகிழ்ந்தாள். சிற்சில இடங்களில் நீர் ஓடையில் சிறு குளங்கள் அமைந்திருந்தன. அந்தக் குளங்களில் அன்று மலர்ந்த குமுதங்களும் தாமரைகளும் செங்கழுநீர்ப் பூக்களும் கொடிகளுடனும் இலைகளுடனும் காணப்பட்டன. இன்னும் சில குளங்களில் அன்று பூத்த ரோஜா மலர்களைக் கொட்டியிருந்தது. புஷ்பங்களின் வாசனையோடு, ராணி நூர்ஜஹான் கண்டு பிடித்து உலகத்துக்கு அளித்த ரோஜா அத்தரின் வாசனையும் அகிற்புகை வாசனையும் கலந்து பரிமளித்தன.

குளங்களில் ஓரமாக நின்று மலர்ந்து மிதந்த புஷ்பங்களைச் சில சமயம் சீதா உற்றுப் பார்த்தாள். சில சமயம்

ஸ்படிகம் போன்ற தண்ணீரில் தன்னுடைய பொன் மேனியின் அழகைக் கண்ட ஆனந்தத்தினால் அவளுடைய தேகமெல்லாம் சிலிர்த்தது.

திடீரென்று அவளைச் சுற்றிப் பல பணிப் பெண்கள் நின்றார்கள். எங்கிருந்து வந்தார்களோ தெரியாது. எல்லாரும் அழகிகள்தான்; படமெடுத்து ஆடி அவ்வப்போது சீறும் நாக சர்ப்பத்தின் அழகை அவர்களுடைய அழகு ஒத்திருந்தது.

நாகப்பாம்பு தன் நீண்ட நாவை நீட்டுவதுபோல் அந்தப் பணிப் பெண்கள் எல்லாரும் சீதாவை நோக்கித் தங்கள் ஆட் காட்டி விரலைச் சுட்டிக் காட்டினார்கள். நெருப்புத் தழலைப்போல் அவர்களுடைய கண்கள் பிரகாசித்தன. "இவள் தான்!" "இவள்தான்!" என்று சொல்லி ஏக காலத்தில் எல்லாரும் சீறினார்கள்.

"வா! எங்களுடன் வா!" என்று சீதாவை அழைத்தார்கள். அவர்களுடைய அழைப்பை மறுக்க முடியாமல் சீதா அவர்களுடன் சென்றாள்.

விசாலமான பளிங்குக்கல் மண்டபம் ஒன்றில், தோகை விரித்த மயிலைப் போல் பின்புறச் சாய்வு அமைந்த ரத்தின கசிதமான சிம்மாசனத்தில் மொகலாய மன்னனின் பட்டமகிஷி அமர்ந்திருந்தாள். ஆஹா! அந்த மாதரசியின் கர்வந்தான் என்ன? சீதாவை "வா!" என்றுகூட அழைக்கவில்லை; உட்காரவும் சொல்லவில்லை.

"இந்த அசட்டுப் பைத்தியக்காரி யார்? எதற்காக இவளை இவ்விடம் கொண்டு வந்தீர்கள்?" என்று பணிப் பெண்களைப் பார்த்துச் சக்கரவர்த்தினி கேட்டாள்.

"மகாராணி! இவள்தான் நம் இளவரசரின் காதலைக் கவர்ந்த காதகி; ராஜபுத்திர மங்கை சீதா!" என்று ஒரு பணிப்பெண் சொன்னாள்.

"ஓகோ! அப்படியா! இவளுக்குத் தக்க தண்டனை விதிப்போம். இன்று நள்ளிரவு வரையில் இவள் உயிரோடிருக்கட்டும்!" என்று அரசியின் ஆக்ஞை பிறந்தது.

அந்தி மாலையில் அரண்மனை உத்தியான வனத்தில் சீதா அங்குமிங்கும் அலைந்தாள். ரோஜா மலர்களையும் மல்லிகைப் பூக்களையும் பறித்து முகர்ந்தாள். அவளுடைய மனதில் கவலை குடிகொண்டிருந்த போதிலும் இளவரசர் வந்து தன்னைக் காப்பாற்றுவார் என்ற நம்பிக்கையும் இருந்தது. இளவரசருடைய உருவத் தோற்றத்தை எண்ணிப் பார்த்தபோது மொகலாயர் உடை தரித்த சௌந்தர ராகவனுடைய வடிவமும் முகமும் சீதாவின் அகக் கண் முன்னால் வந்தன.

மாலை மயங்கி இருளானபோது அவளுடைய உள்ளத்தில் திகில் தோன்றியது. அதி துரிதமாக நள்ளிரவு நெருங்கி வந்தது. அரண்மனையை ஜோதி மயமாகச் செய்து கொண்டிருந்த தீபங்கள் ஒவ்வொன்றாக அணைக்கப்பட்டன. பிறகு சீதா இருளும் தானும் தனிமையுமாக ஆனாள். சலவைக் கல் சுவரில் அமைந்திருந்த சித்திரப் பலகணி வழியாக சந்திரனுடைய கிரணம் ஒன்று உள்ளே புகுந்து சீதாவின் கன்னத்தைத் தொட்டுத் தன்னுடைய மனமார்ந்த அநுதாபத்தைத் தெரிவித்தது.

திடீரென்று அறைக்கு வெளியே பேச்சுக் குரல் கேட்டது.

"அடியே! தூங்கி விட்டாள் போலிருக்கிறதடி!"

"இன்னும் சற்று நேரத்துக்கெல்லாம் ஒரே தூக்கமாய்த் தூங்கவேண்டியவள்தானே!"

"எனக்கு என்னமோ இவளை ஒரேயடியாய்க் கொன்று விடுவதில் விருப்பமில்லை. அனார்க்கலியைச் சிறையில் அடைத்தது போல் இவளையும் அடைத்துவிட்டால்தானே பைத்தியம் பிடித்துப் புலம்பிச் சாகிறாள்!"

"எல்லாவற்றுக்கும் மகாராணியைக் கேட்டு வருவோம், வாருங்கள்!"

பேச்சுக் குரல்கள் நின்று மௌனம் குடிகொண்டது. உடல் நடுக்கத்துடன் சீதா எழுந்தாள். இனி அங்கே ஒரு கணம் தாமதிப்பதும் ஆபத்தாகிவிடும். உடனே கிளம்பி எப்படியாவது இந்த அந்தப்புரச் சிறைச்சாலையிலிருந்து தப்பித்து ஓடிப்போக வேண்டும். இளவரசர் இங்கு வந்து தன்னைத் தப்புவிப்பார் என்று நினைப்பது மதியீனம்! தான் இங்கு இருப்பதே அவருக்குத் தெரியாதே! பின் எப்படிக் காப்பாற்றுவார்? 'டில்லியிலேயே இருக்கவும்; ஆக்ராவுக்கு வர வேண்டாம்!' என்று இளவரசர் சொன்னதைக் கேட்காமல் அல்லவா வந்து விட்டோம்?

இருள் சூழ்ந்த அந்தப்புரத்தின் தாழ்வாரங்கள் வழியாகச் சீதா தட்டுத் தடுமாறி நடந்து சென்றாள். கையினால் சுவர்களைத் தடவிக் கதவு உள்ள இடத்தைத் தேடிக் கொண்டே சென்றாள். ஆங்காங்கு பலகணிகளின் வழியாக வந்த நிலா வெளிச்சம் அவளுக்கு ஒருவாறு வழிகாட்டிக் கொண்டிருந்தது. பல இடங்களில் சுவரைக் கதவு என்று எண்ணி ஏமாந்தாள். கதவு தட்டுப்பட்டாலும் அதைத் திறக்க முடியாமல் ஏமாற்றமடைந்தாள். ஒரு யுகம் போலத் தோன்றி ஒரு நாழிகை நேரம் இப்படி அலைந்து திரிந்த பிறகு கடைசியில் ஒரு கதவு அவள் கையை வைத்ததும் திறந்தது. அந்த வாசற்படியை மூடியிருந்த இரண்டு கதவுகளில் ஒன்று மட்டுமே திறக்கப்பட்டதாக அறிந்து கொண்டாள். தான் வெளியே போவதற்கு அதுவே போதும் என்று எண்ணி, நெஞ்சம் படபட வென்று அடித்துக் கொள்ள, வாசற்படியைத் தாண்டினாள். வெளியே வந்ததும் தன் எதிரே பிரம்மாண்டமான கோர ராட்சஸ உருவம் ஒன்று நிற்பதைக் கண்டு திகைத்து நின்றாள். அந்த உருவம் யார் என்பதை அவள் அறிவாள். ஆணும் இல்லாத பெண்ணும் இல்லாத அலி அவன். அதோடு செவிட்டு ஊமை. காது கேளாது; பேசவும் முடியாது. ஆனால் அவன் கண் பார்வை தீட்சண்யமானது. தன்னுடைய கடமை என்ன வென்பதும் அவனுக்கு நன்றாய்த் தெரியும். அந்தப் புரத்திலிருந்து வெளியே போகிறவர்களைத் தடுப்பது அவனுடைய முதற் கடமை. மீறிப் போக யத்தனிப்பவர்களைக் கொஞ்சமும் தாட்சண்யம் பாராமல் கண்ட துண்டமாக வெட்டுவதற்காக அவன் கத்தி வைத்திருந்தான். கத்திக்கு இரையாகாமல் தப்பி ஓடுகிறவர்களைக் குத்திக் கொல்வதற்காக ஈட்டியும் வைத்திருந்தான். இவனைப் போல் பல அலிகள் மொகலாய பாதுஷாவின் அந்தப்புரத்தைப் பாதுகாத்து வந்தார்கள்.

இதை யெல்லாம் நன்கறிந்திருந்த சீதா நடு நடுங்கினாள். அந்த அலியோ ஒரு வார்த்தையும் பேசாமல் அவளை உற்றுப் பார்த்து விழித்தான்.

அவ்வளவு தான்; சீதா பீதியினால் தன்னை மறந்து விட்டாள். "சூரியா! சூரியா!" என்று கதறினாள். தன்னைக் காப்பாற்றுவதற்காகத் தன் அம்மாஞ்சி சூரியா அந்தக் கோட்டைக்குப் பக்கத்தில் எங்கேயோ ஒளிந்திருக்கிறான் என்பது அவளுக்குத் தெரிந்திருந்தது. அதனாலேதான் "சூரியா!" என்று அவள் கதறினாள்.

சீதாவின் கதறலுக்கு ஒரு பதில் குரல் வந்தது. "இங்கே சூரியா இல்லை; நான் இருக்கிறேன், வருகிறேன்!" என்று அந்தக் குரல் சொல்லிற்று. அது யாருடைய குரல் என்று சீதா அதிசயப்பட்டுக் கொண்டிருக்கையில், வெண்ணிலவு பிரகாசித்த நிலா முற்றத்துக்கு அப்பால் இருள் சூழ்ந்திருந்த மண்டபத்திலிருந்து ஓர் உருவம் வெளிப்பட்டு வந்தது. கொஞ்ச தூரம் வந்ததும் அது யாருடைய உருவம் என்பது சீதாவுக்குத் தெரிந்து போயிற்று. அன்றொரு நாள் தன் தாயார் நோயாய்ப் படுத்திருந்தபோது அவளைப் பார்க்க வந்து பணமும் நகையும் கொடுத்துவிட்டுப் போன ஸ்திரீ தான். மற்றொரு நாள் புதுடில்லிச் சாலை முனையில் கையில் கத்தியுடன் மரத்தில் சாய்ந்து நின்று கொண்டிருந்தாளே, அவளே தான்! அந்த ஸ்திரீ இப்போதும் அக்கத்தியைக் கையில் பிடித்திருந்தாள். நிலா வெளிச்சத்தில் கத்தியின் சுடர்விளிம்பு தழல் கீற்றைப்போல் பிரகாசித்தது.

அந்த ஸ்திரீ யார்? அவள் எதற்காக வருகிறாள்? அலியைக் கொன்று தன்னைக் காப்பாற்ற வருகிறாளோ? அல்லது அந்தப் புரத்திலிருந்து தப்ப முயன்றதற்காகத் தன்னையே கொன்று விடுவதற்குத்தானோ?......

"அத்தங்கா! அத்தங்கா! இது என்ன தூங்கிக் கொண்டே பேசுகிறாய்! எழுந்திரு!" என்றான் சூரியா.

சீதா கண் விழித்தாள். பட்டப் பகலில் தான் தூங்கிப் பயங்கரமான கனவு கண்டதோடல்லாமல் பிதற்றியும் இருக்கவேண்டும் என்று தெரிந்து வெட்கினாள். வெட்கத்தை மறைப்பதற்காக, "நான் ஒன்றும் பிதற்றவில்லையே, சூரியா! இவர் எங்கே போனார்?" என்று கேட்டாள்.

"டோங்கா பிடிப்பதற்காக வாசலுக்குப் போனார். எழுந்திரு, சீக்கிரம்! தாஜ்மகாலுக்குப் புறப்பட வேண்டாமா! மணி நாலு அடித்து விட்டதே!" என்றான் சூரியா.



சென்னைக்கு ராஜாஜி விஜயம் செய்திருந்த போது 'பழைய நண்பர்'களின் கூட்டம் ஒன்று நடந்தது. ஸ்ரீ காமராஜ நாடார் நண்பர்களை டாக்டர் ராஜாஜிக்கு அறிமுகப்படுத்தினர்.





பழைய நண்பர்களின் கூட்டத்தில் 'தமிழ் வளர்ச்சிக் கழக' ஆசிய.

★


எத்திராஜ் பெண்கள் கலாசாலையில் ராஜாஜி மகாத்மா காந்தியின் திரு உருவப் படத்தைத் திறந்து வைத்தார்.







முஸ்லிம் அனாதைச் சிறுவர் விடுதிக்கும்
க்கர் பாபா வித்யாலயக் கட்டிடத்துக்கும்
அஸ்திவாரக் கல் நாட்டினார்.




44. பிள்ளைகளின் கல்வி

தம்பி! உனக்குத் தெரியும் அல்லவா? காந்தி மகான் தம்முடைய சரித்திரத்தைத் தாமே எழுதினார். அதற்குச் "சத்திய சோதனை" என்று பெயர் கொடுத்தார். தம்முடைய வாழ்க்கை முழுவதும் ஒவ்வொரு காரியத்தையும் "இது சத்தியத்துக்கு ஒட்டியதா?" என்று யோசித்தே செய்தார். சத்தியத்தைக் கடைப்பிடிப்பதற்காக மற்றவர்கள் சாதாரணமாய்ச் செய்யத் துணியாத பல காரியங்களைச் செய்தார். எல்லாரும் செல்லும் ராஜ பாட்டையை விட்டுக் கல்லும் முள்ளும் நிறைந்த காட்டு வழியில் சென்றார். எல்லாம் சத்தியத்துக்காகத்தான்.

காந்திஜி தமது குடும்ப வாழ்க்கையிலும் பல முறை சத்திய சோதனை செய்ய வேண்டியதாயிற்று. சத்தியத்திற்காக மற்றக் குடும்பஸ்தர்கள் செய்யத் துணியாத காரியங்களைச் செய்ய வேண்டியதாயிருந்தது.

எந்தத் தகப்பனாரும் தம் பிள்ளைகளைப் படிக்கவைக்க வேண்டும் என்று விரும்புவது இயற்கை. 'படிப்பு' என்று சாதாரணமாக இந்த நாளில் பள்ளிக்கூடங்களில் படிக்கும் இங்கிலீஷ் படிப்பைத் தானே சொல்கிறோம்? இங்கிலீஷ் படிப்பில் மோகம் அந்நாளில் இப்போதைக் காட்டிலும் அதிகமாயிருந்தது. உலக நிலைமை அறிந்த எந்த மனிதரும் தம் குமாரர்கள் இங்கிலீஷ் படிப்புப் படித்துப் பெரிய உத்தியோகத்துக்கு வரவேண்டும் என்று விரும்புவது சர்வ சாதாரணமாயிருந்தது.



ஆனால் காந்தி மகானோ இதற்கு நேர் விரோதமான கருத்துக் கொண்டிருந்தார். தென்னாப்பிரிக்காவில் வசித்தபோது தம் புதல்வர்களை அங்கிருந்த இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப அவர் விரும்பவில்லை. இந்தியாவுக்கு அனுப்பிப் படிக்க வைக்கவும் ஏற்பாடு செய்யவில்லை. தம்முடனே தம் புதல்வர்களை வைத்துக்கொண்டு தாம் செய்யும் சத்திய சோதனைகளில் அவர்களையும் பங்கு பெறச் செய்வதுதான் அவர்களுக்குச் சிறந்த படிப்பு என்று கருதினார்.

போனிக்ஸில் ஏற்படுத்திய ஆசிரமத்துக்குக் காந்திஜி உடனே போக முடியவில்லை. எனினும் ஜோகானிஸ்பர்க்கில் தமது சொந்த வீட்டிலேயே ஆசிரம வாழ்க்கையின் இலட்சியங்களை அமுலுக்குக் கொண்டுவர ஆரம்பித்தார். குடும்பத்தைச் சேர்ந்தவர் ஒவ்வொருவரும் மெய் வருந்தி உழைக்கும் வேலை ஏதேனும் செய்தாக வேண்டும் என்று சொன்னார். தம் குழந்தைகளையும் இந்த வழியில் பயில்விக்கத் தொடங்கினார்.

அதுவரையில் குடும்பத்துக்கு வேண்டிய ரொட்டிகளையெல்லாம் கடைகளிலே வாங்கிக் கொண்டிருந்தார்கள். இனி வீட்டிலேயே



ரொட்டி தயாரித்துக் கொள்ள வேண்டும் என்று ஏற்பாடாயிற்று. ரொட்டிக்கு மாவுகூடக் கடையிலிருந்து வாங்காமல் கோதுமை வாங்கிக் கை இயந்திரத்தில் அரைத்துக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது. அவ்விதமே கையால் மாவு அரைக்கும் இயந்திரம் ஒன்று வாங்கினார்கள். அதன் இரும்புச் சக்கரத்தை இரண்டு பேர் சேர்ந்து சுற்ற வேண்டும். காந்திஜியும் அவருடைய புதல்வர்களான மணிலால், ராமதாஸ், தேவதாஸ் ஆகியவர்களும், போலக்கும் அவருடைய மனைவியும் மேற்படி இயந்திரத்தை முறை போட்டுக்கொண்டு சுற்றி மாவு அரைத்தார்கள். கஸ்தூரிபாய் அம்மைக்குச் சமையலறையில் செய்ய வேண்டிய வேலையே சரியாயிருந்தது.

வேலைக்காரன் ஒருவன் அவர்களுடைய வீட்டில் இருந்தான். ஆனால் அவனை வேலைக்காரன் என்று யாரும் கருதவில்லை. குடும்பத்தில் ஒருவனாகவே அவனையும் எண்ணினார்கள். எல்லாரையும் போல் அவனும் தனக்கு உரிய வேலையைச் செய்தான். காந்திஜியின் புதல்வர்கள் வீட்டுக் கக்கூஸ்களைச் சுத்தம் செய்வது முதற்கொண்டு சகல வேலைகளையும் தாங்களே செய்துகொள்ளப் பயிற்சி பெற்று வந்தார்கள்.

காந்திஜியின் புதல்வர்களில் மூத்தவராகிய ஸ்ரீ ஹரிலால் காந்திக்குத் தம் தந்தை மீது மிக்க கோபம். நாடு நகரங்களில் உள்ள மற்றப் பிள்ளைகளைப்போல் தமக்குத் தம் தந்தை காலேஜ் படிப்பு அளிக்காதது பற்றித்தான். இதைக் குறித்து அவர் பகிரங்கமாகக் காந்திஜியின்மீது குறை கூறினார். பத்திரிகைகளிலும் எழுதினார். கடைசியாகத் தந்தையை விட்டு அடியோடு பிரிந்து தம் வாழ்க்கையைச் சுதந்திரமாக நடத்திக்கொள்வதாகச் சொல்லிப் போய்விட்டார். இதனால் ஸ்ரீ ஹரிலால் காந்தி அவ்வளவாக நன்மை யடைந்ததாகச் சொல்வதற்கில்லை. அவருடைய பிற்கால வாழ்க்கை அவ்வளவு நலமானதாக இல்லை.

மற்ற மூன்று புதல்வர்களும் தந்தையின் வாக்குத்தான் வேதவாக்கு. அவருடன் இருப்பது தங்கள் பாக்கியம், அவர் இட்டபணியைச் செய்வதே தங்களுக்குச் சிறந்த படிப்பு என்று பூரணமாக நம்பி அதற்கேற்ப நடந்து கொண்டார்கள்.

பிள்ளைகளுக்குப் புத்தகப் படிப்பே வேண்டியதில்லை யென்று காந்திஜி கருதவில்லை. அந்தக் காலங்களில் பள்ளிக்கூடங்களிலும் கலாசாலைகளிலும் கற்பிக்கப்பட்ட புத்தகக் கல்வி முறையை அவர் வெறுத்தார். தாமே தம் புதல்வர்களுக்கு இலக்கியக் கல்வி கற்பிக்க விரும்பினார். வீட்டிலே சாவகாசமாக உட்கார்ந்து படிப்புச் சொல்லிக் கொடுக்க வசதியில்லை. காந்திஜியின் வீட்டுக்கும் அவருடைய காரியாலயத்துக்கும் இரண்டரை மைல் தூரம் இருந்தது. தம்முடனே புதல்வர்கள் காரியாலயத்துக்கு நடந்து வந்து தம்முடனே திரும்பி நடந்து வரவேண்டும் என்று ஏற்பாடு செய்தார். போகவர ஐந்து மைல் நடை நல்ல தேகாப்பியாசம் ஆயிற்று. இப்படி நடக்கும்போது புத்தகங்களில் படிக்கவேண்டிய விஷயங்களை யெல்லாம் தாமே வாய்மொழியாகக் கற்பித்துவிடுவது என்று திட்டம் போட்டார்.

நம் பெரியோர்கள் படிக்கும் முறையைக் 'கல்வி' என்றும், 'கேள்வி' என்றும் இருவிதமாக வகுத்திருக்கிறார்கள். ஏட்டில் படித்துப் பெறுகிற அறிவைக் 'கல்வி' என்றார்கள். ஆசிரியர்களிடமிருந்தோ பெரியோர்களிடமிருந்தோ காதினால் கேட்டுப் பெறும் அறிவைக் 'கேள்வி' என்று சொன்னார்கள். அறிவை வளர்த்துக் கொள்வதற்குக் 'கல்வி'யை விடக் 'கேள்வி'யே சிறந்த முறை என்றும் கூறினார்கள். "கற்றலிற் கேட்டலே நன்று" என்னும் முதுமொழியை நீ கேட்டிருக்கிறா யல்லவா?

இந்த கொள்கையைக் கடைப்பிடித்துக் காந்திஜி தம் புதல்வர்களுக்குக் கல்வி கற்பித்து வந்தார். ஆனால் இது ஒழுங்காக நீடித்து நடைபெற வில்லை. உலகத்துக்கு ஒளிகாட்டப் பிறந்த மகான் தம் புதல்வர்களின் கல்வியைப் பற்றி மட்டும் கவனம்

செலுத்திக் கொண்டிருக்க முடியுமா? உலகம் காணாத அதிசயமான "சத்தியாக்கிரஹம்" என்னும் போர்முறை அப்போது தான் உருவாகிக்கொண்டு வந்தது. தென்னாப்பிரிக்க இந்தியர்களின் கதிமோட்சத்துக்காக ஒரு மகத்தான போராட்டம் ஆரம்பமாக இருந்தது. எனவே, பிள்ளைகளுக்குத் தந்தை கல்வி யளிப்பதும் தடைப்பட்டுப் போயிற்று.

இது விஷயமாகக் காந்திஜி தம் சுய சரித்திரத்தில் எழுதியிருப்பதைக் கேள் :—

"தக்க இலக்கியக் கல்வி என் புதல்வர்களுக்குத் தரமுடியாமல் போனது அவர்களுக்கும் எனக்கும் துயர்தரும் விஷயமே யாகும். என் மூத்த புதல்வன் ஹரிலால் இந்தக் குறையை என் முன் தனிமையிலும், பத்திரிகைகளில் பகிரங்கமாகவும் வெளியிட்டிருக்கிறான். மற்றப் புதல்வர்கள், விலக்க முடியாத காரணங்களினாலேயே நான் அவர்களுக்கு இலக்கியக் கல்வி யளிக்கவில்லை யென்பதை உணர்ந்து தயாளத்துடன் என்னை மன்னித்து விட்டார்கள். எனினும் அவர்கள் இலக்கியக் கல்வி பெறாதபடியால் குடிமுழுகிப் போய் விட்டதாக எண்ணி நான் துக்க சாகரத்தில் மூழ்கி விடவில்லை. தந்தை யொருவன் எப்படியிருக்க வேண்டு மென்பது என் இலட்சியமோ, அவ்வாறு நான் இல்லையே யென்ற வருத்தத்தைத் தவிர வேறு வருத்தம் எனக்குக் கிடையாது. சமூக நன்மையை முன்னிட்டே அவர்களுடைய இலக்கியக் கல்வியை பலி கொடுத்ததாக நான் கருதுகிறேன். இந்த நம்பிக்கை தவறா யிருக்கலாம். எனினும் மனப்பூர்வமாக அவ்வாறு நம்பினேன் என்பதில் ஐயமில்லை. ஆனால் அவர்களுக்கு நல்லொழுக்கப் பயிற்சி யளிப்பதில் நான் என்னளவும் அசட்டை காட்டினது கிடையாது. இப் பயிற்சிக்கு ஏற்பாடு செய்வதுதான் பெற்றோர்களின் முதன்மையான கடமை யென்பது என்னுடைய கருத்து.

குழந்தைகளுக்கு ஆங்கிலக் கல்வி அளிக்க வேண்டுமா, வேண்டாமா வென்பதைப் பற்றி நானும் போலக்கும் அடிக்கடி தீவிரமாக விவாதம் செய்வதுண்டு. இவ் விஷயமாக நான் எப்போதும் உறுதியான கொள்கை யுடையவன். இளம் வயதி லிருந்து குழந்தைகளை ஆங்கிலத்திலேயே எண்ணவும் பேசவும் பயில்விக்கும் இந்தியர்கள் தங்கள் குழந்தைகளுக்கும் தேசத்துக்கும் பெரிய துரோகம் செய்கிறார்கள் என்பது என் கொள்கை. இதனால் அக்குழந்தைகள் நாட்டின் பரம்பரையான பாரமார்த்திக சமுதாயச் செல்வங்களை இழந்து விடுகிறார்கள். அந்த அளவில் அவர்கள் தேச சேவைக்குத் தகுதி யற்றவர்களாகிறார்கள். இத்தகைய உறுதி கொண்டவனாதலின், குழந்தைகளிடம் நான் எப்போதும் குஜராத்தியிலேயே பேசி வந்தேன். போலக்குக்கு இது பிடிக்கவில்லை. அவர்களுடைய வருங்கால வாழ்வை நான் கெடுத்து வருவதாக அவர் நினைத்தார். பூரண அன்புடன் தமது முழு வலிமையையும் காட்டி அவர் என்னுடன் வாதிப்பார். ஆங்கிலம் உலக முழுவதும் பரவியுள்ள பாஷை யென்றும், சிறுபிராயத்தில் அதைக் கற்றுக்கொண்டோர் வாழ்க்கைப் போராட்டத்தில் மற்றவர்களைவிடப் பெரிய அனுகூலம் பெற்றவர்களாவார்கள் என்றும் அவர் கூறினார். என்றாலும், என் உறுதியை அவரால் மாற்ற முடியவில்லை. என்னுடைய கட்சிதான் நியாயமானதென்று அவர் ஒப்புக்கொண்டாரா, அல்லது நான் சுத்த பிடிவாதக்காரன் என்று விட்டுவிட்டாரா என்பது இப்போது ஞாபகமில்லை. இது இருபது ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவம். அதற்குப்பின் நான் பெற்றுள்ள அனுபவங்களினால் இவ்விஷயத்தில் என் உறுதி இன்னும் வலிமை பெற்றிருக்கிறது. இலக்கியக் கல்வி பூரணமாய்ப் பெறாத குறைபாடு என் குமாரர்களிடம் இருப்பினும் தாய்பாஷையில் அவர்கள் பெற்ற பயிற்சி அவர்களுக்கும் நாட்டுக்கும் பெரும் நன்மை யளித்து வருகிறது."

இவ்விதம் காந்திமகாத்மா இருபது வருஷத்துக்கு முன்னால் எழுதினார். அவருடைய வாக்கு இன்றுவரை பலித்து வந்திருக்கிறது. காந்தி மகாத்மாவின் மூன்று புதல்வர்களும் நாட்டுக்கு அருந்தொண்டுகள் செய்து வருகிறார்கள். தென்னாப்பிரிக்கா இந்தியர்களின் நலத்தைப் பாதுகாப்பதற்காகக் காந்திமகான் ஆரம்பித்த "இண்டியன் ஒபீனியன்" என்னும் பத்திரிகையை இன்றைக்கும் மணிலால் காந்தி நடத்தி வருகிறார்.



நமது இலங்கைக் கடிதம்:

விபரீதத் திட்டத்தின் விளைவு

ரஜனி

இலங்கை, ஆகஸ்ட் 24உ

யாழ்ப்பாணத்துக்கும் தென்னிந்தியாவுக்கும் மறுபடியும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவது பற்றிச் சென்ற வாரம் இலங்கை பார்லிமெண்டில் ஒரு ரஸமான விவாதம் நடந்தது. யாழ்ப்பாணத்தில் காங்கேசன் துறை, பருத்தித் துறை, வல்வெட்டித் துறை, ஊர்காவற்றுறை என்று பல துறைமுகங்களிருக்கின்றன. சுமார் 35 வருடங்களுக்கு முன்பு வரை இத்துறைமுகங்கள் உபயோகத்திலிருந்து வந்தன. அப்போது யாழ்ப்பாண தீப கற்பம் செல்வம் கொழிக்கும் பூமியாக இருந்து வந்தது. யாழ்ப்பாணத் துறைமுக நகரங்களிலே தென்னிந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் ஆற்றுக் கணக்கான பிரயாணிகள் தினசரி வந்திறங்குவார்கள். படகுகளிலும் பாய்மரக் கப்பல்களிலும் சாமான்கள் வந்திறங்கிய வண்ணம் இருக்கும். தூர தேசத்துக் கப்பல்கள் மாத்திரமே கொழும்பு, காலி துறைமுகங்களுக்கு வருவது வழக்கம். இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் நடைபெற்ற சகல விதமான போக்குவரத்துகளும் வட இலங்கைத் துறைமுகங்களின் மூலமாகவே நடைபெற்று வந்தன. இதன் பயனாக வர்த்தகத்திலாகட்டும், அல்லது பொருள் வளத்திலாகட்டும்—இலங்கைக்கு யாழ்ப்பாணமே முதன்மையாக விளங்கி வந்தது.

தமிழர், சிங்களவர் என்ற வகுப்பு வேற்றுமைகள் ஜனிக்கும் வரை இந்த நிலைமையைப் பற்றி யாருமே கவலைப்படவில்லை. வகுப்பு வேற்றுமைகளைக் கிளப்பி விடும் கைங்கரியத்தைச் சில சிங்கள பிரகஸ்பதிகள் எடுத்துக் கொண்டார்கள். தமிழர்களின் வயிற்றில் அடித்து விட்டால் அவர்கள் வழிக்கு வந்து விடுவார்களென்று ஒரு சதித் திட்டம் வகுக்கப்பட்டு வந்தது.



ஸ்ரீ செல்வநாயகம்

பல நூற்றாண்டுகளாக வர்த்தகக் கோட்டைகளைப் போல் விளங்கிய யாழ்ப்பாணத் துறைமுகங்களை 1914-ம் ஆண்டில் மூடினார்கள். ஏற்றுமதி இறக்குமதிகளெல்லாம் ரயில் மூலமாகவோ, அல்லது கொழும்பு, காலி துறைமுகங்களின் மூலமாகவோ தான் நடைபெற வேண்டுமென்று சட்டமியற்றினார்கள். அதனால் யாழ்ப்பாணத் துறைமுகங்கள் பாழடைந்து போயின. அங்கிருக்கும் பிரம்மாண்டமான பண்டகசாலைகளில் புல் முளைத்துப் போயிற்று. அதன் விளைவாக இன்று தமிழர் வசிக்கும் வட இலங்கையில் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது.

சர்க்காரின் சந்தேக புத்தி

இந்த அநியாயத்தை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று சென்ற வாரம் இலங்கை பார்லிமெண்டில் காங்கேசன் துறை மெம்பர் ஸ்ரீ எஸ். ஜே. வி. செல்வநாயகம் வாதாடினார். ஆனால் ஸ்ரீ செல்வநாயகம் என்ன யோசனை சொன்னாலும் அதில் ஏதாவது ஒரு 'பொடி'யிருக்கு மென்பது சிங்கள மந்திரிகளின் பீதி. வட இலங்கைக்குச் சுயநிர்ணய உரிமை கொடுத்து அதைத் தென்னிந்தியாவிலுள்ள தமிழ் நாட்டுடன் சமஷ்டியில் சேர்த்துவிட வேண்டுமென்று பகிரங்கமாகச் சொன்னவர் ஸ்ரீ செல்வநாயகம். இலங்கையின் மிகப் பெரிய வக்கீல்களில் அவர் ஒருவர். யாழ்ப்பாணத்தில் மிகுந்த செல்வாக்குடையவரும்கூட. யாழ்ப்பாண தீப கற்பமும் தமிழ்நாடும் ஒரே தேசமாக சமஷ்டியி லிருக்க வேண்டுமென்று சொன்ன ஸ்ரீ செல்வநாயகத்தின் வாயிலிருந்து இலங்கை — இந்திய போக்குவரத்துக்காக வட இலங்கைத் துறைமுகங்களை மறுபடியும் திறக்க வேண்டுமென்று ஒரு யோசனை வந்தால், அதற்கு அரசாங்கம் இணங்குமா?

அன்று ராஜாஜி சொன்னார்

ஸ்ரீ செல்வநாயகத்தின் யோசனையை நிராகரிக்கப் போக்குவரத்து மந்திரி ஸர் ஜான் கொத்தலாவல் சொன்ன காரணங்கள் விசித்திரமானவை. "இந்தியாவிலிருந்து கொள்ளை நோய்கள் இலங்கையிலே இறக்குமதியாவதைத் தடுக்க மண்டபத்தில் ஒரு சுகாதார முகாமை லட்சக்கணக்கான ரூபாய் செலவில் பராமரித்து வருகிறோம். இலங்கைக்கு வரும் எல்லாப் பிரயாணிகளையும் மண்டபத்தில் வைத்திய பரிசோதனை செய்து அனுப்புகிறோம். யாழ்ப்பாணத் துறைமுகங்களைத் திறந்தால் இந்தியாவிலுள்ள பயங்கரமான வியாதிகளுக்கெல்லாம் இலங்கையில் கதவு திறந்து விட்டது போலாகிவிடும். மண்டபத்திலிருப்பதைப் போன்ற சுகாதார முகாம்களை யாழ்ப்பாணத் துறைமுக நகரங்கள் ஒவ்வொன்றிலும் நிறுவுவதென்பதும் நமக்குக் கட்டுப்படியாகாது!" என்று அவர் சமாதானம் சொன்னார். இது ஒரு நொண்டிச் சாக்கு என்பது எல்லோருக்கும் தெரியும்.

நிற்க, மண்டபத்தில் இந்தியப் பிரயாணிகளுக்கு ஏற்படும் அவமானமும் அவமதிப்பும் இப்பொழுது சரித்திரப் பிரசித்தமாகி விட்டன. கவர்னர்-ஜெனரல் ராஜாஜி சென்னை மாகாணப் பிரதம மந்திரியாயிருந்தபொழுது மண்டபம் முகாம் நிலைமையை நேரில் பார்த்துவிட்டு "என் கையில் அதிகாரம் இருந்தால் இந்திய மண்ணிலிருந்து மண்டபம் முகாமை அப்புறப்படுத்துவதே எனது முதல் வேலையாயிருக்கும். இந்தியர்களை இந்திய மண்ணிலேயே வைத்து ஒரு அந்நிய அரசாங்கம் அவமானப் படுத்துவதா? இதென்ன அக்கிரமம்?" என்று வாய் விட்டுச் சொன்னார். இப்பொழுது அதிகாரம் ராஜாஜியிடமும் அவரது சகாக்களிடமும் இருக்கிறது. இந்தியாவின் அவசரப் பிரச்னைகளிலே ஈடுபட்டிருக்கும் அவர்களது கவனம் மண்டபம் முகாமிடம் சிறிது திரும்புமாயின், அதன் கதி என்னவாகுமென்பதைப் பற்றிச் சந்தேகப்படத் தேவையில்லை. அப்பொழுது இலங்கை அரசாங்கம் என்ன செய்யும்? மண்டபம் சுகாதார முகாமை யாழ்ப்பாணத்துக்குக் குடிமாற்றி வட இலங்கைத் துறைமுகங்களை மறுபடியும் திறக்கச் சம்மதிக்குமா? அல்லது சுகாதார முகாமுக்குச் சிங்கள பூமிதான் பொருத்தமான ஸ்தலமென்று வாதாடி யாழ்ப்பாணத்துக்குக் கதிமோட்சமே இல்லாமற் செய்து விடுமா?

"நாங்கள் என்றும் இந்தியர்களே!"

இந்திய சுதந்திரத்தின் முதலாவது ஆண்டு விழாவை இலங்கை வெகு சிறப்பாகக் கொண்டாடியது. இதற்காக நடந்த விருந்துகளிலும் பொதுக் கூட்டங்களிலும் சகல வகுப்புத் தலைவர்களும் கலந்துகொண்டார்கள். டவுன் ஹாலில் நடந்த ஒரு கூட்டத்தில் தமிழ் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலம் இந்தியர்கள் மனதிலிருந்த ஒரு பெரிய சந்தேகத்தை நீக்கினார். "யாழ்ப்பாணத் தமிழர்களாகிய நாங்கள் பூர்வத்தில் இந்தியர்களாயிருந்தோம்; இப்பொழுதும் இந்தியர்களாயிருக்கிறோம். இனி எப்பொழுதும் இந்தியர்களாகவே இருப்போம். இந்தியர்களின் பிரஜாவுரிமைப் போராட்டத்தில் தமிழ் காங்கிரஸின் பரிபூரண ஒத்துழைப்பை இந்தியர்கள் எப்பொழுதும் எதிர்பார்க்கலாம்" என்று அவர் முழங்கினார். ஸ்ரீ பொன்னம்பலம், மந்திரி பதவியை ஏற்பதற்கு இந்தியப் பிரச்னையில் அவர் கொண்டிருக்கும் மனோபாவம்தான் பெரிய முட்டுக்கட்டையாக இருக்கிறது போலும். பார்லிமெண்டுக்கு வந்திருக்கும் இலங்கை பிரஜாவுரிமை மசோதாவையும் குடியேற்றக் கட்டுப்பாடு மசோதாவையும் இந்தியர் அந்தஸ்தை நிர்ணயிக்கும் வரையில் ஒத்திவைக்க வேண்டுமென்று எதிர்க் கட்சியினர் எவ்வளவோ முயன்று பார்த்தார்கள். ஆனால் பிரதமர் சேனநாயகா அவர்களுடைய கோரிக்கையை ஏற்கக் கண்டிப்பாக மறுத்து விட்டார். இவ்விரண்டு மசோதாக்களும் சட்டமாகி விட்டன.

தொட்டிற் பழக்கம்!

கணித ஆசிரியர் ஒருவர் தம்முடைய உடம்பைப் பரிசோதித்துப் பார்த்துக் கொள்வதற்காக ஒரு டாக்டரிடம் சென்றார். டாக்டர் அவரைப் பரிசோதிக்கும்போது, "ஸார், உள்ளே ஒரு மூச்சு இழுத்து 99, 99, 99 என்று மூன்று தடவை சொல்லுங்கள், பார்க்கலாம்!" என்றார்.

அவ்வளவுதான்; கணித ஆசிரியர் பளிச்சென்று "இருநூற்றுத் தொண்ணூற்றேழு!" என்று பதில் அளித்தார்!



மறைந்த ஒளி

எஸ். சாமுவேல்..

இரண்டாவது பரிசுக் கதை

4

பொழுது சாய இன்னும் கொஞ்ச நேரமிருந்தது. வாழைத் தோட்டத்தையும், கிழக்கு வயலையும் முறையே சுற்றிப் பார்த்து விட்டுக் கால்வாய்க் கரை மேல் ஏறினேன். எதிரே கரையோரமாகக் குனிந்து ஏதோ பறித்துக் கொண்டிருந்தாள் வேலம்மாள். முதலில் 'அவள் தானா?' என்ற சந்தேகம் உதித்தது. அருகில்சென்றதும் 'அவளே' தான் என்று அறிந்து கொண்டேன்.

"வேலம்மா! என்ன பறிக்கிறே?" என்று நான் கேட்டதும் அவள் நிமிர்ந்து என் பக்கம் திரும்பினாள். "சாமி! நீங்க எப்போ வந்தீங்க? படிப்பெல்லாம் முடிஞ்சு போச்சா? பார்த்து ஒரு வருஷமாச்சே! சௌக்யம்தானா?" என்று சிரித்த முகத்துடன் கேட்டாள்.

தாமரை மலர் மலர்வது போன்று மலர்ந்த அவள் முகத்தின் அழகு என் உள்ளத்தைக் கவர்ந்தது.

"என் படிப்பு முடிந்து நான் வந்து நாலைந்து நாட்களாகின்றனவே!—அதிருக்கட்டும், நீ என்ன பறிக்கிறே!" என்று நான் மீண்டும் கேட்டேன்.



"கறிக்கு ஒன்று மில்லை; பல கீரை பறிக்கிறேன்!"

"பல கீரை என்றால் என்ன வேலம்மா?"

"தெரியாதுங்களா, சாமி! எங்களைப் போன்ற ஏழைகளுக்குத்தான் தெரியும். பாருங்கோ, இது சிறு கீரை, இது முள்ளுக் கீரை, இது பசலிக் கீரை, இது சவுரிக் கீரை, இது சாரணைக் கீரை. இது குப்பைக் கீரை, இது மணத்தக்காளிக் கீரை— இவற்றைத்தான் பல கீரையின்னு சொல்லுவாங்க!" என்று சொல்லிக் கொண்டே, தன் முந்தாணியில் போட்டு வைத்திருந்த கீரை வகைகளை யெல்லாம் எனக்குப் புரட்டிப் புரட்டிக் காண்பித்தாள் அவள்.

"இதைக் கொண்டுபோய் என்ன செய்வாய்?" என்றேன்.

"இதை கொறுக்க அரிந்து, கொத்துக் கீரை பண்ணலாம்; தொட்டுக்கிட நல்லா யிருக்கும்" என்றாள்.

"ஆமாம். அதன் ருசி எனக்குத் தெரியுமா! நீ சொல்லுகிறபோதே என் நாக்கில் தண்ணீர் சொட்டுகிறது. தின்னு பார்க்கணும்னு எண்ணம்கூட வருகிறது. ஆனால் யார் வீட்டுக்குப் போவது?"

"யார் வீட்டுக்குப் போகணும்? என் வீட்டுக்கு வாங்களேன். வந்து, நான் சமைத்ததைச் சாப்பிட்டுப் பாருங்கோ! அம்மாடி! நீங்களாவது, இந்த ஏழைக் குடியானவன் மக வீட்டுக்கு வருவதாவது!— மலைக்கும் மடுவுக்கும் உள்ள தூரம்தான். இந்தச் சென்மத்திலா நடக்கும் அது?"

"வேலம்மா! அதற்குக் கூடவா வேறு ஜென்மம் வேண்டும்? இல்லை, நான் உன் வீட்டுக்கு வரக்கூடாது என்றுதானே அப்படிச் சொல்லுகிறாய்?"

அவள் சிரித்துக்கொண்டே, "சாமி! நீங்க அப்படி நினைக்காதேயுங்க! நீங்களோ பண்ணை எஜமான் பிள்ளை; நானோ பண்ணைக்காரன் மவ. இந்த ஏழை கையாலே இட்டதை நீங்க சாப்பிடும்படியான அந்தஸ்து எனக்கு ஏது சாமி?"

"அப்படிச் சொல்லாதே, வேலம்மா! உன் வீட்டுக்கு இன்றிரவு வரத்தான் போகிறேன். வந்து, நீ சமைத்த கறியைச் சாப்பிட்டுப் பார்க்கத்தான் போகிறேன். நான் வரலாமோ, இல்லையோ?"

"நான்தான் அப்பவே சொன்னேனே, தாராளமாக வாருங்கோ! என் அப்பனும் உங்களைப் பற்றியே எப்பவும் பேசிக்கிட்டிருப்பாங்க.— 'மவராஜா! - தங்கக் குணமல்லவா? - நல்லாயிருக்கணும்னு!'—சாமி! பொழுது போகிறது. நீங்களும் வீட்டுக்குத்தானே! வாருங்க, கரை வழியே போகலாம்!" என்றாள்.

நான் உடனே விரைந்து வாழைத்தோட்டத்திற்குள் புகுந்து, நன்றாக முற்றின பத்துப் பன்னிரண்டு காய்களைப் பறித்துக் கொண்டு வந்து அவள் மடியில் போட்டேன். பிறகு இருவரும் சேர்ந்து நடக்க ஆரம்பித்தோம்.

"சாமி! வாழைக்காய் யாருக்கு?" என்று கேட்டாள்.

"'கறிக்கு ஒன்றுமில்லை, பல கீரை பறிக்கிறேன்' என்று சொன்னாயே, இதையும் கொண்டுபோய்க் கறி பண்ணி உன் அப்பனுக்குப் போடு!" என்றேன்.

"சாமி! எனக்கு வேண்டாம். யாரும் என்னவும் நினைச்சுக்கிடப் போறாங்க! என்னால் உங்களுக்கு ஒரு இடைஞ்சலும் வரக்கூடாது!" என்றாள்.

"எனக்கு என்ன இடைஞ்சல் வரும்? சும்மா வைத்துக்கொள்" என்றேன்.

"எஜமான், பின்னாலே யாரோ வருகிறாங்க; பேச்சுச் சத்தம் கேக்குது. நம்ம இரண்டு பேரும் இந்த அந்தி வேளையிலே தன்னந் தனியாகப் பேசிக்கிட்டுப் போறதைக் கண்டா, நாளையே ஊராவது பிராது கட்டி விடுவாங்க. கொஞ்சம் வேகமாகப் போய்விடுவோமா?" என்றாள்.

"பிராதியாவது, கிராதியாவது! நாம் என்னத்தைப் பண்ணி விட்டோம்? பேசிக்கிட்டுப் போகக் கூடாதோ? அது நம்

முடைய இஷ்டம். யார் அதைத் தடுக்க முடியும்?'' என்றேன்.

"நீங்க ரொம்பத் துணிஞ்சவங்க. உங்களுக்கென்ன, ஒன்னுமில்லே; பெண் பிள்ளை, எனக்குத்தான் கஷ்டம் வரும். எதுக்கும் கொஞ்சம் வேகமாகவே போய் விடுவோமே!'' என்று சொல்லிக் காலை எட்ட வைத்தாள்.

அதற்குள் ஊரும் வந்தது. இருவரும் அங்கிருந்த ஒரு வேப்பமரத்தின் அடியில் நின்றோம்.

"வேலம்மா! நீ இப்போ எங்க வீட்டுக்கு வேலைக்கு வருவது கிடையாதோ?'' என்றேன்.

"இல்லே, எஜமான்!'' என்றாள்.

"ஏன் நின்று போனாய்?''

"நான் பெரிய மனுஷி யானதும் எங்கப்பன் என்னை வீட்டு வேலைக்காவது கூலி வேலைக்காவது போக வேண்டாமென்று சொல்லிவிட்டான்!''

"அதிருக்கட்டும்; உங்கப்பனும் இப்போ பண்ணை வேலை செய்வது கிடையாதோ? அவனை எங்க வீட்டுப் பக்கமே காணோமே!''

"அது சமாச்சாரம் வேறே எஜமான்! போன வருஷத்திலே—மழையிலே—எங்க வீடு விழுந்து போயிட்டது. பெரிய எஜமானிடம் ரூபாய் ஐம்பது கடன் வாங்கி எங்க அப்பன் வீட்டைக் கட்டினான். வாங்கிய ரூபாயை வட்டியும் முதலுமாக ஆறுமாத காலத்திற்குள் திருப்பித் தருவதாகச் சொல்லி யிருந்தானும். ஆனால் அந்தத் தவணைக்குள் கொடுக்க முடியவில்லை. பெரிய எஜமானுக்குக் கோபம் வந்துவிட்டது. பண்ணைக்கார முத்துவோடே வந்து எங்க வீட்டு மயிலைப் பசுவை அவிழ்த்துக்கிட்டுப் போயிட்டாரு. அது அப்போ சினையா யிருந்தது. எங்கப்பனுக்கு அது மேலே உசுரு. அது போன நாளி லிருந்து அவன் வேலைக்குப் போகலே. ரொம்ப ஏங்கிப் போயிட்டான். என்கிட்ட அடிக்கடி 'ஏ, புள்ளே! பசு கன்னு போட்டவுடன் நல்ல விலைக்கு வித்து உன் கலியாணத்தை முடிச்சு வைக்கணும்னு நினைச்சிருந்தேன். என் நினைவிலே மண் விழுந்துட்டதே' என்று சொல்லிப் பெருமூச்சு விடுவான். நான் அதுக்கு 'எனக்குக் கலியாணமும் வேண்டாம், ஒன்னும் வேண்டாம்; கடன் ஒழிஞ்சதே, அதே போதும்' என்பேன். நான் என்ன சொல்லி என்ன? அவன் மனம் என்னவோ கேட்க மாட்டேன்னுதுங்க. ஏங்கி ஏங்கி இளைச்சுப் போயிட்டான்—சரி, எஜமான்! எனக்கு ரொம்ப நேரமாயிட்டது. நான் போய் வருகிறேன்'' என்றாள்.

"வேலம்மா! நீ சொன்னது எனக்கு ரொம்ப வருத்தமா யிருக்கிறது. நாளைக் காலையிலே நான் பசுவைத் தாயும் பிள்ளையுமாக உங்க வீட்டுக்கு அனுப்பி வைக்கிறேன். ஏழை வயிறு எரிந்தால் எங்கள் குடும்பமே நாசமாகி விடுமே! நீயே பார், வேலம்மா! பகவானுக்கே அது பொறுக்கவில்லை, எங்க அப்பா இப்போது படுத்த படுக்கையாய்க் கிடக்கிறார்—சரி, நீ வீட்டுக்குப் போய் வா, வேலம்மா! உன்னை அதிக நேரம் தாமதப் படுத்திவிட்டேன். கோபிச்சுக்கிடாதே!'' என்று சொல்லிவிட்டுத் திரும்பினேன்.

2

மறுநாள் காலை. பண்ணைக்கார முத்துவுடன் பசுவையும் கன்றையும் ஓட்டிக் கொண்டு சென்று வேலம்மாளின் வீட்டை அடைந்தேன். வேலம்மாள் ஓடோடியும் வந்து கன்றுக் குட்டியைத் தடவிக் கொடுத்தாள். அவள் தகப்பனான சிதம்பரத்தின் கண்களில் பசுவையும் கன்றையும் கண்டதும் ஆனந்தக் கண்ணீர் கலங்கியது. "எஜமான், நீங்க புண்ணியவானுங்க!



தெய்வம் உங்களைக் காக்கும்" என்று சொல்லிவிட்டு, அவன் பசுவைப் பிடித்துக் கொண்டு கொல்லைப்புறம் சென்றான். வேலம்மாள் கைகளினின்றும் கன்றுக்குட்டி துள்ளிக் குதித்து, தன் தாய்க்குப் பின்னால் ஓடிச் சென்றது.

வேலம்மாள் என்னைப் பார்த்து, "எஜமான்! நான் சமைச்ச கீரையைத் தின்னு பார்க்க நேத்து ராத்திரி இங்கே வருகிறவர்களா, நீங்க?" என்றாள்.

"நேத்து இரவு நான்தான் வரவில்லை. ஆனால் நீ சமைத்த கறி என்னிடம் வந்துவிட்டதே! இன்று பார்த்தேன்; மிகவும் நல்லா யிருந்தது!"

"போங்க, எஜமான்! நான் ஒண்ணு கேட்டா நீங்க என்னமோ ஒண்ணைச் சொல்லி என் மனதையே சோதிக்கிறீங்க? —அதிருக்கட்டும், உங்களிடம் எப்படி வந்தது அது?"

"என்ன வேலம்மா, நீதானே கொடுத்து விட்டாய்?"

"நான் யாரிடம் கொடுத்தனுப்பினேன்?"

"முத்துவிடம்தான்!"

"ஆமாம், முத்து வந்தான்! சோத்துக்குத் தொட்டுக்கிட ஏதாவது கொஞ்சம் கொடேன் என்று கேட்டான். நான் கொஞ்சம் கொடுத்தனுப்பினேன். அது எப்படி உங்களுக்காகும்?"

"நான்தான் அப்படிச் சொல்லி வாங்கி வரும்படி அனுப்பினேன். அவனும் வாங்கி வந்தான், தின்று பார்த்தேன்!" என்றேன்.

அவள் ஆச்சரியத்துடன் அப்படியே அசைவற்று நின்றுவிட்டாள்.

* * *

மாதங்கள் பல கடந்தன. இயற்கை எங்கள் மனதில் விதைத்த அன்பின் வித்து முளைத்து ஆழமாக வேரூன்றி நன்றாக வளர்ந்து விட்டது. இளமையின் துணிச்சலில், இன்ப நினைவுகளில் மிதக்க ஆரம்பித்தோம். காதல் வெள்ளம் எங்களை ஆட்கொண்டது. வசந்த காலத்தில் கவலையின்றி அலையும் வண்ணத்துப் பூச்சிகளைப் போல நாங்கள் இருவரும் நாட்களைக் கழித்து வந்தோம்.

அன்று 'கருகரு' வெனப் பொழுது மங்கும் சமயம். ஆற்றுக்குச் சென்று கொண்டிருந்தேன். எதிரே தண்ணீர்க் குடத்தை இடுப்பில் வைத்துக் கொண்டு வேலம்மாள் வந்து கொண்டிருந்தாள். அவளுடைய வதனம் என்றுமில்லாதபடி வாடியிருந்தது. அதற்குக் காரணமும் இல்லாமற் போகவில்லை. அவளுடைய தகப்பன் அவளை வேறொருவனுக்குக் கல்யாணம் செய்து கொடுக்க நிச்சயித்து விட்டான். அந்தப் பேச்சு என் காதுக்கும் எட்டியிருந்தது. என்னைக் கண்டதும் அவள் நின்றுவிட்டாள். அவளால் பேசவே முடியவில்லை. மனதில் எழுந்த குமுறல் வெளிச் செல்ல இடமின்றி அவளுடைய அழகிய முகத்தைக் கறுக்கச் செய்தது. அதைப் பார்த்த என் மனமும் தத்தளித்து அலை மோதியது. ஜனங்கள் அடிக்கடி நடமாடும் பாதையாகையால் அவ்விடத்தை விட்டு நகர்ந்து, பெரிய மடையடிப் பக்கம் உள்ள ஒரு பாறையில் மறைவாக இருவரும் உட்கார்ந்தோம்.

"வேலம்மா, கவலைப்படாதே! பேசாமல் நீ என் வீட்டுக்கு வந்து விடுகிறாயா?" என்றேன்.

"எல்லாம் தங்கள் இஷ்டம். நான் ஒன்றும் சொல்ல வேண்டியது இல்லை. ஆனால் இது விஷயத்தில் நான் உங்களைக் கட்டாயப் படுத்தவும் மாட்டேன். எது உங்களுக்குச் 'சரி' என்று தோன்றுகிறதோ, அப்படிச் செய்யுங்கள்!" என்றாள்.

"நீ என்னோடு வந்து வாழ்க்கையை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். அதுவே என் இஷ்டம். எனக்குப் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்திற்குத் திடீரென்று உத்தரவு வந்துள்ளது. அதிவிரைவில் நான் புறப்பட்டுச் செல்ல வேண்டும். கொஞ்ச நாட்கள் கழித்து வந்து உன்னை அழைத்துக் கொண்டு சென்று, அரசாங்கச் சட்டப்படி மணந்து கொள்கிறேன். நீ தயாராக இருப்பாயா?" என்றேன்.

"எதற்கும் அடியாள் தயார்! கால தாமதம் மட்டும் பண்ணாதீர்கள். காரியம் விபரீதமாகிவிடும். ஊருக்குச் சென்றதும் என்னை மறந்து விடுவீர்களோ?" என்றாள்.

"உன்னை மறப்பதற்கும் இழப்பதற்குமா இத்தனை வருஷங்கள் நேசித்து வந்தேன்?" என்று சொல்லிக்கொண்டே அவளுடைய மலர்க் கரங்களைப் பற்றி மார்பில் வைத்துக் கொண்டேன்.

3

புதிதாக வேலையை ஒப்புக் கொண்டதால் நினைத்தமாத்திரத்தில் லீவு எடுத்துக் கொண்டு வர முடியவில்லை. மாதங்களும்

இரண்டு கழிந்துவிட்டன. அந்த நாட்களில் என் மனம் பட்ட அவஸ்தைக்கு அளவே கிடையாது. ஒருநாள் திடீரென்று என் தந்தைக்கு மிகவும் அபாயகரமா யுள்ளது என்ற செய்தி கிடைத்தது. கொஞ்ச நாட்கள் லீவு எடுத்துக் கொண்டு ஊருக்குக் கிளம்பினேன். நான் வந்த சில தினங்களில் வியாதியால் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த என் தந்தையார் விண்ணுலகை எய்தினார். என் தந்தைக்கு அப்புறம் சொத்துக்களை மேற்பார்வை பார்க்க வேறு ஆட்கள் கிடையாதகையால், நான் பார்த்து வந்த உத்தியோகத்தை உடனே ராஜினாமாச் செய்து விட்டேன். தந்தையின் 'விசேஷம்' கழிந்தவுடன் பண்ணைக்கார முத்துவிடம் வேலம்மாளைப் பற்றிக் கேட்டேன்.

அவன் உடனே, "எஜமான்! அவளுக்குக் கலியாணம் ஆகிவிட்டது. போன மாதம்தான் நடந்தது. அது ஒரு கதை. அவள் ஒரேயடியாக மாட்டேனென்று சாதித்தாள். கலியாணத்துக்கு முந்தின நாள் 'எங்கேயாவது குளம் குட்டையில் விழுந்து செத்து விடுவேன்' என்று ஓட ஆரம்பித்தாள். பெண்கள் எல்லாம் அவளை ஒருவாறு சமாதானப் படுத்தி வச்ச முகூர்த்தத்தில் தாலியைக் கட்டிப் போட்டாங்க!" என்றான்.

என் மனம் பகீரென்றது. உடம்பெல்லாம் வியர்த்து விட்டது. கண்களில் நீர் பொங்கியது.

முத்து திகைத்துப் போனான். "சாமி! ஏங்க என் இப்படி அழுகிறீங்க?" என்று கேட்டான்.

"முத்து, உன்னிடம் ஒரு அந்தரங்கத்தைச் சொல்லுகிறேன். வேலம்மாள் என்னுடையவள்; எனக்குச் சொந்தமானவள். சிறு பிள்ளை முதல் நான் அன்புடன் அவளை நேசித்து வந்தேன். இன்னும் கொஞ்ச நாட்களில் நானே அவளைக் கலியாணம் பண்ணிக்கொள்வதாகச் சொல்லி விட்டுச் சென்றேன். அதற்குள் என்னவெல்லாமோ நடந்துவிட்டது!" என்றேன்.

"எஜமான்! அவளுக்கு அவ்வளவுதான் கொடுத்து வைத்தது!" என்றான் முத்து.

அவன் என் மனதை அறிவானா, பாவம்!



குழந்தை:— அம்மா! நான் ஜன்னலோரமாக உட்கார்ந்து வேடிக்கை பார்க்கிறேன், அம்மா!

தாயார்:— வெளியிலே வேடிக்கை யொன்று மில்லை; நீ பார்க்கவேண்டிய வேடிக்கை யெல்லாம் வண்டிக்குள்ளேதான் இருக்கிறது!

நாட்களும் மாதங்களும் பறந்தோடின. வருஷமும் ஒன்று கழிந்தது. ஆனால் வேலம்மாளின் புன்னகை பூத்த தாமரை முகம் மட்டும் என் கண்களை விட்டு அகலவேயில்லை. அது என் கண்களிலேயே நிரந்தரமாகத் தங்கி விட்டது. நான் அன்று முத்துவிடம் சொல்லி அழுதது மெதுவாக அவனிடமிருந்து அவன் மனையாளுடைய காதுகளுக்குச் சென்று, கர்ப்பவதியாகி ஊருக்கு வந்திருந்த வேலம்மாளின் காதுகளுக்கும் எட்டியது.

அன்று இரவு என் தந்தை இறந்த துக்கத்தைக் கேட்க வேலம்மாள் என் வீட்டுக்கு வந்தாள். தாழ்வாரத்தில் போட்டிருந்த கட்டிலின்மேல் நான் உட்கார்ந்திருந்தேன். அவள் என் முன்னால் பதுமைபோல் வந்து நின்றாள். "வேலம்மா! எப்போ வந்தே? சௌக்கியந்தானா?" என்று கேட்டேன்.

"எஜமான்! என்னுடைய வாழ்க்கை வீணாகப் போச்சு! என் சரீரத்தை இன்னொருவன் அடிமையாக்கிக் கொண்டு விட்டான். ஆனால் என் உள்ளத்தை அடிமைப்படுத்த உங்களைத் தவிர வேறு யாரால் முடியும்?" என்று சொல்லிவிட்டு, அவள் விம்மி விம்மி அழுதாள்.

"கண்ணீர் விட்டு நாம் கண்ட பயன் யாது? வீணாக அழாதே! நீ என் அன்பின் ஒளியா யிருந்தாய்; அந்த ஒளி மறைந்து



விட்டது. மறைந்த ஒளியில் நான் அந்தகனு னேன்; உன்னோடு சகலத்தையும் இழந்தவ னுனேன். இருந்தபோதிலும் என் உள்ளம் கவர்ந்த உன் களங்கமற்ற முகம் என் வாழ் வின் கடைசிவரை என் கண் முன்னின்று என்னைத் தேற்றும்'' என்றேன்.

என்னிடம் அவள் விடை பெற்றுக் கொண்டு சென்று விட்டாள். நான் கட்டி லில் மறுபடியும் உட்கார்ந்து கொண்டு, படிப்பு வாசனை யறியா அந்தப் பேதைப் பெண், தான் கொண்ட காதற் சிறப்பால் அடைந்த ஞானப்பெருக்கை எண்ணி எண்ணிப் புலம்பிக் கொண்டிருந்தேன்.

4

காலச்சக்கரம் துரிதமாகச் சுழன்று சென்றது. குடிப் பழக்கத்தில் ஏற்கெனவே மூழ்கி யிருந்த வேலம்மாளின் கணவன் எல்லாவற்றையும் விற்றுக் குடித்துத் தீர்த்திருனுன். குடி வெறியில் வந்து வேலம்மாளைத் திட்டவும் அடிக்கவும் ஆரம் பித்தான். ஊரில் வேறு பகைமை ஏற்பட் டது. ஒருநாள் மதுபானக் கடையில் நடந்த சண்டை முற்றிக் கலகம் பிறந்தது. அதன் வினைவாகச் சிலர் படுகாயமுற்றனர். தலை மறைவாக அலைந்த வேலம்மாளின் கண வனைப் போலீஸ் அதிகாரிகள் கைது செய்து சிறையில் அடைத்தனர். கோர்ட் டில் அவனுக்குச் சில வருடங்கள் கடுங் காவல் தண்டனை விதிக்கப் பட்டது. தன்னுடைய இரண்டு குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு வேலம்மாள் சொந்த ஊர் வந்து சேர்ந்தாள். வயதான சிதம்பரம் தன் மகளின் பரிதாப நிலையைக் கண்டு மனமுடைந்து அதிவிரைவில் கால மானுன். ஏங்கி நின்ருள் வேலம்மாள். நான் அடிக்கடி முத்துவின் மூலமாக அனுப்பி வந்த பண உதவிகூட அவளுடைய நிம்மதி யிழந்த மனதைச் சந்தோஷப் படுத்தவில்லை.

மழைகாலம் வந்தது. ஒரு நாள் இடி இடித்துப் பெருமழை பொழிந்தது. வயல் களில் அப்பொழுதுதான் நாற்று நடப்பட் டிருந்தது. இருட்டி வெகு நாழிகை ஆகி யும் மழை விட்டபாடில்லை. வீட்டில் முத்துவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. வயலில் நட்டிருந்த நாற்றின்மேல் அவன் கவனம் சென்றது. கொஞ்சம் மழை விட்டதும் மண் வெட்டியை எடுத்துக் கொண்டு வயலை நோக்கி விரைந்து சென் ருன். சிறிது நேரத்துக்குப் பிறகு, 'பெய் கிற மழையைப் பார்த்தால், மடையடிப் பக்கம் கால்வாய் உடைப் பெடுத்துவிடும் போலிருக்கிறதே!' என்று இன்னொரு பண்ணையாளான கறுப்பன் என்னிடம் சொன்னுன். நான் ஒரு லாந்தரை எடுத் துக் கொண்டு அவனையும் அழைத்துக் கொண்டு அங்கே விரைந்து சென்றேன். என் கையிலிருந்த லாந்தர் வெளிச்சத்தைக் கண்டதும் முத்து உரக்கக் கூவினுன்.

"எங்கே உடைப்பு? மண்ணை வெட்டிப் போடு!" என்று திரும்பப் பதில் கொடுத் தான் கறுப்பன்.

"உடைப்பு மில்லே, கிடைப்பு மில்லே! யாரோ ஒரு பொம்பளை கால்வாயில் விழுந் துட்டா! கொண்டு வா, லாந்தரை!" என் ருன் முத்து.

ஓடும் தண்ணீரில் மூழ்கித் தத்தளித்துச் சென்று கொண்டிருந்த அந்தப் பெண்ணை முத்துவும் கறுப்பனும் கஷ்டப்பட்டுத் தண் ணீரினின்று கரைக்கு இழுத்து வந்தனர்.

தண்ணீரில் விறைத்துப்போன அவள் உடம்பில் மீண்டும் உயிருண்டாக்குவதற்குள் எங்கள் உடம்பே விறைத்துப் போயிற்று.

அவள் யார் என்று அடையாளம் தெரிந்த தும், "வேலம்மா! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? இது என்று யிருக் கிறதா?" என்று நான் மனக்கசப்புடன் கேட்டேன். அவள் பதில் சொல்லவில்லை.

நள்ளிரவு. மூர்த்தி ஓடி வந்து அவசர அவசரமாக என்னைக் கூப்பிட்டான். என்ன வென்று பரபரப்புடன் கேட்டேன். "வேலம் மாளின் நிலைமை மிகவும் மோசமாகி விட்டது; தங்களைப் பார்க்க வேண்டு மென்று சொன்னாள்" என்றான்.

பதட்டத்துடன் எழுந்து சென்றேன். பனை ஓலைகளால் ஆகிய குடிசை. உள்ளே ஒரு மூலையில் கைவிளக்கு எரிந்து கொண் டிருந்தது. பாயில் இரண்டு குழந்தைகள் படுத்துக் கவலையின்றி தூங்கிக்கொண் டிருந் தன. ஒரு பழைய கட்டிலில் வேலம்மாள் படுத்திருந்தாள். "வேலம்மா! உனக்கு என்ன செய்கிறது!" என்றேன்.

அவளால் பேச முடியவில்லை. கைகளைக் கூப்பி என்னைத் தொழுதுவிட்டுத் தன் தலையைத் திருப்பிக் குழந்தைகள் பக்கம் பார்வையைச் செலுத்தினாள். அவள் எண்ணத்தை நான் அறிந்து கொண்டேன்.

"வேலம்மா, கவலைப்படாதே! அந்தக் குழந்தைகள் இனி என் சொந்தப் பிள் ளைகள். நான் அவர்களைக் காப்பாற்று கிறேன்!" என்றேன்.

அவள் என் கையைப் பிடித்துக் கொண்டு மலர்ந்த முகத்துடன் ஏதோ சொல்ல முயன்றாள். அதற்குள் பிரக்ஞை யிழந்து மறுபடியும் நித்திரையில் மூழ்குவதுபோல் கண்களை மூடிக்கொண்டாள். விடுதலை யைக் கடைசியாக அடைந்த அவள் ஆத்மா, உடலை விட்டுப் பிரிந்து சென்றது.

5

நாட்களும் மாதங்களும் ஓடின. ஒரு வருடமும் கழிந்தது. அவளுடைய தினம் வந்தது. அந்தி வேளை; அவளை அடக்கம் பண்ணிய இடத்திற்குச் சென்று கையோடு கொண்டுவந் திருந்த சந்தனத்தைத் தெளித்துப் புஷ்பங்க ளைப் பரப்பி. ஊது வத்திகளைக் கொளுத்தி வைத்து விட்டுக் கொஞ்ச நேரம் அசை வற்று நின்று கொண் டிருந்தேன். கால்வாய்க் கரை கோயிலின் மணி யோசை கேட்டதும் சுய உணர்வு வந்து, அவ் விடத்தை விட் டுப் புறப்பட்டேன்.



எதிரே கறுத்த உயரமுள்ள ஒருவன் வந்து கொண்டிருந்தான். கிருதா மீசை யுடன் விளங்கிய அந்த மனிதன் என்னைப் பார்த்து, "ஐயா! சமுசாரி சிதம்பரத்தின் மவளை வைச்ச இடம் எது ஐயா, இங்கே?" என்று கனிந்த குரலில் கேட்டான்.

நான் திடுக்கிட்டேன். "எதற்காகக் கேட்கிறாய், அப்பா?" என்றேன்.

"அவளை வைச்ச இடத்தையாவது நான் பார்க்கணும், ஐயா! அவ என் பெண் சாதியுங்க; பறி கொடுத்துட்டேனே!" என்று அழ ஆரம்பித்தான்.

அவன்தான் வேலம்மாளின் கணவன் என்று அறிந்தேன்.

"நீ எப்போது ஜெயிலிலிருந்து விடுதலை யானாய்?" என்று கேட்டேன்.

"ஒரு வாரம் ஆச்சுங்க; நேராக இங்கே வந்தேன். வந்த இடத்தில் அவ மாண்டு போனா என்று கேள்விப் பட்டேன். நான் பாவிங்க, அவ என்னை விட்டுப் போயிட்டா. புண்ணியவதி!" என்றான்.

"அப்பா! விதியை வெல்ல நம்மால் முடியாது. இதோ பார்! இதுதான் அவளை வைத்த இடம்" என்று அந்த இடத் தைச் சுட்டிக் காட்டினேன்.

"ஐயா, இங்கே சந்தனம் தெளிச்சிருக்கு. பூப் போட்டிருக்கு, வத்தி எரிஞ்சு கொண் டிருக்கே—யார் வந்தாங்க?" என்றான்.

"நான்தான் அவைகளைச் செய்து விட்டுத் திரும்புகிறேன். அவள் இறந்த தினம்தான் இன்று!" என்றேன்.

அவன் திகைத்துப் போனான். "சாமி! நீங்கதானா பண்ணினே எஜமான்?" என்று வாய் பொத்திக் கேட்டான்.

"ஆமாம்" என்றேன்.

அவன் உடனே கீழே விழுந்து என்னை வணங்கிவிட்டு, "எஜமான்! நான் உங்க

அடிமையுங்க. வேலம்மா சிக்காம் இடக்கையில் எவ்வளவோ உதவி செய்திங்களாம். அவ செத்த பிறகு என் புள்ளேகளே வேறு காப்பாத்தி வருகிறீங்களாமே! எல்லாம் கேள்விப்பட்டேன், எஜமான்! என் குலதெய்வம் நீங்க. எனக்குப் புத்தி வந்துடுச்சு. என்னையும் உங்க பண்ணேக்காரனுகச் சேர்த்துக் கொண்டு காப்பாத்தணும், எஜமான்!" என்றான்.

அவனே அழைத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து அவனுடைய பிள்ளேகளே ஒப்படைத்தேன். அவன் அவைகளேக் கட்டிக்கொண்டு மனம் புழுங்கி அழுதான். வேண்டிய புத்திமதிகளேச் சொல்லி அவனேப் பண்ணேக்காரர்களில் ஒருவனுகச் சேர்த்துக் கொண்டேன். இரண்டொரு நாள் என் வீட்டிலே தங்கி யிருந்துவிட்டுத் தன் பிள்ளேகளே அழைத்துக்கொண்டு சேரியிலிருந்த தன் மாமனின் பழைய வீட்டுக்கு அவன் சென்று விட்டான். என் மனம் இப்பொழுதுதான் நிம்மதி யடைந்தது. கீழே உட்கார்ந்தேன்.

"சாமிநாதா, நாளேக் காலையில் ஹரிஜனங்களின் ஆலயப் பிரவேசம். சேரியில் ஒரே உற்சாகம், போ!" என்று சொல்லிக் கொண்டே வந்தான் என் நண்பன்.

"சந்தோஷமான செய்தி! ஜாதிக்கட்டும் சமூகத் தடைகளும் நீங்கி யாவரும் சமம் என்று உணர்ந்து ஒற்றுமையுடன் இன்புற்று வாழ இவைகள் எல்லாம் ஆரம்ப காரியங்கள்; வருங்கால அமைதிக்கு அறிகுறி. நாளேக் காலே என்னுடன் வருகிறயா? ஆலயத் திற்குச் 'சகோதர' ஹரிஜனங்களுடன் சேர்ந்து சென்று, நாமும் பேதா பேதமற்ற ஆண்டவனேத் தரிசிப்போம்" என்றேன்.

"பேஷாக வருகிறேன்" என்றான்.

"மனிதன் மனதின்கண் ஏற்படும் அதிசய மாறுதல்கள் காலத்தின் செயல் தானே?" என்றேன்.

"இல்லே; எல்லாம் எம்பெருமானின் திருவுள்ளம்" என்றான் என் நண்பன்.

காலக்ஷேபம்

நண்பர்:—டாக்டர் ஸார்! உங்களிடம் எந்த நோயாளி வந்தாலும் அவரை 'என்ன சாப்பிடுகிறீர்!' என்று கேட்கிறீர்களே, அவர் சாப்பிடுவது என்னவென்று தெரிந்தால் வியாதியைச் சொல்லிவிட முடியுமா?

டாக்டர்:—அப்படியில்லே; என்ன 'பில்' போடலாம் என்பதற்காகத்தான் அவர் சாப்பிடும் ஆகாரத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுகிறேன்!

●

விருந்தாளி (வண்டிக்காரனிடம்):—அப்பா, வண்டியைக் கொஞ்சம் வேகமாக விடு. ரயிலுக்கு நேரம் ஆகி விட்டது. ரயில் தப்பி விடுமோ என்று எனக்குப் பயமாயிருக்கிறது.

வண்டிக்காரன்:—அதைப் பற்றி நீங்கள் கொஞ்சங்கூடப் பயப்பட வேண்டாம். அந்தக் கவலே எனக்கு இல்லேயா? நம்ம எஜமான் 'அடே, மருதை! ரயிலு இவிலு தவறிப் போச்சு என்று இவரைத் திருப்பி வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்தாயோ, அப்புறம் உன் வேலே தொலேஞ்சுதுன்னு தீர்மானமா வச்சுக்கோ!' என்று எச்சரிக்கை பண்ணி யிருக்கிறாரே!

சித்திரக்காரர்:—சில முட்டாள்களுக்கு என் சித்திரங்களின் மதிப்பே தெரிய மாட்டேனென்கிறது!

நண்பன்:—விட்டுத் தள்ளுங்கள்; சில முட்டாள்கள் பிரமாதமாகச் சிலாகிக்கத் தொடங்கி விடுகிறார்களே, அதை நினைத்துக் கொண்டால் ஆறுதலாயிருக்குமே!

●

அப்பா:—நீ எப்பொழுதும் பலாத்காரத்தை உபயோகிக்கக் கூடாது. உன்னே எந்தப் பையனுவது கன்னத்தில் அடித்தால் அவனுக்கு இன்னொரு கன்னத்தையும் காண்பிக்க வேண்டும்.

மகன்:—சரிதான், அப்பா! ஆனல் அந்தப் பையன் என்னே விடச் சின்னவனு யிருந்தால்...?

●

"உங்களுக்கு அந்தப் பிள்ளேயாண்டான் மேலே நம்பிக்கை யிருக்கிறதா?"

"நம்பிக்கையா! என் உயிரையே அவனிடம் ஒப்பித்து வைப்பேனே!"

"அது இருக்கட்டும்; அவனிடம் ஏதாவது மதிப்புள்ள சாமானுக ஒப்படைக்கலாமா என்று கேட்கிறேன்!"

இறங்கி வந்து சாட்சி சொல்லு!

★

[அரசியல் நிர்ணய சபை நியமித்துள்ள மாகாணப் பிரிவினை விசாரணைக் கமிஷன் செப்டம்பரில் சென்னைக்கு வரப்போகிறது. அந்தச் சமயம் மலையிலிருந்து இறங்கி வந்து சாட்சி சொல்ல வேண்டுமென்று ஸ்ரீ வேங்கடாசலபதி கோரப்படுகிறார்.]

★

1. ஏழு மலையப்பா, எங்கள் வினை தீர்ப்பவனே!
கூறிவிடு சாட்சி கூசாமல் கமிஷனிடம்
நீதிநெறி யுரைத்து நேர்மையுள்ள தமிழருக்கு
ஆதிமுதல் நீயே ஆளான தெய்வமென்று
  ஏழுமலை யாண்டவனே, இறங்கி வந்து சாட்சி சொல்லு!

2. தங்கை தவக்குமரி தன்னைத் தனியாகப்
பொங்கும் கடல்முனையில் புரிந்துவரும் காவலையும்
இவ்விதமாய்ச் சொல்லு எல்லை நிலைநாட்ட
பங்கமேதும் வாராமல் பார்த்துக்கொள் ஆண்டவனே!
  கோவிந்த கோவிந்தா! குதித்துவந்து சாட்சி சொல்லு!


3. ஆதியிலே ஆழ்வார்கள் அழகாய்த் தமிழிலேப்
பாடியதைக் கேட்டுப் பரவசமாய் நின்றவனே!
சூதில்லை தாழ்ச்சியில்லை சொந்தம் தமிழருக்கே!
சாதித்துக் கூறிடுவாய் சங்கத் தமிழ்காட்டி
  திருவேங்கடத்தானே, தீர்த்துவைக்கச் சாட்சி சொல்லு!

4. புரட்டாசி மாதம் பிறந்துவிட்டால் போதுமப்பா!
இருப்பார்கள் உனக்காக இரவுபகல் பட்டினியாய்
சிறப்பாக உன்மலைக்குச் செல்வார்கள் யாத்திரைதான்
கொடுப்பார்கள் காணிக்கை குவித்திருக்கக் காட்டப்பா!
  பெரிய பெருமாளே! பிரபுவே நீ சாட்சி சொல்லு!

5. பிள்ளை பிறந்திடவும் பேய்பிடித்தால் ஓடிடவும்
கல்யாண மாகிடவும் காச்சல் தணிந்திடவும்
எல்லாம் கூட்டிவைக்கும் எம்பெருமான் நீயென்று
சொல்லும் தமிழருக்குச் சொந்தமென்றால் குற்றமுண்டோ?
  வேங்கடாசலபதியே! விரைந்துவந்து சாட்சி சொல்லு!

—காட்டூர் கண்ணன்.

சுண்டெலியின் தந்திரம்



பி. எஸ். மணி

இரண்டு சுண்டெலிகள் 'கிறீச், கிறீச்' என்று சத்தமிட்டுக் கொண்டு வளையை விட்டு வெளியே வந்தன. அப்பொழுதுதான் தன் குஞ்சு எலிகளுக்கு உணவு சேகரித்துக் கொண்டு வந்த தாய் எலி, "என்ன, எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டது.

அதற்குச் சுண்டெலிகள் "நாங்கள் வெளியே போய்ச் சுற்றிப் பார்த்து விட்டு வருகிறோம்" என்று கூறின. "ஐயோ! நீங்கள் இன்று வெளியே செல்லக் கூடாது. எங்கிருந்தோ ஒரு முரட்டுப் பூனை நம்முடைய காட்டுக்கு வந்திருக்கிறதாம். அது உங்களைப் பிடித்து விழுங்கிவிடும்" என்று சொல்லி எச்சரித்தது தாய் எலி.

"இல்லை, நாங்கள் அதன் கையில் சிக்காமல் போய்விட்டுச் சீக்கிரம் வந்துவிடுகிறோம்" என்று சொல்லிவிட்டு எலிகள் இரண்டும் கிளம்பின. போகும் வழியில் கிடைத்தவற்றையெல்லாம் ஒன்று விடாமல் தின்று கொண்டே சென்றன. அவைகளுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. அந்த மகிழ்ச்சியில் தாய் எலியின் எச்சரிக்கையைக்கூட மறந்து வெகு தூரம் போய்விட்டன.

கொஞ்ச தூரத்தில் ஒரு பூனையும் முயலும் வந்து கொண்டிருந்தன. அந்தக் காட்டுக்குப் புதிதாக வந்திருந்த முரட்டுப் பூனைதான் அது. காட்டுக்கு வந்ததும் முதல் முதலாக அதற்கு முயலின் சிநேகம் கிடைத்தது. இரண்டும் எங்கே போனாலும் சேர்ந்தே போகும். எப்பொழுதும் ஏதேதோ பேசிக் கொண்டே செல்லும்.

"எங்கள் ஊரில் சிரமப்படாமலேயே உணவு கிடைத்துவிடும். ஒரு நாளைக்கு இரண்டு எலிகளுக்கு மேல் எனக்கு ஆகாரமாகக் கிடைக்கும். அவற்றைத் தவிர நான் வளரும் வீட்டில் எனக்குப் பாலும் சோறும் வேளை தவறாமல் தருவார்கள்" என்று அன்று பெருமையடித்துக் கொண்டது பூனை.

முயல் தற்செயலாகப் பின் பக்கம் திரும்பிப் பார்த்தது. தூரத்தில் இரண்டு சுண்டெலிகள் குதித்து விளையாடிக் கொண்டு வருவதைக் கவனித்தது. உடனே, "உன் கிராமத்திலேதான் நல்ல உணவு கிடைக்கும் என்று நினைத்தாயோ? இங்கேயும் நல்ல சாப்பாடு கிடைக்கும். அதோ பார்! உனக்கு நல்ல விருந்து!" என்று சொல்லி இரண்டு சுண்டெலிகளையும் சுட்டிக் காட்டியது. அவ்வளவுதான்; பூனையின் நாக்கில் ஜலம் ஊறிற்று. அது உடனே எலிகளை நோக்கிப் பாய்ந்தது.

எங்கிருந்தோ பேச்சுச் சத்தம் வருவதைக் கேட்ட இரு சுண்டெலிகளும் திரும்பிப் பார்த்தன. தங்

களை ஒரு பூனை துரத்திக்கொண்டு வருவதைக் கவனித்ததும், "ஐயோ! நம் உயிருக்கு ஆபத்து வந்து விட்டதே! அம்மா சொன்னது சரியாய்ப் போய்விட்டதே! இந்தப் பூனையிடமிருந்து எப்படித் தப்பிப் பிழைக்கப் போகிறோம்!" என்று நினைத்து ஓட ஆரம்பித்தன. அவற்றைத் தொடர்ந்து பூனையும் விரைவாக ஓடியது.

எலிகளின் அதிர்ஷ்ட வசமாக ஒரு பொந்து எதிர்ப்பட்டது. தப்பினோம், பிழைத்தோம் என்று அதற்குள் இரண்டும் நுழைந்து விட்டன. பூனைக்கு எலிகள் பொந்தில் புகுந்தது தெரியவில்லை. அது மேலும் மேலும் ஓடியது. மூச்சுத் திணற ஓடியதுதான் மிச்சம்; எலிகளைப் பிடிக்க முடியவில்லை!

இரண்டு எலிகளும் வெகு நேரம் பொந்துக்குள்ளேயே மூச்சுக் கூட விடாமல் அடைந்து கிடந்தன. பிறகு பொந்தை விட்டு வெளியே வந்து சுற்று முற்றும் பார்த்து விட்டு விரைவாகத் தங்கள் வளையை நோக்கி ஓடின.

"இந்த முரட்டுப் பூனையையும் போக்கிரி முயலையும் நம்முடைய காட்டை விட்டு எப்படியாவது விரட்டிவிட வேண்டும்!" என்று வீராப்புடன் கூறியது முதல் சுண்டெலி. அதற்கு இரண்டாவது சுண்டெலி 'கிரீச்' சென்று கத்தி உற்சாகத்துடன் தன் சம்மதத்தைத் தெரிவித்துக் கொண்டது.



பூனை அந்தக் காட்டுக்கு வந்தபோது, தன்னை வளர்த்து வந்த வீட்டிலிருந்து அவர்களுக்குத் தெரியாமல் ஒரு பால் கிண்ணத்தை எடுத்துக் கொண்டு வந்து விட்டது. இங்கு வந்த பிறகு அதைப் பத்திரமாகப் பாதுகாத்து வந்தது. ஒரு நாள் காலையில் எழுந்ததும் அக் கிண்ணத்தைக் காணவில்லை. பூனைக்கு வருத்தம் தாங்க முடியவில்லை. எங்கெல்லாமோ தேடிப் பார்த்தும் அந்தக் கிண்ணம் அகப்படவில்லை.

மறுநாள் பூனை தற்செயலாகத் தன்னுடைய நண்பனான முயலைப் பார்க்கச் சென்றது; காணவில்லை. உள்ளே தேடிப் பார்த்தது. அதன் பால் கிண்ணம் ஒரு மூலையில் இருந்தது. அதைப் பார்த்ததும் பூனைக்குக் கோபம் கோபமாக வந்தது. முயல் வந்ததும் அதன்மேல் பாய்ந்து சண்டை போட ஆரம்பித்தது. முயலுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. நண்பன் போல் நடித்து தன்னையே கொல்ல வந்து விட்டதே என்று நினைத்து, அதைத் தன்னாலியன்ற வரை எதிர்த்தது. கடைசியில் இரண்டும் அந்தக் காட்டை விட்டே ஓடி விட்டன.

ஆனால் பூனை வீட்டிலில்லாத போது அந்தக் கிண்ணத்தை அதன் வீட்டிலிருந்து திருடி, முயல் வீட்டில் யாருக்கும் தெரியாமல் கொண்டு வந்து வைத்தது அந்தச் சுண்டெலிகள்தான் என்பது அவைகளுக்குத் தெரியாது. சுண்டெலிகளுக்கோ பூனையும் முயலும் தங்கள் தந்திரத்தினாலே காட்டை விட்டே ஓடிவிட்டன என்று நன்றாய்த் தெரியும். இல்லாவிட்டால் அவ்வளவு உற்சாகமாக அவை இரண்டும் கொம்மாளம் போடுமா?

கம்பர் தரும் காட்சி

டி.கே.சி.

224. என்ன ஆவார்கள் அரக்கர்கள்!

பார்ப்பதற்கு அநுமன் சாமான்ய உருவத்தோடுதான் இருந்தான். அவனது சக்தி வியாபகத்தைத் தெரியப்படுத்தின உடன் சீதைக்கு உண்டான வியப்புக்கும் ஆனந்தத்துக்கும் அளவேயில்லை.

"உன்னுடைய சக்தி எப்படிப்பட்டதென்று கண்டு விட்டால் எந்தக் காரியமும் உனக்குச் சாமான்யம் என்றுதான் எண்ணத் தோன்றும். இந்த உலகத்தையே பெயர்த்து விட்டாய் என்று சொன்னால் ஒரு பெரிய காரியம் ஆகாது அது!"

சந்தம்

தான தான தான தன்

இடந்தாய் உலகை மலையோ டும்,
எடுத்தாய் விசும்பை, இவைசுமக் கும்
படந்தாழ் அரவை ஒருகரத் தால்ப்
பறித்தாய் எனினும் பயன்இன் றால்;—
நடந்தாய் இடையே என்றா லும்
நாளும் நினக்கு: நளிர்கட லைக்
கடந்தாய் என்றால் என்னா கும்!
காற்றும் அன்ன கடுமை யாய்!

[எடுத்தாய் விசும்பை: வானத்தையே சூரியன் சந்திரன் நக்ஷத்திரங்கள் மேகம் எல்லாவற்றையும் சேர்த்து செந்தூக்காய்த் தூக்கிவிட்டாய் என்றாலும்; இவை சுமக்கும் படந்தாழ் அரவை: பூமியையும் வானத்தையும் சேர்த்து தாங்கிக் கொண்டிருக்கும், பாதாளம் வரைக்கும் நீண்டு வளைந்து கிடக்கும் படத்தோடு கூடிய ஆதிசேஷன்; (வட்ட வடிவமாய் வானத்தையும் பாதாளத்தையும் சேர்த்து வளைந்து கிடக்கும் நக்ஷத்திரத் தொகுதி ஒன்றிருக்கிறது. அதை ஆங்கிலத்தில் "மில்கி வே" பால் ஓடை என்று சொல்லுகிறார்கள். பூர்வத்தில் நம்மவர்கள் ஆதிசேஷன் என்று சொன்னார்கள்.) ஒரு கரத்தால் பறித்தாய் எனினும்; ஒரு கையினால் உருவினாய் என்று சொல்லுவார்களானால் அதெல்லாம் உன் சம்பந்தப்பட்ட மட்டில்; பயன் இன்றால்: பயன் அற்ற சொல்லே ஒழிய வேறில்லை; நடந்தாய் இடையே என்றாலும் நாளும் நினக்கு: ஒரு காலை பரத கண்டத்தில் வைத்து மற்றொரு காலை இலங்கையில் வைத்து அப்படியே நடந்து வந்து விட்டாய் என்று சொன்னாலும் அது உன் பெருமையைக் குறைப்பதேயாகும், [illegible] பாடவேண்டிய காரியம் அது உனக்கு; நளிர் கடலைக் கடந்தாய் என்றால் என்னாகும்: அந்தக் குளிர்ந்த நீர் நிறைந்த கடலைக் கடந்து விட்டாய் என்று உன்னைப் புகழ்ந்தால் அதற்குப் பொருள் உண்டா? காற்றும் அன்ன கடுமையாய்: உலகெங்கும் அதி வேகத்தோடும் அற்புத சக்தியோடும் திரிந்துகொண்டிருக்கிற காற்றின் வலிமை அல்லவா உனக்கு இருக்கிறது. இத்தகைய உனக்கு மேலே சொன்னதெல்லாம் ஒரு புகழ்ச்சியா!

குறிப்பு:—செய்யுளிலுள்ள ஓசையும் நீண்ட தாளமும் பெருமித பாவத்தை நன்றாய்க் காட்டுகின்றன. அநுமனை எங்கேயோ தூக்கிக்கொண்டு போய்விடுகின்றன.]

அநுமன் சக்தியைப் பார்த்த சீதைக்கு அதிசயம் தணிந்த பாடாக இல்லை. மேலும் மேலும் பொங்கிக் கொண்டுதான் இருக்கிறது.

"நீ இங்கு வந்து பல இடங்களையும் தேடிக் கடைசியாக என்னைக் கண்டு கொண்டாய். அப்படிக் காணாமற் போனால் ராமன் வந்து என்னை மீட்கிறது என்பது உண்டா? மீட்கவில்லையானால் அவனுக்கு அருளில்லை என்றுதானே சொல்லுவார்கள், உலகத்தாரது பழிதானே வந்து சேரும். உன்னால் அல்லவா ராமனுக்குள்ள அருளும் புகழும் உலகத்தில் நிலையாய் நிற்கப் போகின்றன."

ஆழி நெடுங்கை ஆண்தகை தன்
அருளும் புகழும், அழிவின் றி
ஊழி பலவும் நிலைநிறுத் தற்(கு)
ஒருவன் நீயே உளையா னாய்;
பாழி நெடுந்தோள் வீரா, நின்
பெருமைக்(கு) ஏற்பப் பகைஇலங் கை
ஏழு கடற்கும் அப்புறத் த(து)
ஆகா(து) இருந்த(து) இழிபன் றே!

[ஆழி நெடுங்கை ஆண்தகைதன்: தோளில் அணிந்த வளையங்கள் கையின் நீளத்தைக் காட்டும். அப்படிக் காட்டும்படியான

வீரன் ராமனது; ஊழி பலவும்: பல பல யுகங்களிலும்; ஒருவன் நீயே உளையானுய்: நீ ஒருவன்தான் உலகத்தில் இருக்கிறுய்,—வேறு யாரும் இல்லை; பாழி நெடுந்தோள் வீரா: வலிமையோடு பெருமையும் கொண்ட தோள் படைத்த வீரனே; நின் பெருமைக்கு ஏற்ப: உன் சக்தியின் பெருமையை எடுத்துக் காட்டும்படியாக; பகை இலங்கை: பகைவர்கள் தங்கும் இந்த இலங்கைத் தீவானது; ஏழு கடற்கும் அப்புறத்தது ஆகாது இருந்தது: ஏழு சமுத்திரங்களுக்கும் அப்பாலதாய் இல்லாதிருந்தது: இழிபு அன்றே: உன்னுடைய சக்திக்குச் சற்றும் ஒவ்வாத இழிந்த காரியம்.

குறிப்பு:—காலத்தின் நெடுமை 'ஊழி பலவும்' என்ற ஓசையில் கிடக்கிறது: அப்படியே பரப்பின் பெருமை 'ஏழு கடற்கும்' என்ற ஓசையில் கிடக்கிறது.]

மனசிலுண்டான அதிசயத்தையும் ஆனந்தத்தையும் அனுமனிடம் நேர் முகமாகக் கொட்டியாய் விட்டது. உணர்ச்சி அதற்கு மேலும் போகிறது. தனக்குத்தானே பேசிக்கொள்ளுகிருள் சீதை.

"அரக்கர்களுடைய தொகையோ கணக்கில் அடங்காதது. ஆனல் ராமனுக்கு, அடடா! தம்பி லக்ஷ்மணனைத் தவிர்த்துத் துணையாக வேறு ஒரு பிராணியும் இல்லையே, என்று மனம் நைந்து கொண்டேயிருந்தேன்"

பின்னோர் எயிற்று வல்அரக் கர்
 விக்கம் நோக்க, வீரற் கும்

பின்னே பிறந்தான் அல்ல தோர்
 துணையி லாத பிழைநோக் கி,

உன்னு நின்றேன்: உடைகின் றேன்
 ஒழிந்தேன் ஐயம்: உயிர்உயிர்த் தேன்;

என்னே! நிருதர் என்னு வர்,
 இவனே எங்கோன் துணைஎன் றும்!

[பின்னோர் எயிற்று வல் அரக்கர் விக்கம் நோக்கி: கோபத்தில் மின்னல்போல ஒளி வீசும் பற்களையுடைய அரக்கர்களது பெரும் கூட்டத்தைப் பார்த்து: வீரற்கும் பின்னே பிறந்தான்: லக்ஷ்மணன்: துணையிலாத பிழை நோக்கி: துணையென்று பாரும் இல்லாத கஷ்ட நிலையை நோக்கி: உன்னு நின்றேன்: யோசனை பண்ணினேன்: உடைகின்றேன்: மனம் நைகின்றவளாகிய நான்; ஒழிந்தேன் ஐயம்: சந்தேகமே இல்லாதவள் ஆய்விட்டேன்: உயிர் உயிர்த்தேன்: புத்துயிர் பிறந்துவிட்டது: என்னே: என்ன அதிசயமாக இருக்கிறது இதெல்லாம்,—நிருதர் என் ஆவர்: அரக்கர் வேரோடு ஒழியாமல் என்ன ஆகப் போகிறர்கள்: இவனே எங்கோன் துணை என்றும்; இந்த மகா வீரனே ராமனுக்குத் துணை என்றிருக்கும்போது.]

அற்புதமான துணை ராமனுக்குக் கிடைத்துவிட்டது என்பதில் சீதைக்கு அபாரமான எக்களிப்பு; அது செய்யுளில் வாய் விட்டுப் பேசுகிறது.

உயிர்ப் பிச்சை

ரா. வீழிநாதன்

மாலை நேரம். டாக்டர் மருதநாயகம் கிளப்புக்கு விளையாடப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். மோட்டார் வாசலில் நின்று கொண்டிருந்தது. அதே சமயம் வாசலில் ஒரு மாட்டு வண்டி வந்து நின்றது. அதன் பின்னாலேயே கையில் தடி ஊன்றிய வண்ணம் வந்து கொண்டிருந்த ஒரு கிழவன் படியேறி அவர் அறை வாசலில் தொங்கிக் கொண்டிருந்த படுதாவை விலக்கிப் பார்த்தான். டாக்டர் கண்ணாடிக் கெதிரே நின்று கொண்டு தலை வாரிக் கொண்டிருந்தார். கிழவன் பயத்தினால் வாய் அடைத்து நின்றான்.

படுதா விலகுவதை உணர்ந்த டாக்டர், "யார் அது? என்ன வேண்டும்?" என்று குரலில் அதிகாரம் தொனிக்கக் கேட்டார்.

கிழவன் கை கூப்பிக் கொண்டு, "எசமான், நான் பரம ஏழைங்க. என் மவனுக்குச் சில நாட்களாக......" என்று ஆரம்பித்தான்.

டாக்டர், "நாளைக் காலையில் வா. இது நோயாளிகளைப் பார்க்கும் நேரம் இல்லை" என்றார்.

கிழவன் கீழே விழுந்து தலை வணங்கிய வாறு, "எசமான், அப்படிச் சொல்லக் கூடாது. நாலு நாளாகப் பிள்ளை கண்ணை திறக்கவில்லை. நீங்கள் ஒரு தடவை பார்க்கத்தான் வேண்டும்" என்றான்.

டாக்டர் கைக் கடிகாரத்தைப் பார்த்தார். கிளப்புக்குப் புறப்பட இன்னும் பத்தே நிமிஷம்தான் பாக்கி யிருந்தது. கையில் பந்தாடும் மட்டையை எடுத்துக் கொண்டு, "நாளைக் காலையில் வா. நாளைக் காலையில்! நான் இப்போது விளையாடப் போக வேண்டும்" என்றார்.

கிழவன், கண்களில் கண்ணீர் ததும்ப, "எசமான், ஒரே ஒரு தடவை பார்த்து விடுங்கள். பிள்ளை பிழைப்பது உங்கள் கையில்தா னிருக்கிறது. எனக்குப் பிறந்த ஏழு பிள்ளைகளில் இவன் ஒருவன்தான் உயிருடன் இருக்கிறான். இவனும் போய் விட்டால் அப்புறம் நாங்கள் எப்படி உயிர் வாழ்வது? எசமான், உங்களுக்குக் கோடிப் புண்ணிய முண்டு. ஒரே ஒரு தடவை மட்டும் பார்த்து விடுங்கள்" என்று அழ மாட்டாக் குறையாகச் சொன்னான்.

ஆனால் டாக்டர் அவனை ஏறெடுத்துக் கூடப் பார்க்கவில்லை. மோட்டாரில் ஏறி உட்கார்ந்து கொண்டே "நாளைக் காலை யில் வா" என்றார்.

மோட்டார் போய்விட்டது. கிழவன் கொஞ்ச நேரம் சிலையைப் போல் நின்று கொண்டிருந்தான். இந்த உலகத்தில் தன் இன்பத்துக்கும் சுகத்துக்கும் எதிரே பிறருடைய உயிரையும் இலட்சியம் செய்யாத மனுஷ்யர்கள் இருப்பார்கள் என்ற எண்ணம் கிழவனுடைய உள்ளத்தில் இதுவரை எழுந்த தில்லை. நாகரிகத்தில் முன்னேற்ற மடைந்த உலகம் இவ்வளவு சவு இரக்கமற்றதாகவும், கல்நெஞ்சம் வாய்ந்ததாகவும் இருக்கும் என்ற அனுபவம் அவனுக்கு இதுவரை ஏற்பட்டிருந்தால்தானே? அவனோ பரோபகார சிந்தையுள்ள பழைய காலத்துப் பிராணிகளில் ஒருவன்.

கார் கண்களுக்கு மறையும் வரையில் கிழவன் அதையே உற்று நோக்கிய வண்ணம் நின்றான். டாக்டர் மனம் மாறித் திரும்பி வந்து தன் பிள்ளையைப் பார்க்க மாட்டாரா என்ற நம்பிக்கை அவனை விட்டு வெகு நேரம்வரை அகலவில்லை. பிறகு சிறிது நேரம் கழித்து அவனுடைய வண்டி வந்த வழியே திரும்பிற்று.

அன்றிரவே ஏழு வயதுகூட நிரம்பாத, கிழத் தாய் தந்தையரின் வாழ்க்கைக்கு ஊன்று கோலாக இருந்த இளம் பாலகன் தன் பால்ய லீலைகளை முடித்துக் கொண்டு இவ்வுலகை நீத்துச் சென்றான்.

2

அநேக வருஷங்கள் சென்று விட்டன. டாக்டர் மருதநாயகம் பெயரும் புகழும் பணமும் சம்பாதித்துப் பெரிய மனிதர் ஆனார். அவருக்கு இரண்டே இரண்டு குழந்தைகள். ஒரு பெண், ஒரு பையன். பெண்



கல்யாணமாகிக் கணவன் வீட்டுக்குச் சென்று விட்டாள். பையன் காலேஜில் படித்துக் கொண்டிருந்தான். அவன் மிகக் கெட்டிக்காரன்; ரஸிகன்; தாராள குணம் வாய்ந்தவன்; நல்ல சிலவான்; வினயஸ்தனும் கூட. தன் ஒத்தவர்களின் சமூகத்துக்குத் தனிப் பெரும் தலைவனாகக் கூட விளங்கினான். நல்ல களை சொட்டும் முகம். அன்று அவனுக்கு இருபதாவது ஆண்டு நிறைவு விழா நடந்தது.

மாலை நேரம் பசும் புல் தரையில் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. நகரத்து கனதனவான்களும் ஆபீஸர்களும் ஒரு புறத்தில் அமர்ந்திருந்தனர். காலேஜ் மாணவர்கள் இன்னொருபுறம் உட்கார்ந்து விருந்து அருந்திக் கொண்டிருந்தனர். மின்சார ஒளியில் பசும்புல் தரை 'பள பள' வென்று பிரகாசித்துக் கொண்டிருந்தது. டாக்டரின் மகன் கைலாசம் பட்டாடை உடுத்தித் தன் நண்பர்களைக் கவனிப்பதில் ஈடுபட்டிருந்தான்.


இதே சமயம் ஒரு அழகி அவனருகில் வந்து, "ஏன்' கைலாஸ்? உங்கள் பாம்புகள் எல்லாம் எங்கே இருக்கின்றன? எனக்குக் காட்டக்கூடாதா?" என்று கேட்டாள்.

கைலாசம் அவளைப்பார்த்து, "மிருணாளினி, இன்று வேண்டாம். நாளைக்குக் கட்டாயம் காட்டுகிறேன்" என்றான்.

"அதெல்லாம் முடியாது. இன்றைக்குக் காண்பித்துத் தான் ஆகவேண்டும். நீங்கள் தினம் இம்மாதிரி நாளைக்கு நாளைக்கு என்று சொல்லி என்னை ஏமாற்றுகிறீர்கள். ஆகையால் இன்றைக்கு உங்களை விட முடியாது" என்று மிருணாளினி பிடிவாதமாகச் சொன்னாள்.

மிருணாளினியும் கைலாசமும் காலேஜில் ஒரே வகுப்பில் வாசித்து வந்தார்கள். இருவரும் ஒருவரை ஒருவர் காதலித்தனர். கைலாசம் பாம்புகளைப் பிடித்து வளர்ப்பது, அவைகளை ஆட்டி விளையாட்டுக் காட்டுவது முதலியவற்றில் அலாதி ஆர்வம் கொண்டிருந்தான். அவன் வித விதமான பாம்புகளை வளர்த்து வந்தான். அவற்றின் சுபாவத்தைப் பரிசோதித்து உணர முயன்றான். சில தினங்களுக்கு முன்பு அவன் காலேஜில் பாம்புகளைப் பற்றி ஒரு பெரிய பிரசங்கமே செய்தான். அது மட்டும் அல்ல. அவன் அவைகளை ஆட்டியும் காண்பித்தான். பிராணி சாஸ்திரப் பேரறிஞர்கள் கூட அவன் மேதையை வியந்தனர். அவன் அந்த வித்தையை ஒரு பாம்பாட்டிக் கிழவன் மூலம் கற்றுணர்ந்தான். விஷத்தை இறக்கும் அநேகவித மூலிகைகளைச் சேகரித்து வைப்பதில் அவனுக்குத் தனி ஆர்வம் உண்டு. யாரிடமாவது பாம்புக் கடிக்கு மூலிகை இருக்கிறது என்று கேள்விப் பட்டு விட்டால் போதும். அம் மூலிகையை வாங்கித் தன்னிடம் வைத்துக் கொள்ளாத வரை அவனுக்குத் தூக்கமே வராது. எப்பாடு பட்டாவது அதை வாங்கியே தீருவான். அதற்காக அவன் ஆயிரக் கணக்கில் ரூபாய் செலவழிப்பதற்குச் சற்றும் தயங்குவதில்லை.

"நாளைக்குக் கட்டாயம் காட்டுகிறேன் மிருணாளினி. இந்த வேளையில் நான் உனக்கு அவைகளை நன்றாகக் காட்டவும் முடியாது. போதாக் குறைக்கு அந்த அறையில் என் வைக்க இடம் இல்லை. அவ்வளவு



சாமான்கள் இருக்கின்றன" என்றான் கைலாசம்.

"காண்பித்தால் என்ன அப்பா! என்னவோ ஆசைப்பட்டுக் கேட்கிறான் அவன். இந்தச் சின்ன விஷயத்துக்கு இவ்வளவு 'பிகுக்காரம்' செய்கிறாயே! மிருணாளினி தேவி! நீங்கள் கொஞ்சமும் விட்டுக் கொடுக்காதீர்கள். காட்டாமல் என்ன செய்கிறார், பார்ப்போம்!" என்றான் ஒரு நண்பன்.

"மிருணாளினி தேவி சாதுவாக இருக்கிறாள் என்பதனால்தானே இப்படித் தலைக்கு மேல் ஏறுகிறார்? இன்னொரு பெண்ணாயிருந்தால் இவரைக் கண்ணில் விரலை விட்டு ஆட்டியிருப்பாள்" என்று இன்னொரு நண்பன் குத்திக் காட்டினான்.

"நான் மிருணாளினிக்காக உயிரைக்கூடக் கொடுக்கத் தயார்" என்பதெல்லாம் வெறும் வாய்ப் பேச்சுத்தானே, கைலாஸ்? என்று மற்றொரு நண்பன் பரிகாசம் செய்தான்.

வெறும் வாயை மெல்பவர்களுக்கு அவல் கிடைத்து விட்டால் கேட்க வேண்டுமா? நண்பர்கள் பரிகாசம் செய்கிறார்கள் என்பதை உணர்ந்த மிருணாளினி, "நீங்கள் ஒருவரும் எனக்காக வக்காலத்து வாங்கிப் பேச வேண்டாம். எனக்குச் சொல்லிக் கொள்ளத் தெரியும். நான் ஒன்றும் வேடிக்கை பார்க்க விரும்பவில்லை. போங்கள்" என்றாள்.

இதைக் கேட்டதும் நண்பர்கள் கடகட வென்று சிரித்தார்கள். "நீங்கள் பார்க்க வேண்டும் என்று காடியாய்க் கத்தினாலும் காட்டுபவர் காட்டினால் தானே!" என்றான் ஒருவன்.

மிருணாளினியின் முகம் வெட்கத்தினால் வாட்ட முற்றது. அதைக் கண்ட கைலாசத்துக்குத் தான் மறுத்தது அவளுக்கு வருத்தத்தை அளித்திருக்க வேண்டும் என்று தோன்றிற்று. ஆகவே அவன் விருந்து முடிந்து பாட்டுக் கச்சேரி ஆரம்பமாகியதும், தன் நண்பர்களையும் மிருணாளினியையும் அழைத்துக் கொண்டு பாம்புகளை வைத்திருந்த அறைக்குச் சென்றான். பிறகு மகுடியை எடுத்து வாசித்துக் கொண்டே பெட்டியைத் திறந்து ஒவ்வொரு பாம்பாக எடுத்து வெளியே விட்டான். என்ன சொல்லுவது போங்கள்! அந்தப் பாம்புகள் அவன் மனமகிழ்ந்து அவனுடைய ஒவ்வொரு இசைக்கும் தகுந்தபடி ஆடத் தொடங்கின. அவன் ஒன்றை எடுத்துக் கழுத்தில் சுற்றிக்கொண்டான். மற்றொன்றை எடுத்துக் கையில் சுற்றிக் கொண்டான். மிருணாளினி பயந்து போய் "பாம்புகளைக் கழுத்தில் போட்டுக் கொள்ளாதீர்கள். தூரத்திலிருந்தே வேடிக்கை காட்டுங்கள் போதும். படம் எடுத்து ஆடவையுங்கள், அதுவே போதும்" என்று கதறினாள். கைலாசத்தின் கழுத்தில் பாம்புகளைப் பார்த்த அவளுக்குத் தன் உயிரே போய் விடும்போலாகி விட்டது. 'எதற்காக நாம் இவற்றைக் காட்டச்சொன்னோம்?' என்றுகூட வருந்தினாள். ஆனால் கைலாசம் எதையுமே காதில் வாங்கிக் கொள்ளவில்லை. தன் காதலிக்குத் தானறிந்த பாம்பு வித்தையைக் காட்டுவதில் அவனுக்கு அளவற்ற மகிழ்ச்சி ஏற்பட்டது.

ஒரு நண்பன், "என் அப்பா, பாம்புகளின் பற்களைப் பிடுங்கி விட்டாயோ?" என்று கேட்டான்.

கைலாசம் சிரித்துக் கொண்டே, "பற்களைப் பிடுங்கி விடுவது பாம்பாட்டிகளின் வேலையல்லவா? ஒன்றுக்கும் நான் பல்லைப் பிடுங்கவில்லை. வேண்டுமானால் காட்டுகிறேன்" என்று சொல்லி ஒரு கருநாகத்தைக் கையில் எடுத்தான்.

"என்னிடம் இதைவிட விஷமுள்ள பாம்பு வேறொன்றும் கிடையாது. இது கடித்தால் ஆள் பிழைப்பது அரிது. சோகம்பேசட்டு விழுவதோ, நுரை கக்குவதோ ஒன்றுமிராது. இது கடித்து விட்டால் மந்திரம் கூடக் கிடையாது என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். இதன் பல்லைக் காட்டட்டுமா?" என்று கேட்டான்.

மிருணாளினி அவன் கையையே பிடித்துக் கொண்டு, "வேண்டாம், வேண்டாம்! நீங்கள் வேடிக்கை காண்பித்தவரை போதும். உங்களை மன்றாடி கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று அழமாட்டாக் குறையாகச் சொல்லித் தடுத்தான்.

"எனக்கு நம்பிக்கையில்லை. இருந்தாலும் நீ சொல்லுகிறாயே என்று நம்புகிறேன்" என்றான் அந்த நண்பன்.

கைலாசம் அந்தப் பாம்பின் கழுத்தைப் பிடித்துக் கொண்டு, "நான் சொல்லுகிறேன் என்பதற்காக நீங்கள் நம்ப வேண்டாம். உங்கள் கண்களாலேயே பார்த்துக் கொள்ளுங்கள். பல்லைப் பிடுங்கிப் பாம்பை வளர்ப்பதில் என்ன பெருமை இருக்கிறது? பாம்பு ரொம்ப அறிவுள்ள ஜந்து. இந்த மனிதன் நமக்குக் கெடுதல் செய்ய மாட்டான் என்று அதற்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டால், அது அவனைக் கடிக்கவே கடிக்காது" என்றான்.

கைலாசம் சொன்ன சொல் கேளாமல் 'சித்தம் போக்கு சிவன் போக்கு' என்று காரியம் செய்வதைக் கண்ட மிருணாளினி எப்படியாவது அந்த வேடிக்கையை நிறுத்தினால் போதும் என்றெண்ணி 'வாருங்கள் பாட்டுக் கேட்கப் போவோம்' என்று கைலாசத்தை அழைத்தான். ஆனால் கைலாசம் சந்தேகப் பேர்வழிகளின் சந்தேகத்தைத் தீர்த்து விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பது என்று கங்கணம் கட்டிக் கொண்டு பாம்பின் கழுத்தைப் பிடித்துப் பலமாக அழுத்தினான். பாம்பின் தேகம் வலி தாளாமல் சுருண்டு துவண்டது. அது வரை அந்தப் பாம்பு அவன் கையால் அவ்வளவு கஷ்டத்துக் குள்ளானதில்லை. அவன் நம்மைக் கொண்டு என்ன செய்ய விரும்புகிறான் என்றும் அதற்குப் புரியவில்லை. நம்மைக் கொன்று போடத்தான் அவன் அப்படிச் செய்கிறானோ என்று அதற்குச் சந்தேகம் ஏற்பட்டது. ஆகவே அது தன்னைக் காத்துக் கொள்ள முயன்றது.

கைலாசம் அதன் கழுத்தை அழுத்தி வாயைத் திறக்கும்படிச் செய்தான். பிறகு அதன் விஷப்பற்களைக் காட்டி, "யார்யாருக்கெல்லாம் சந்தேகமோ அவர்கள் அருகில் வந்து பார்த்துக் கொள்ளுங்கள். இன்னும் சந்தேகம் தானா அல்லது நம்பிக்கை ஏற்பட்டு விட்டதா?" என்றான். நண்பர்கள் அதன் அருகில் வந்து விஷப் பற்களைக் கண்டு வியப்பெய்தினர். பிரத்தியக்ஷப் பிரமாணத்துக்குப் பின் சந்தேகத்துக்கிடம் ஏது? நண்பர்களின் சந்தேகத்தைத் தீர்த்த பின் கைலாசம் பாம்பின் கழுத்தைத் தளர்த்தி விட்டான். பிறகு அதைத் தரையில் போடப் போகும் போது கோபம் மூண்டிருந்த கருநாகம் ஆத்திரத்துடன் அவன் கைவிரலைக் கடித்து விட்டு வேகமாக ஓடி விட்டது. கைலாசத்தின் விரல்களிலிருந்து இரத்தம் சொட்ட ஆரம்பித்தது. அவன் விரலை அழுத்திப் பிடித்துக் கொண்டு தன் அறைப்பக்கம் ஓடினான். அவனுடைய அறையில் உள்ள மேஜை டிராயரில் ஒரு மூலிகை யிருந்தது. அதை அரைத்துப் போட்டால் எப்பேர்ப்பட்ட விஷமும் இறங்கிவிடும்.

நண்பர்களிடையே பெருங் குழப்பம் ஏற்பட்டது. சங்கீதக் கச்சேரியில் உட்கார்ந்திருந்தவர்களுக்கும் அந்தச் செய்தி எட்டியது. டாக்டர் பதட்டமுற்று ஓடிவந்தார். கை விரலை அழுத்திக் கட்டிவிட்டு மூலிகையை அரைக்கக் கொடுத்தார்கள். டாக்டருக்கு மூலிகைகளில் நம்பிக்கை இல்லை. அவர் பாம்பு கடித்த விரலை ஆபரேஷன் செய்ய விரும்பினார். ஆனால் கைலாசத்துக்கு மூலிகை மீது பூரண நம்பிக்கை இருந்தது. ஆகவே அவன் அதற்கு இடம் கொடுக்கவில்லை. மூலிகை அரைத்துத் தயாராவதற்குள், கைலாசத்தின் கண்கள் செருகின. உதடுகள் கறுத்தன. உடலில் நீலம் ஏறியது. அவனால் நிற்க முடியவில்லை. தரையில் உட்கார்ந்து விட்டான். வந்திருந்த விருந்தினர்கள் அனைவரும் அறையில் கூடி விட்டனர். அதற்குள் மூலிகை அரைத்து வந்தது. மிருணாளினி அவனுடைய விரல்

களில் அதைத் தடவினன். இன்னும் ஒரு நிமிஷம் சென்றது. கைலாசத்தின் கண்கள் மூடிவிட்டன. அவன் அப்படியே தரையில் படுத்து விட்டான்.

டாக்டர் அவனருகில் உட்கார்ந்து, "கைலாசம்! உடம்பு எப்படியிருக்கிறது?" என்று ஆதரத்துடன் கேட்டார். கைலாசம் கையைத் தூக்கினனே தவிர பேச முடிய வில்லை. மிருணளினி தழ தழுத்த குரலில் "மூலிகையினுல் ஒன்றும் பலன் இல்லையா?" என்று கேட்டாள். டாக்டர் தலையை அசைத்து, "நான் என்னத்தைச் சொல்லு வேன்? அவன் சொல்லைக்கேட்டு பேசாமல் இருந்து விட்டேன். இனிமேல் ஆபரேஷன் செய்தும் பிரயோசனப்படாது போலிருக் கிறதே!" என்ருர்.

அரை மணிக்குப் பிறகு கைலாசத்தின் நிலைமை இன்னும் மோசமாகி விட்டது. கைலாசம் பிழைத்தால் புனர் ஜன்மம்தான் என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது.

ஒருவர் ஓடிப்போய்த் தமக்குத் தெரிந்த மந்திரவாதியை அழைத்து வந்தார். கைலா சத்தின் நிலைமையைப் பார்த்தபின் அவ னுக்கு மந்திரிக்கத் தோன்றவே யில்லை. "இனிமேல் என்ன செய்வது எசமான்? நடக்க வேண்டியது நடந்துவிட்டதே!" என்ருன் அவன்.

அட முட்டாளே! நடக்கத் தகாதது நடந்துவிட்டது என்று சொல்லு. நடக்க வேண்டியது எங்கே நடந்தது? தாய் தந்தையர்கள் தன் குழந்தையின் கல் யாணத்தை எங்கே பார்த்தார்கள்? மிரு ணளினியின் ஆசை யென்னும் விருக்ஷம் எங்கே துளிர்த்துப் புஷ்பித்துக் குலுங்கி யது? மனதில் எழுந்த பொற் கனவுகள் எங்கே பூர்த்தியுற்றன? வாழ்வின்பம் என்னும் அருவி ஆனந்தத்தைக் கொண்டு வந்து எங்கே கொட்டியது? மனோரதம் என்னும் அலைகள் வீசும் வாழ்வுக் கடலில் ஆனந்தமாக முன்னேறிக் கொண்டிருந்த காதல் படகு நடுக்கடலிலேயே மூழ்கிவிட வில்லையா? ஆகவே நடக்கத் தகாதது நடந்துவிட்டது என்று சொல்லு, அப்பா!


அதே பசும் புல்தரை. அதே வெண் ணிலவு இனிய சங்கீதம்போல இயந் கையன்னையின் மீது தவழ்ந்து கொண் டிருந்தது. அதே நண்பர் குழாமும் அங்கே இருந்தது. கேளிக்கைகளுக்கான சாமக் கிரியைகள் அனைத்தும் இருந்த இடத்தி லேயே இருந்தன. ஆனல் சிரிப்பும் குதுகலமுமாக இருந்த அந்த இடம் அழுகையும் கண்ணீருமாக மாறிக் கிடந்தது.

3

நகரத்துக்குச் சற்றுத் தொலைவிலே ஒரு குடிசை. அந்தக் குடிசையில் ஒரு கிழவ னும் கிழவியும் குமட்டி அடுப்புக் கெதிரே உட்கார்ந்து குளிர் காய்ந்துகொண் டிருந் தார்கள். ஒரு மண்ணெண்ணெய்ச் சிம்னி மட்டும் எரிந்து கொண்டிருந்தது. குடிசை யின் ஒரு மூலையில் பாடம் செய்யப்பட்ட உரிமட்டை நார் கொஞ்சம் கிடந்தது.

கிழவி தினம் காலையில் எழுந்து வெளியே சுற்றிச் சாணமும், சுள்ளிகளும் பொறுக் கிக்கொண்டு வீடு வந்து சேர்வாள். கிழவன் உரிமட்டை நாரைக் கயிருக முறுக்கித் தினம் கொண்டுபோய் விற்று வருவான். இருவருடைய ஜீவனமும் இப்படித்தான் நடந்து வந்தது. அவர்கள் சிரித்ததையோ அழுததையோ யாரும் கண்டதில்லை. அவர்களைக் காடு 'வா, வா' என்று அழைத்துக் கொண்டிருந்தது. அப்படி யிருக்கும் பொழுது அவர்களுக்கு அழவோ சிரிக்கவோ பொழுது ஏது?

வேலைக்கு மனு!



வேலைக்கு வந்தவர்:—ஸார்! எனக்கு ஏதா கிலும் வேலை காலியிருந்தால் கொடுங்கள்.

காரியாலயமானேஜர்:—தற்சமயம் இங்கு வேலை காலி ஒன்றுமில்லை; நாங்களே ஒருவரை எடுத்துவிடப் போகிறேம்!

வேலைக்கு வந்தவர்:—அப்பொழுது அந்த இடம் காலி யாகுமல்லவா; அந்த இடத்துக்கு என்னை நியமித்து விடுங்களேன்!

கிழவி, "ஆமாம், காலைக்கு உரிமட்டை நார் இல்லையே? என்ன வேலை செய்வீர்கள்?" என்று கேட்டாள்.

"காலைக்குச் செட்டியார் கடைக்குப் போய்க் கடனுகப் பத்துச் சேர் வாங்கி வருகிறேன்."

"மூர்திய கடனையே இன்னும் நாம் அவருக்குக் கொடுக்கவில்லையே! கடன் கொடுப்பாரா?"

"கொடுக்காவிட்டால் வேண்டாம். புல் எங்கும் ஓடிப் போய்விடவில்லை, இரண்டணுப் புல் கூடவா என்னுல் அறுக்க முடியாது?" என்முன் கிழவன்.

இதே சமயம் யாரோ கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. அத்துடன் கூடவே, "தாத்தா, தாத்தா! தூங்கிப் போய்விட்டாயா, என்ன? சற்றுக் கதவைத் திறவேன்!" என்ற குரலும் வந்தது.

கிழவன் எழுந்து கதவைத் திறந்தான். ஒரு ஆசாமி உள்ளே நுழைந்து, "டாக்டர் மருதநாயகத்தின் பிள்ளையைப் பாம்பு கடித்து விட்டதாம்!" என்முன்.

கிழவன் துணுக்குற்று, "மருதநாயகமா? கண்டோன்மெண்டில் இருக்கிருரே, அவர்தானே!" என்று கேட்டான்.

"ஆமாம், ஆமாம் அவர்தான். பட்டணம் முழுவதும் அதே பேச்சாகத்தானிருக்கிறது. போவதாயிருந்தால் போய்ப் பார். நிறையப் பணம் கிடைக்கும்" என்முன் அந்த ஆசாமி.

கிழவன் தலையசைத்துக் கொண்டு கடுமையான குரலில், "நான் போகப் போவதில்லை. அவரை எனக்கு நன்முகத் தெரியும். நம்ப தம்பிக்கு உடம்பு சரியில்லாமல் இருந்தபொழுது, நான் அவரிடம் தான் கொண்டு போயிருந்தேன். அப்பொழுது அவர் விளையாடப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். 'எசமான், ஒரு தடவை பாருங்கள்' என்று நான் கெஞ்சாத குறையாகக் கெஞ்சினேன். அவர் தலை நிமிர்ந்து பார்க்கவில்லை. கடவுளுக்கு அது பொறுக்கவில்லை. அதனுல் அவருடைய பிள்ளையையே பிடுங்கிக் கொண்டு விட்டார்....... ஆமாம், அவருக்கு நிறையப் பிள்ளைகள் இருக்கிருர்களா?" என்று கேட்டான்.

"இல்லையப்பா! ஒரே பிள்ளைதானும். எல்லாருமே 'பிழைக்கமாட்டான்' என்று கையை விரித்து விட்டார்களாம்!"

"அப்படியா செய்தி? இப்பொழுதுதான் என் மனம் குளிர்ந்தது. கண்ணும் குளிர்ந்தது. பையனும் இதற்குள் குளிர்ந்து போயிருப்பான். இன்றைக்குத்தான் நான் நன்முகத் தூங்கப்போகிறேன். பிள்ளையில்லாக் குறை இனிமேல்தான் தெரியப் போகிறது, அவருக்கு. நமக்கென்ன? சொத்தா சுதந்திரமா? 'ஆளு பவிக்க ஆள் இல்லாமல் போய்விட்டதே!' என்று வருத்தப் படுவதற்கு! ஆறு குழந்தைகளோடு ஏழாவதாகப் போய்விட்டது என்று எண்ணி மனதைத் தேற்றிக் கொண்டு விடுகிறோம். ஆனுல் அவர் சொத்தை ஆள யாரும் கொடுத்து வைக்கவில்லையே! இதற்காகத்தான் இவ்வளவு பாடுபட்டுப் பணம் சேர்த்தாரோ?" என்முன் கிழவன்.

வந்த ஆசாமி போய்விட்டான். கிழவன் கதவைச் சாத்திக்கொண்டு வந்து உட்கார்ந்தான்.

கிழவன் இம்மாதிரிச் செய்தியைக் கேட்டு விட்டு வீட்டில் உட்கார்ந்தது இதுதான் முதல் தடவை. இந்த எண்பது வருஷ காலத்து வாழ்க்கையில் அவன் 'பாம்பு கடித்துவிட்டது' என்ற செய்தி வந்தால் ஓடாத நாளேகிடையாது. ஆனுல் இன்ருே? செய்தி கேட்ட பின்னும் அவன் தூங்கப் போய்க் கொண்டிருந்தான்!

கிழவன் சிம்னியை அணைத்தான். சிறிது நேரம் நின்முன்; பிறகு உட்கார்ந்தான்; கடைசியில் படுத்துக் கொண்டான். ஆனுல் அந்தச் செய்தி அவனுடைய உள்ளத்தைச் சுமைபோல அழுத்தியது. ஏதோ விவரிக்க இயலாத ஒரு வேதனை அவனுள்ளத்தை விட்டை விட்டு வெளியேறத் தூண்டிக் கொண்டிருந்தது.

கிழவி சிறிது நேரத்துக் கெல்லாம் குரட்டைவிட ஆரம்பித்தாள்.

கிழவன் எழுந்து தன் மூன்றுகோலை எடுத்துக் கொண்டு மெதுவாகக் கதவைத் திறந்தான்.

கிழவி விழித்துக் கொண்டு, "எங்கே போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

"எங்கும் இல்லை, இன்னும் இரவு எத்தனை நேரம் இருக்கிறது என்று பார்த்து வருகிறேன்" என்முன் கிழவன்.

"இன்னும் பொழுது விடிய ரொம்ப நேரம் இருக்கிறது, தூங்குங்கள்."

"தூக்கம் வரவில்லையே!"

"தூக்கம் என் வரப்போகிறது? மனது தான் டாக்டர் வீட்டுக்குப் போய் விட்டதே!"

"டாக்டர் எனக்கு என்ன நன்மை செய்து விட்டார்? நான் எதற்காக அவர் வீட்டுக்குப் போக வேண்டும்? அவரே வந்து என் காலில் விழுந்தால் கூட நான்

போக மாட்டேன். நான் ஒன்றும் மூளை கெட்டவன் இல்லை. எனக்குக் கெடுதல் செய்தவனுக்கு நான் நன்மை செய்வேனா? அவ்வளவு பித்துப் பிடித்துப் போகவில்லை எனக்கு!'' என்றான் கிழவன்.

கிழவி மறுபடியும் தூங்கிவிட்டாள். கிழவன் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு வந்து மறுபடியும் உட்கார்ந்தான்.

சாவை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் வாலிபனின் மீது மனம் லயித்திருந்தது. அவன் தாமதிக்கும் ஒவ்வொரு நிமிஷமும் அந்த வாலிபனை மரணத்தின் அருகில் அல்லவா இழுத்துச் சென்று கொண்டிருந்தது!

அவன் மறுபடியும் எழுந்து கதவைத் திறந்தான். கிழவி கதவு திறக்கும் சப்தம் கேட்டு விழித்துக் கொண்டு விடாமல் இருக்க வேண்டுமே என்ற கவலையுடன் மிகவும் மெதுவாகத் திறந்து கொண்டு வெளியே வந்தான்.

வழியில் ''பாவம்! டாக்டர் மருதநாயகத்தின் குடும்பம் குட்டிச்சுவராகி விட்டது! இருந்த ஒரே ஒரு பிள்ளையும் பாம்பு கடித்துப் போய்விட்டான்'' என்று இருவர் பேசிக்கொண்டே வந்து கொண்டிருந்தனர்.

அந்தச் சொற்களைக் கேட்டதுதான் தாமதம், கிழவனின் நடை இன்னும் வேகம் கொடுத்தது. தலை கனத்தது, அவன் நடந்த வேகத்தில் குப்புற விழுந்து விடுவானோ என்று கூடத் தோன்றிற்று. களைப்போ தாங்கவில்லை. மூச்சைப் பிடித்துக் கொண்டு, தன் வேகம் கொண்ட மட்டில் அவன் நடந்தான். பத்து நிமிஷத்துக்கெல்லாம் டாக்டர் மருதநாயகத்தின் வீடு சமீபித்தது. மின்சார விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. ஆனால் நிசப்தமாக இருந்தது. அழுகைச் சப்தம் கூட வரவில்லை. கிழவனின் மார்பு 'பட பட' வென்று அடித்துக் கொண்டது. தான் வந்து சேருவதற்கு நேரம் ஆகியிருக்குமோ?

ஓட்டமாக ஓடி வந்தான் அவன். தனது ஆயுளில் அவன் இவ்வளவு வேகமாக ஓடியதில்லை. பின்னால் மரணம்தான் அவனைத் துரத்திக் கொண்டு ஓடி வருகிறதோ என்று தோன்றிற்று.

4

இரண்டு மணி அடித்து விட்டது. கிழவன் போய்க் கதவைத் தட்டினான். டாக்டர் யாராவது நோயாளி வந்திருப்பான் என்றெண்ணினார். வேறு நாளாயிருந்தால் அவனை அதட்டி விரட்டியிருப்பார். ஆனால் இன்று வெளியே வந்து பார்த்தார். உடலக் குறுகிப் போன, கன்னங்களும் கதுப்பும் ஒட்டிப்போன கிழவன் ஒருவன் நின்று கொண்டிருந்தான். புருவ மயிர்கள் கூட நரைத்திருந்தன. தடியூன்றிய வண்ணம் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க ஒரு கிழவன் நின்று கொண்டிருந்தான். டாக்டர் அவனைப் பார்த்து, ''அப்பா! இன்று என் வீட்டில் நடக்கத் தகாத காரியம் நடந்து விட்டது. ஆகையால் இன்னும் ஒரு மாத காலம் நான் நோயாளிகளைப் பார்க்க முடியாது'' என்று வினயமாகச் சொன்னார்.

''அந்த விஷயத்தைக் கேள்விப்பட்டுத் தான் வந்திருக்கிறேன், எசமான்! குழந்தையை ஒரு தடவை நான் பார்க்கலாமா! கடவுள் கருணாமூர்த்தி! பிணத்தையும் பிழைக்க வைக்கும் சக்தி அவருக்கு உண்டு. ஒரு வேளை உங்கள் குழந்தையையும் அவர் காப்பாற்றலாம்'' என்றான் கிழவன்.

டாக்டருக்கு நம்பிக்கை ஏற்பட்டால் தானே? கிழவனுக்கு இரங்கி அவனை உள்ளே அழைத்துச் சென்றார். கிழவன் பிணத்தை ஒரு கணம் உற்றுக் கவனித்தான். பிறகு புன்முறுவலுடன் ''இன்னும் காரியம் கெட்டு விடவில்லை. கடவுள் கண் திறந்தால் உங்கள் குழந்தையும் அரை மணிக்குள் கண் திறந்து விடுவான். வீணில் மனதை அலட்டிக் கொள்ளாதீர்கள். ஆட்களைத் தண்ணீர் நிரப்பிவரச் சொல்லுங்கள்'' என்றான்.

ஆட்கள் குடம் குடமாகத் தண்ணீர் நிரப்பி வந்து கைலாசத்தைக் குளிப்பாட்டினார்கள். குழாய் நின்று விட்டது. ஆட்களும் அதிகமில்லை. ஆகவே வந்திருந்தவர்களில் அநேகர் கொல்லைக் கிணற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதில் ஆட்களுக்கு ஒத்தாசை செய்தனர். மிருணாளினியும் குடம் குடமாகத் தண்ணீர் கொண்டு வந்தாள். கிழவன் இலேசாகச் சிரித்துக் கொண்டே மந்திரித்துக் கொண்டிருந்தான். அவன் சிரிப்பதைப் பார்த்தால் வெற்றி அவன் முன் கைகட்டிக் கொண்டு நிற்கிறதோ என்று தோன்றிற்று. ஒரு தடவை மந்திரம் ஜபித்து முடிந்ததும் கிழவன் ஒரு வேரைக் கைலாசத்தின் மூக்குக் கருகில் கொண்டு போய் நுகர வைத்தான். இம்மாதிரி எத்தனை தடவை கிழவன் மந்திரம் ஜபித்தானோ? எத்தனை குடம் ஜலத்தினால் கைலாசம் குளிப்பாட்டப் பட்டானோ தெரியாது. கடைசியில் உஷா தேவி தன்

இவர்த கண்களைத் திறப்பதற்கும், கைலாசம் தன் இவர்த கண்களைத் திறப்பதற்கும் சரியாயிருந்தது. அடுத்த நிமிஷம் அவன் சோம்பல் முறித்துவிட்டுக் குடிக்கத் தண்ணீரும் கேட்டான். டாக்டர், டாக்டரின் மனைவி, மிருணாளினி மூவரும் கிழவனை நன்றி ததும்பும் கண்களுடன் பார்த்தார்கள்.

ஒரு நொடியில் நாற்புறமும் செய்தி பரவியது. நண்பர்கள் மகிழ்ச்சியைத் தெரிவிப்பதற்காகக் கூடினர். டாக்டர் மிகவும் சிரத்தையுடன் எல்லோருடைய முன்னிலையிலும் கிழவனைப் பற்றிப் புகழ்ந்தார். நண்பர்களனைவரும் கிழவனைக் காண விரும்பினர். ஆனால் உள்ளே போய்ப் பார்த்தால் கிழவனைக் காணோம்! "இப்பொழுதுதானே இங்கே உட்கார்ந்திருந்தார்!" என்று வேலைக்காரர்கள் சொன்னார்கள். "நாங்கள் வெற்றிலைப் பாக்குக் கொண்டு போய் வைத்தோம் அவர் அதைத் தொடக்கூட இல்லை. தான் கொண்டு வந்ததைத்தான் போட்டுக் கொண்டிருந்தார்" என்றார்கள் வேறு சிலர். கிழவனைத் தேடத் தலைப்பட்டனர் ஆட்கள்.

வந்திருந்தவர்கள் அனைவரும் சென்றதும் டாக்டர் தம் மனைவியைப் பார்த்து, "கிழவன் எங்கே போனானோ, தெரியவில்லையே! நம் வீட்டு வெற்றிலைப் பாக்கைக் கூட அல்லவா அவன் தொடவில்லை?" என்றார்.

"நான் நிறையப் பணம் கொடுக்க வேண்டும் என்றெண்ணிக் கொண்டிருந்தேன்!" என்றாள் அவர் மனைவி.

"நேற்று இராத்திரி எனக்குச் சரியாக அடையாளம் புரியவில்லை. சற்று நேரம் முன்பு தான் புரிந்தது. ஒரு தடவை இந்தக் கிழவன் ஒரு நோயாளியை அழைத்து வந்தான். நான் விளையாடப் போய்க் கொண்டிருந்தேன். நோயாளியைப் பார்க்க முடியாது என்று மறுத்து விட்டேன். இன்று அதை நினைத்தாலே எனக்கு மிகவும் வருத்தமாயிருக்கிறது. எப்படியாவது அவனைத் தேடிக் கண்டு பிடித்து, அவன் கால்களில் விழுந்து என் குற்றத்தை மன்னிக்குமாறு சொல்ல வேண்டும். அவன் ஒரு தம்பிடிகூட வாங்க மாட்டான். எனக்கு நன்றாகத் தெரியும். அவனுடைய வாழ்க்கை எனக்கு ஒரு படிப்பினை. அதை நான் என் ஆயுள் முழுதும் மறக்க மாட்டேன். அவன் மாதிரி உயர்ந்த மனிதன் கிடைப்பது துர்லபம்!" என்று நெகிழ்ந்த உள்ளத்துடன் சொன்னார் டாக்டர் மருதநாயகம்.

[ஸ்ரீ பிரேம்சந்த் எழுதிய கதையைத் தழுவியது].

வட்ட மேஜை

காட்பாடி
21—8—48

தமிழ் வாழ்க!

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

சமீபத்தில், பெங்களூரிலுள்ள என் நண்பர் ஒருவர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். பிழைப்பின் பொருட்டு அவர் அங்கு வசிக்கிறார். அவருடைய ஏழு வயதுத் தம்பியுடன் நான் பேசிக்கொண்டிருந்தபோது அவர் கன்னடம் கலந்த கொச்சைத் தமிழில் பேசினார். காரணம், முதல் வகுப்பிலிருந்து கன்னடம் படிப்பதே யாகும்.

இது சம்பந்தமாக அந் நண்பரிடம் விசாரித்ததில், தம் தம்பியைக் கன்னடம் படிக்க விட்டிருப்பது தமக்குச் சிறிதும் பிடிக்கவில்லை என்றார். உத்தியோகம், வியாபாரம் இவை பொருட்டு—அங்கு வசிக்கும் அனேக தமிழர்களும் வேறு வழியின்றித் தம் பிள்ளைகளைக் கன்னடப் பள்ளிகளில் சேர்க்கின்றனர் என்றும் கூறி வருத்தப்பட்டார்.

கன்னடம், தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளுக்குத் தமிழ் நாட்டுப் பள்ளிகளில் கொடுத்திருக்கும் அளவு சலுகை, தமிழ் மொழிக்கு அவ்விடங்களில் கிடையாதாம். தம் மொழிகளுக்குத் தமிழ்ப் பள்ளிகளில் அதிகச் சலுகை வேண்டும் என்று கூச்சலிடுவோர், தமிழை எந்த அளவில் மதித்துக் கௌரவிக்கின்றனர் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

எனவே, நம் கல்வி மந்திரி அவர்கள், மைசூர், திருவாங்கூர் சமஸ்தானங்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி அவ்விடங்களில் வாழும் தமிழர்களின் பிள்ளைகள் தம் தாய் மொழியைக் கற்றுத் தேற வழி செய்வாரா?

கே. எஸ். ராஜ்.

மதுரை,
23—8—48

'கோர்ட்டு' விஷயம்

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

வாதி, பிரதிவாதிகளின் வழக்கை ஆராய்ந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்குவதற்கென்றே கோர்ட்டு ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இந்த மாகாணத்தில் நியாய ஸ்தலம் சம்பந்தப்பட்ட மட்டில் காணப்படும் ஊழல்கள் கணக்கிலடங்காது. காலா காலத்தில் கவனிக்கப்படவேண்டிய 'ஊதாரி வழக்குகள்' வருஷக் கணக்காக நீடிக்கப் படுகின்றன. அடிக்கடி 'கேஸ்' வாய்தா போட்டுத் தள்ளி வைக்கப்படுகிறது. குற்றம் சாட்டப்பட்டவர் வெளியூர்க்காரரா யிருந்து புறப்பட்டு, கோர்ட்டுக்கு வந்து சேருவதில் கால் மணி அல்லது அரை மணி நேரம் கால தாமதம் ஆகிவிட்டால், 'ஆஜராகவில்லை' என்ற காரணத்தால் கேஸ் வாய்தா போடப்படுகிறது. கனம் நீதிபதி தினந்தோறும் காலதாமதம் செய்து வந்தாலும் ஒருவரும் கேட்கக் கூடாது! இருதரப்பாரும் வந்து இன்றைய தினம் வழக்கு விசாரணைக்கு வரும் என்று நம்பினாலோ, ஏதாவது ஒரு காரணத்தை முன்னிட்டு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டு விடும். அதிலும் 'போலீஸ்' சம்பந்தப்பட்டு, நடக்கும் கேஸாக இருந்தால் கேட்க வேண்டியதில்லை. சப் இன்ஸ்பெக்டர் வந்திருக்கமாட்டார். விசாரணைக்கு வரவேண்டிய கொலை வழக்குகள் பல இருக்கும். இத்தியாதி காரணங்களினால் வாய்தா! வாதியோ, பிரதிவாதியோ உள்ளூர்வாசியா யிருந்தால் பரவாயில்லை. அயலூர்வாசி, அதிலும் ஏழை. அடிக்கடி வாய்தா என்றால் அவன் பணத்திற்கு எங்கே போவது? இதை ஏன் நீதி மன்றத்தார் அறியக் கூடவில்லை? காலை பதினொரு மணி முதல் காத்துக் கிடந்து மாலை ஐந்தரை மணிக்கு 'நாளையதினம் வாய்தா' என்றால் அந்த ஏழையின் மனம் என்ன பாடுபடும்? அதுவும் 'மறுதினமும்' விசாரணை நடக்காமல் ஒரு வாரம் தள்ளி வாய்தா என்றால் அவன் என்ன செய்வான்? 'கோர்ட்'டைப் பொறுத்த வரையில் இவ்விதம் என்றால் அதில் வேலை செய்யும் குட்டி குமாஸ்தாக்களின் 'நைஜாம் தர்பாரும்' பியூன்களின் 'மிரட்டி வாங்கும்' கன்றாவியும் சொல்லத் தரமன்று. கோர்ட்டுக்குப் பக்கத்தில் குடிக்கத் 'தண்ணீர்க் குழாய்' இருக்காது. தாகம் எடுத்தால் 'கள்'தான் வாங்கிக் குடிக்கவேண்டும்! இதுபோன்ற குறைகள் எத்தனையோ! இவற்றையெல்லாம் சர்க்கார் கவனிக்குமா?

பாலு.

குளித்தலை
21—8—48

புது யோசனை

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு,

நேற்று ஒரு காப்பி ஹோட்டலுக்குச் சென்றிருந்தேன். நான் நுழைந்த நேரம் மாலையாகையால் கூட்டம் அதிகம். அதனால் கடையில் இருந்த டம்ளர்கள், டவராக்கள் விநியோகத்திற்குச் சென்றிருந்தன. நான் சிறிதுநேரம் டவரா டம்ளருக்காகக் காக்க வேண்டி யிருந்தது. என் பார்வை எதிரில் இருந்தவர்மீது யதேச்சையாக விழுந்தது. நான் அவரை அடிக்கடி பார்த்திருக்கிறேன். க்ஷயரோக நோயால் அவதிப்படும் ஓர் ஆத்மா என்பதையும் அறிவேன். அப்போதுதான் அவர் காப்பி குடித்து எழுந்தார். எங்கே எனக்கு அவர் உபயோகித்த டவரா, டம்ளர்களில் காப்பி வந்துவிடுமோ என்று நான் பயந்து கொண்டிருந்தபோது வேலையாள் 'வீறுவீறு'வென்று அதே டம்ளரை எடுத்து ஏற்கனவே தண்ணீர் நிரம்பிக் கிடக்கும் தொட்டியில் ஓர் அமுக்கு அமுக்கிவிட்டு மீண்டும் விநியோகத்திற்கு அனுப்பி வைத்தான். கடைசியில் நான் பயந்தபடியே ஆயிற்று! அதே டவரா டம்ளரிலேதான் எனக்குக் காப்பி வழங்கப்பட்டது. என்ன செய்வது? வாய் அடைத்து மௌனமாகக் காப்பியை அருந்திவிட்டு காசைக் கொடுத்து விட்டு என் விதியை நொந்துகொண்டு வெளியேறினேன். இம்மாதிரியான சம்பவங்கள் பல வேறு இடங்களில் நடைபெறுதல் சகஜமாகி

விட்டது. இதனால் பாதிக்கப்படுபவர்களும் ஆயிரக் கணக்காகப் பெருகி விட்டனர். தொத்து நோய் எளிதில் பரவக் காப்பிக் கிளப்புகள் ஓர் சாதனமாக ஆகிவிட்டன.

ஆனால் வட இந்தியாவிலோ காசி, கயா, பாட்னா போன்ற இடங்களில் எல்லாம் மிட்டாய்க் கடைகளிலும் பித்தளையால் செய்யப்பட்ட டம்ளர்கள் உபயோகிப்பதில்லை. அதற்குப் பதிலாக மண்ணால் செய்யப்பட்ட டம்ளர்கள் உபயோகிக்கப்படுகின்றன. ஒரு தரம் நாம் தேநீர் வாங்கிக் குடித்தால் நாம் குடித்துவிட்டு அந்த டம்ளரைத் தூக்கி எறிந்து விட வேண்டியதுதான். அவை மீண்டும் உபயோகிக்கப்படுவதில்லை. ஒருவருடைய எச்சம் மற்றவருக்குச் செல்வதில்லை. இது எவ்வளவு அருமையான, துப்புரவான முறை! இம்முறையை இங்கு ஏன் பின்பற்றக் கூடாது? பித்தளை டவரா டம்ளர்களுக்குப் பதிலாக மண்ணால் செய்யப்பட்ட டவரா டம்ளர்களை உபயோகிக்கும்படி ஹோட்டல் தொழிலாளர் சங்கத்தை நான் வேண்டிக் கொள்கிறேன். நம் சுகாதார மந்திரியும் இது விஷயத்தில் தம் யோசனையையும் ஆதரவையும் அளிப்பார் என்றும் உறுதியுடன் நம்புகிறேன்.

கே. எஸ். பசுபதி.

ஸ்ரீவைகுண்டம்
8—8—48

தெருவில் துப்பாதே!

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

நம்மவரில் அநேகர் ரோட்டில் நடந்து செல்லும்பொழுதே உமிழ்கிறார்கள். சிலவேளை சிலர் அனாவசியமாகவே ரோட்டில் துப்புகிறார்கள். அநேகர் வெற்றிலையில் சுண்ணாம்பைத் தடவிவிட்டு மீதியுள்ள சுண்ணாம்பைப் பக்கத்திலிருக்கும் கம்பத்தின்மீது தடவி விடுகிறார்கள். இதனால் வீதிகளிலுள்ள கம்பங்கள் யாவும் வெள்ளையடிக்கப்பட்டவை போலக் காணப்படுகின்றன. நாட்டுப்புறங்களிலோ என்றால் துப்புபவர்கள் நடந்து செல்லும்பொழுதே அந்தப் பாதையை விட்டுக் கொஞ்சம்கூட விலகாமல் ரோட்டின் நடுவிலேயே வெற்றிலையைச் சவைத்துத் துப்புகிறார்கள். இதனால் யாருக்கு நஷ்டம் என்பதை அவர்கள் சிறிதும் உணருவதில்லை. மேனாடுகளில் ஒருவரும் ரோடுகளில் துப்பவோ, ரோடுகளை அசுத்தப்படுத்தவோ மாட்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் பொதுச் சொத்தைத் தம் சொத்தாக மதிக்கின்றனர்; ஆனால் நம் நாட்டிலோ ஒவ்வொருவரும் பொதுச் சொத்துக்களை யாருக்கும் சொந்தமற்ற சொத்தாகவே மதிக்கிறார்கள். இவ்வாறு பொதுச் சொத்துக்களை நாம் அசுத்தப்படுத்துவதன் மூலம் நமக்கு மிகவும் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. ஆனாலும் நாம் அவைகளைப் பற்றி அதிகம் சிந்திப்பதில்லை. இந்தக் கொடுமை என்றுதான் ஒழியுமோ?

கே. நீலகண்டன்.

சென்னை
12—8—48.

ரேடியோ மாற்றம்

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

நான் மாலைவேளையிலே ரேடியோ கேட்கச் சென்னை ஹைகோர்ட் கடற்கரைக்குச் செல்வது வழக்கம். ரேடியோ கேட்கும் இடத்துக்கு எதிர்ப்புறத்திலே 'லெவல் கிராஸிங்' ஒன்று இருக்கிறது. அங்கு போக்குவரத்தினால் அதிக இடையூறு ஏற்படுவது சாதாரணம். அந்த இடையூறான இடத்தில் நடு ரோட்டிற்கு அருகிலுள்ள பிளாட்பாரத்தில்தான் ரேடியோ அமைக்கப்பட்டிருக்கிறது. ரேடியோவை கேட்பதற்காக அங்கே ஏராளமான ஆண்களும், பெண்களும், குழந்தைகளுடன் கூடிவிடுகிறார்கள். பிளாட்பாரத்தில் ரேடியோ வைத்திருப்பதால் உட்கார்ந்து சற்று அமைதியாக ரேடியோ கேட்க எவ்விதமான வசதியும் இல்லை. எனவே ஜனங்கள் வசதியின்மையைக் கருதி மணற்பாங்கான இடத்திற்குச் சென்று உட்கார்ந்து விடுகிறார்கள். அவ்விடத்தில் ரேடியோவின் ஒலி கேட்பதில்லை. ஆகையால் யுத்தத்துக்கு முன்பு இருந்த அதே இடத்தில் சமுத்திரக் கரையோரமாய் ரேடியோ அமைத்தால் நலமாய் இருக்கும்.

பொ. நாகராஜன்.

மதுரை
19—8—48

அசிரத்தை நீங்குமா?

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

நமது மாகாணத்தில் சிற்சில முனிசிபாலிட்டிகள் பொது ஜனங்களின் சௌகரியத்திற்காக மணிக்கூண்டுகள் கட்டியிருக்கிறார்கள். அவை நல்ல நிலைமையில் சரியான மணி காட்டிக்கொண்டிருந்தன. அவை திடீரென்று "ஸ்ட்ரைக்" செய்ய ஆரம்பித்துவிட்டன. சில கடிகாரங்கள் வருடக் கணக்காகத் தொடர்ந்து ஸ்டிரைக் செய்கின்றன.

ஸ்தலஸ்தாபன அதிகாரிகளுக்கு எழுதினால் 'அது நமது டிபார்ட்மெண்ட் இல்லை' யென்று சும்மா இருந்துவிடுகிறார்கள். இந்த அசிரத்தை நீங்குமா?

பு. வி. நம்புசாமி.

அவினாசி
18—8—48

சர்க்கார் கவனிக்குமா?

"கல்கி" ஆசிரியர் அவர்களுக்கு.

1946-ம் வருடம் அக்டோபர் மாதம் 1-ந் தேதி முதல் கோயமுத்தூர் ஜில்லா உள்பட எட்டு ஜில்லாக்களில் சென்னை சர்க்கார் மது விலக்கை அமுலுக்குக் கொண்டு வந்தனர். அதன் காரணமாய் ஆயிரக்கணக்கான குடும்பங்களில் தினசரி நடந்து வந்த மல்யுத்தங்கள் நின்று சமாதானம் நிலவியிருக்கிறது. ஆனால், மது இறக்கிக்கொண்டிருந்த தொழிலாளர்கள் எவ்வித வேலையுமில்லாது திண்டாடுகிறார்கள். அவினாசிக்குச் சமீபத்திலிருக்கும் ஆட்டையாம்பாளையம் என்னும் ஊரில் மாத்திரம் சுமார் 150 குடும்பங்களும், அவினாசித் தாலுக்கா முழுவதும் சுமார் 1000 குடும்பங்களும் இன்று வேலையின்றித் தவிப்பதுடன், கடன் பட்டும் பெருங் கஷ்டத்திற்கும் உள்ளாகியிருக்கின்றனர். இது பற்றி மந்திரி சபைக்குத் தெரியப்படுத்தியும் யாதொரு விமோசனமும் ஏற்படவில்லை. சட்டசபையில் எட்டு மாதங்களுக்கு முன் நடந்த விவாதத்தின்போது கவனிப்பதாய் மந்திரிகள் சொன்னார்கள். ஆனால் இதுவரை யாதொரு நடவடிக்கையும் மந்திரிமார்கள் எடுக்கவில்லை. மேற்படி தொழிலாளர் குடும்பங்களைச் சர்க்கார் உடனே காப்பாற்றவேண்டும்.

கருப்புச்சாமி.

இந்த இதழில் வெளியாகி யிருக்கும் வட்ட மேஜைக் கடிதங்களில் காட்பாடி கே. எஸ். ராஜு அவர்கள் எழுதி யிருக்கும் கடிதத்துக்கு ரூ. 25 பரிசளிக்கப்பட்டது.



லிப்டன்ஸ்

என்றால்

முதல்தரமான டீ



1½ அணாவில்
உங்கள்
வலியிலிருந்தும்
ஜலதோஷத்திலிருந்தும்
சுகம்பெறலாம்
'ஆஸ்ப்ரோவும்'
இயற்கையும்
உங்களைக்
கைவிடமாட்டா
3 வில்லைகள் 1½ அணா
30 வில்லைகள் 15 அணா
உங்களுக்கு இதைப் படிக்க முடிகிறதல்லவா-
படிக்க முடியாதவர்களுக்கு ஆஸ்ப்ரோவைப்பற்றி எடுத்துச் சொல்லி உதவிபுரியுங்கள்.
அனுபானம்:-
1-3 வில்லைகள்
ASPRO
நிற்பயம் - நிச்சயம் - நற்பலன்

No 2



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras

கல்கி



KALKI செப்டம்பர். 5 ,1948 4 அணா

REGD. NO. M. 4392



கல்கத்தாவிற்கு விநியோகஸ்தர்: ஸ்ரீ S. N. ராவ், 81 - நேதாஜி ரோடு

பம்பாய் ஆபீஸ்: 142, ஓல்டு மோடி ஸ்ட்ரீட், போர்ட்